# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

## அற இலக்கியம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி– 627 012.

# அற இலக்கியம்

| Learning Objectives: பாடநோக்கங்கள் |
| --- |
| • தமிழின்அறஇலக்கியவரலாற்றைஅறிதல்.<br>• பதினெண்கீழ்க்கணக்கில்இடம்பெற்றுள்ளஅறஇலக்கியங்களைஆழ்ந்துகற்றல்.<br>• திருக்குறள், நாலடியார்ஆகியவற்றில்சிறப்புப்பயிற்சிபெறுதல்.<br>• பதினெண்கீழ்க்கணக்கில்இடம்பெற்றுள்ளபிறஅறஇலக்கியங்களைப்பயிலல்.<br>• அறஇலக்கியங்கள்முன்வைக்கும்அறக்கருத்துகள், அறஇலக்கியங்களின்இலக்கியமதிப்புகள், இலக்கியஅழகுகள், யாப்புவடிவம், அறஇலக்கியப்புலவர்களின்தனித்திறன்முதலியவற்றில்சிறந்தபுலமைபெறுதல். |

**அலகு - 1**

**திருக்குறள் - நாலடியார் - பழமொழி - முதுமொழிக் காஞ்சி**

1. திருக்குறள் இல்லறவியல் (5 - 14) இல்வாழ்க்கை முதல் ஒழுக்கமுடைமை வரை பத்து அதிகாரங்கள்.
2. நாலடியார் துறவறவியல் (1 - 4) செல்வம் நிலையாமை முதல் அறன் வலியுறுத்தல் வரை நான்கு அதிகாரங்கள்.
3. பழமொழி (1 - 10) அரிது அவத்து முதல் பெரிய நாட்டார்க்கும் வரை
4. முதுமொழிக் காஞ்சி (1 - 2) சிறந்த பத்து அறிவுப்பத்து

**அலகு - 2**

**இன்னா நாற்பது - இனியவை நாற்பது - ஆசாரக்கோவை - நான்மணிக்கடிகை**

1. இன்னா நாற்பது (1 - 10) பந்தம் இல்லா முதல் பொருள் உணர்வார் வரை
2. இனியவை நாற்பது (1 - 10) பிச்சைப்புக்கு முதல் கடம் உண்டு வரை

3. ஆசாரக்கோவை (1 - 10) நன்றி அறிதல் முதல் தேவர் வழிபாடு வரை

4. நான்மணிக்கடிகை (1 - 10) படியை மடியகத் முதல் நிலத்துக்கு வரை

**அலகு - 3**

**திரிகடும் - சிறுபஞ்சமூலம் - ஏலாதி**

1. திரிகடுகம் (1 - 10) அருந்ததி கற்பினார் முதல் கணக்காயர் வரை.
2. சிறுபஞ்சமூலம் (1 - 10) ஒத்த ஒழுக்கம் முதல் சிலம்பிக்கு வரை
3. ஏலாதி (1 - 10) சென்ற புகழ் முதல் செங்கோலான் வரை.

**அலகு - 4**

**மூதுரை - நல்வழி - வெற்றிவேற்கை**

1. மூதுரை (1 - 10) வாக்குண்டாம் முதல் நெல்லுக்கு இறைத்த நீா் வரை.
2. நல்வழி (1 - 10) பாலும் தெளிதேனும் முதல் ஆண்டாண்டு தோறும் வரை.
3. வெற்றிவேற்கை (1 - 23) எழுத்தறிவித்தவன் முதல் கொண்டோர் எல்லாம் வரை.

**அலகு - 5**

**உலக நீதி - நீதிநெறி விளக்கம் - அறநெறிச் சாரம்**

1. உலக நீதி (1 - 5) ஓதாமல் ஒரு நாளும் முதல் வாழாமல் பெண்ணை வரை.
2. நீதிநெறி விளக்கம் (1 - 10) நீரில் குமிழி முதல் எனைத்துணைய வரை.
3. அறநெறிச் சாரம் (1 - 10) தாவின்றி எப்பொழுதும் முதல் புல்ல உரைத்தல் வரை.

## அலகு - 1

## திருக்கறள்

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவரைப் பொய்யில் புலவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், நாயனார், தேவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதகர், பெருநாவலர் போன்ற வேறு பெயர்களாலும் அழைப்படுகிறார். பைபிள், குரான் ஆகிய நுல்களுக்கு இணையாக மிக அதிகமாக மக்களால் விரும்பிக் கற்கப்படக்கூடிய நீதிநூல் இதுவேயாகும்.அதனால்தான் மனிதனின் பாணர் திருவள்ளவர் என டாக்டர் ஜி.யு.போப் குறிப்பிட்டார். இலத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு, டச்சு, பின்னிஷ், போலிஷ், இரசியன், சீனம், பிஜி, மலாய், பர்மியம் ஆகிய பிறநாட்டு மொழிகளிலும், வடமொழி, உருது, மராத்தி, வங்காலி, இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய இந்திய மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

### இல்லறவியல்

### 1. இல் வாழ்க்கை

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை. (41)**

இல்லற நெறியில் வாழ்பவன் தனக்கு இயல்பாக நெருக்கமுள்ள தன் குடும்பத்தார், சுற்றத்தார், நண்பர் எனும் மூவருக்கும் நல்வழித் துணைவன் ஆவான்.

**துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்**

**இல்வாழ்வான் என்பான் துணை. (42)**

இல்லறத்தைத் துறந்த துறவிகள், பொருள் வசதியற்ற வறியவர்கள், பேணுதல் அற்றவர்கள் ஆகியோருக்கு இல்லறத்தான் துணை ஆவான்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்கு**

**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (43)**

தன் மூதாதையர், வழிபடு தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தன் குடும்பம் என வரும் ஐவகையினருக்கும் உரியநெறியில் கடமைகளை ஆற்றுதல் முதன்மையானது.

**பழி அஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை**

**வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல். (44)**

(தன்னலத்தான் என்னும்) பழி நேராது காத்து, தொகுத்த பொருளைப் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்பவனது வாழ்க்கை நெறி ஒருநாளும் வளத்தில் குன்றாது.

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது. (45)**

இல்வாழ்வில் இருப்பவன் பிறரிடம் அன்பு பாராட்டுவதே சீரிய பண்பு. அறச் செயல் புரிவதே அவ்வாழ்வின் பயன்.

**அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்**

**போஒய்ப் பெறுவது எவன்.       (46)**

அறநெறி நின்று இல்லறம் மேற்கொள்வதைக் காட்டிலும் மேலானது ஒன்றும் இல்லை. துறவு முதலிய பிற வாழ்க்கை முறையில் இதனினும் மேலாய் என்ன இருக்கிறது?

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**

**முயல்வாருள் எல்லாம் தலை.       (47)**

முறையான குடும்ப வாழ்க்கை நடத்துபவன், தம் வாழ்வை முன்னேற்ற முயல்பவர்கள் எல்லாருக்கும் மேம்பட்டவன் ஆவான்.

**ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை**

**நோற்பாரின் நோன்மை உடைத்து.       (48)**

தன்னை அண்டி இருப்போரை நன்னெறிப்படுத்தி, அறம் தவறாமல் நடத்தப்படும் மனையறம், தவம் புரிவோரின் ஆற்றலை விட வலிமை மிக்கது.

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அ∴தும்**

**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.       (49)**

அறம் என்று பாராட்டி உரைக்கத்தக்கது இல்வாழ்க்கை தான். அவ்வில்லறமும் குற்றம் காணமுடியாதபடி அமையுமாயின் மேலும் சிறப்பாகும்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும்.       (50)**

பண்பும் பயனும் மிக்க இல்லறத்தை நடத்துபவன் எல்லாராலும் போற்றப்பட்டு உயர்ந்த தெய்வநிலைக்கு உரியவனாக மதிக்கப் படுவான்.

## 2. வாழ்க்கைத் துணைநலம்

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (51)**

மனையறத்துக்கு ஏற்ற மாட்சிகள் கொண்டு, தன் கணவனுடைய அனைத்து வளங்களுக்கும் தக்க ஆதாரம் ஆகின்றவள் வாழ்க்கைத்துணை.

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**

**எனைமாட்சித் தாயினும் இல். (52)**

குடும்பத்துக்கு ஏற்ற பண்புநலன்கள் மனைவியிடம் இல்லாது போனால், அக்குடும்பத்தின் பிற பெருமைகளால் எவ்விதப் பயனும் இல்லை.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**

**இல்லவள் மாணாக் கடை. (53)**

மனைத்தலைவி மாண்பு மிக்கவளாக இருந்தால் அவ் வில்லத்தில் இல்லாதது எதுவும் இல்லை. அவள் பண்பில் குன்றி இருந்தால் அங்கு மதிப்புள்ளது எதுவும் இல்லை.

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மை உண்டாகப் பெறின். (54)**

கற்பு என்னும் மனஉறுதி வாய்க்கப் பெற்றிருந்தால் உலகத்தில் யாரும், எதுவும் பெண்ணின் பெருமைக்கு நிகராக முடியாது.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை. (55)**

தெய்வங்களை வணங்காமல் கணவனை வணங்கும் இயல்புடையவள் பெருமை வியக்கத்தக்கது. அவள் ஆணையிட்டுப் “பெய்“ என்றால் மழைகூடப் பெய்யுமாமே!

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகைசான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண். (56)**

தன்மனநிறையைக் காப்பாற்றி, தன் கணவனை நிலை தடுமாறாமல் பாதுகாத்து, பிறர் பாராட்டையும் பெறும் துடிப்பு மிக்கவளே பெண்.

**சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை. (57)**

வீட்டுச் சிறையில் பெண்களை வைத்துக் காப்பதால் என்ன பயன்? பெண்மையைத் தங்கள் மனதுக்குள் பெண்களே பேணிக் காப்பதுதான் மேன்மைமிக்கது.

**பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு. (58)**

மாண்புமிகு கணவரைப் பெண்கள் பெறுவார்களானால், தேவர் உலகிலும் பெரும் சிறப்புக்களை அவர்கள் அடைவார்கள்.

**புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை. (59)**

நற்பண்புகளாலும் செயல்களாலும் புகழார்ந்த நன் மனைவி அமையாதவர்களுக்கு, இகழ்வாகப் பேசுவார் முன் இறுமாந்து நடத்தல் இயலாது.

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு. (60)**

மனைவியின் மாட்சிமைப் பண்பே இல்லறவாழ்வின் அழகு. நன்மக்களைப் பெறுவதே அவ்வாழ்வின் அழகுக்கு அழகு சேர்க்கும் அணிகலன் .

## 3. மக்கட்பேறு

**பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**

**மக்கட்பேறு அல்ல பிற. (61)**

எமக்குக் தெரிந்தவரை அறிவை அறிந்து மதிக்கும் மக்களைப் பெற்றிருப்பதே பெரும்பேறு. செல்வம் முதலிய வேறு எவையும் அல்ல. (வள்ளுவர்யாம் என்று அழுத்திச் சொல்லும் குறள் மூன்றில் முதலாவது இது.

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**

**பண்புடை மக்கட் பெறின். (62)**

பழிச்சொல்லுக்கு இடம் தராத பண்பிற் சிறந்த மக்களைப் பெற்றால் பல தலைமுறைக்குத் தீமை நெருங்காது.

**தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**

**தம்தம் வினையான் வரும். (63)**

பெற்றோர்க்குச் செல்வம் பிள்ளைகளே. அப்பிள்ளைகளுக்கு உரிய செல்வம் அவர்களின் நற்செயல்களால் தான் உருவாகும்.

**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**

**சிறுகை அளாவிய கூழ். (64)**

தாம் பெற்ற குழந்தைகள் இட்டும் தொட்டும் தம் பிஞ்சுக் கைகளால் அளைந்த உணவு எளியதாயினும், சுவையால் அமுதம் என மகிழ்வர் பெற்றோர்.

**மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்**

**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (65)**

அள்ளி அணைக்குங்கால் குழந்தைகளின் உடல் மெய் சிலிர்க்க வைக்கும். அவர்தம் மழலைச் சொல் செவி குளிர வைக்கும்.

**குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**

**மழலைச் சொல் கேளாதவர். (66)**

பெற்ற குழந்தைகளின் மழலைச் சொற்கள் தரும் பேரின்பம் நுகராதவர்கள்தான் புல்லாங்குழலையும் நல்லிசை யாழையும் இனியதென்று புகழ்வர்.

**தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல். (67)**

எந்த அவைக்களத்திலும் கல்விகேள்விகளால் மக்கள் முந்தி இருக்கும்படி வளர்ப்பதுதான் தந்தை ஆற்றும் தகுதிமிக்க கடமை ஆகும்.

**தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க்கு எல்லாம் இனிது. (68)**

தாய் தந்தையரை விடவும் பிள்ளைகள் அறிவிற் சிறந் தோராகத் திகழ்ந்தால் பெற்றோர் பேரின்பம் கொள்வது இயல்பு

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய். (69)**

தன்மகன் (பொன்னால், பொலிவால் சிறந்தவன் எனப் பேசப் பட்டபோது மகிழாமல்) சான்றோன் எனப் புகழப்படும்போது பெற்ற அன்றினும் பெருமகிழ்ச்சி அடைவாள் (அறிவுமிக்க) தாய்.

**மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை**
**என்நோற்றான் கொல்எனும் சொல். (70)**

‘இவனைத் தன் மகவாகப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ’ என்று பிறர் மெச்ச வாழ்வதே பிள்ளை, தந்தைக்குச் செய்யும் உதவி ஆகும்.

இங்கு மகன் என்பது மகளுக்கும் பொருந்தும். தந்தை என்பது தாய்க்கும் பொருந்தும்.

## 4. அன்புடைமை

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**

**புன்கண்நீர் பூசல் தரும். 71)**

அன்பு வெள்ளத்தைத் தடுக்க எந்தக் கருவியாலும் முடியாது. அன்பெனும் ஆர்வம் பெருகியவர்கள் கண்களில் அது கண்ணீராய்த் தடையின்றித் தோன்றும்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையர்**

**என்பும் உரியர் பிறர்க்கு. (72)**

எல்லாம் தமக்கு என்று எண்ணுபவர் உள்ளத்தில் அன்பு இராது. அன்பு உடையவர்களோ தம் உடலின் எலும்பையும் பிறருக்குத் தரத் தயங்கமாட்டார்கள்.

**அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு**

**என்போடு இயைந்த தொடர்பு. (73)**

பெறுதற்கரிய உயிரும் உடலும் இசைந்த மனித வாழ்க்கை அன்பு செலுத்தி வாழ்வதற்காகவே என்பது ஆன்றோர் கருத்து. (என்பு உடலைக் குறிக்கும்).

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**

**நண்பென்னும் நாடாச் சிறப்பு. (74)**

அன்பு பிறருடன் பழகும் ஆர்வத்தைத் தரும். அந்த ஆர்வம் நட்பு என்னும் கிடைத்தற்கரிய சிறப்பைப் பெற்றுத்தரும்.

**அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து**

**இன்புற்றார் எய்தும் சிறப்பு. (75)**

இவ்வுலகில் இன்பம் என்னும் சிறப்பை எய்தியவர்கள் யாரென்றால் இல்லறத்தில் அன்புகொண்டு அழகுற வாழ்ந்தவர்களே ஆவர்.

**அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்**

**மறத்திற்கும் அ∴தே துணை. (76)**

அறம் சார்ந்த அமைதிச் செயல்களுக்கே அன்பு துணையாகும் என்போர் அன்பின் இயல்பு அறியார். நாடு, மொழி, கொள்கை காக்கும் போருக்கும் அன்பே துணை.

**என்பி லதனை வெயில்போலக் காயுமே**

**அன்பி லதனை அறம். (77)**

எலும்பு இல்லாத புழுப்போன்ற உயிர்களை வெயில் கொன்றழிக்கும். அன்பு இல்லாத மனிதனை அறம் வென்று தீர்க்கும்.

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**

**வற்றல் மரந்தளிர்த் தற்று. (78)**

அகத்தில் அன்பு என்னும் பசுமை இல்லாத மனித வாழக்கை வறண்ட நிலத்தில் உலர்ந்துபோன மரம் போல் தளிர்விட முடியாதது

**புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை**

**அகத்துறுப்பு அன்பி லவர்க்கு (79)**

அகத்தில் பொருந்திய அன்பு இல்லாதவர்களுக்கு உடலின் புறத்தில் பொருந்திய உறுப்புக்களில் அழகும் ஆற்றலும் இருந்தாலும் பயன் இல்லை.

**அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு. (80)**

அன்பின் நெறி நிற்பவனே உயிர்கொண்ட மனிதன். அன்பு இல்லாதவன் எலும்பும் தோலும் போர்த்த வெறும் உடல் மட்டுமே.

## 5. விருந்தோம்பல்

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**

**வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)**

இல்லற நெறியில் நின்று பொருளைப் போற்றி வாழ்வதன் நோக்கம் யாது? வந்த விருந்தினரை வளமாகக் காத்து உதவி செய்தலே ஆகும்.

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**

**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (82)**

விருந்தினர் வீட்டுக்கு வெளியே காத்திருக்கும்போது, அவரை அழையாது தனித்திருந்து உண்பது தகாது. அது மரணம் தவிர்க்கும் மா மருந்தாயினும் தகாது.

**வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**

**பருவந்து பாழ்படுதல் இன்று. (83)**

வருகின்ற விருந்தினரை நாள்தோறும் பேணிப் போற்றுபவனது வாழ்க்கை வறுமைத் துன்பத்தால் பாழ்பட்டுப் போகாது.

**அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**

**நல்விருந்து ஓம்புவான் இல். (84)**

முகம் மலர்ந்து விருந்தினரைப் போற்றுபவன் இல்லத்தில் செல்வத்திரு வந்து சேர்ந்து இணங்கிக் குடியிருப்பாள்

**வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி**

**மிச்சில் மிசைவான் புலம். (85)**

விருந்தினரை ஊட்டி உணவருந்தி எஞ்சியதைத் தான் உண்பவனின் விளைநிலத்தில் விதையும் இடவேண்டு மோ? அவன் கொடையே கோடியாய் விளையுமே!

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு. (86)**

வந்த விருந்தினரை உபசரித்து வரவிருக்கும் விருந்தினரை எதிர்பார்த்துக் காத்திருப்பவன் வானவர் உலகில் விருந் தாளியாக வரவேற்கப்படுவான்.

**இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**

**துணைத்துணை வேள்விப் பயன். (87)**

விருந்து புறந்தருவதால் விளையும் பயனை இவ்வளவு என்று சொல்லாமல் இப்படிச் சொல்லலாம் - வேள்வி செய்வானேன்? விருந்து செய்தால் போதுமே.

**பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி**

**வேள்வி தலைப்படா தார். (88)**

அடுப்பு நெருப்பேற்றி விருந்தோம்புதலே உண்மை யான வேள்வி. அதைச் செய்ய முடியாதவர்கள் தான் பற்றறுத்து விட்டோம் என்று யாக நெருப்பைப் பற்ற - வைத்துத் துன்புறு வார்கள்.

**உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா**

**மடமை மடவார்கண் உண்டு. (89)**

விருந்தினரைப் பேணாத பேதைமையை என்னவென்று சொல்லுவது? வளமையில் ஏற்பட்ட வறுமை அது. இந்த வறுமை மடமைக்கே சொந்தம்.

**மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**

**நோக்கக் குழையும் விருந்து. (90)**

மெல்லிய அனிச்சமலர் முகர்ந்தால் வாடும். ஆனால் விருந்தினர்களோ கொஞ்சம் முகம் மாறிப் பார்த்தாலே நொந்து போவார்கள்.

## 6. இனியவை கூறல்

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**

**செம்பொருள் கண்டார் வாய்ச் சொல். (91)**

நல்லனவற்றை நாடி உணர்ந்தவர் பேசும் பேச்சில் இனிமை இருக்கும் அன்பின் ஈரம் இருக்கும். வஞ்சகம் மட்டும் இருக்கவே இருக்காது.

**அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து**

**இன்சொல னாகப் பெறின். (92)**

ஒப்பிட்டுப் பார்த்தால் அகமகிழ்ந்து கொடுப்பதை விட, முகம் மலர்ந்து இன்சொல் கூறுவதே மேலானது. ஏனெனில் கொடுப்பதற்கு எல்லை உண்டு.

**முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்**

**இன்சொ லினதே அறம். (93)**

முகமலர்ச்சியோடு இனிமையாய்ப் பார்த்து, மனத்தின் ஆழத்திலிருந்து இன்சொல் மொழிதலே நன்னெறி ஆகும்.

**துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**

**இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. (94)**

எல்லாரிடத்தும் இன்பம் தருகிற நயமான சொற் களைப் பேசுவோருக்கு வருத்தும் வறுமை நேர்வதில்லை.

**பண்புடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு**

**அணியல்ல மற்றுப் பிற. (95)**

பணிவும் இன்சொல்லும் ஒருவனிடம் இணைந்திருப்பது தான் அவனுக்குப் பொலிவூட்டும் அணிகலன் . வேறு எவையும் அல்ல.

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**

**நாடி இனிய சொலின். (96)**

நல்லன விரும்பி நாவில் இன்சொல்லே பேசினால் தீயன தேயும். அறம் வளரும்.

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**

**பண்பின் தலைப்பிரியாச் சொல். (97)**

பயன் நிரம்பியதும் பண்பிலிருந்து சிறிதும் விலகாதது மான இன்சொல் நயமானதாகவும் அமையும். நன்மைக்கும் வித்தாகும்.

**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**

**இம்மையும் இன்பம் தரும். (98)**

இழிவான சிந்தனைகளுக்கு இடம்தராத இனிய சொற்கள் ஒருவன் இங்கு வாழும் காலத்திலும், மறைந்த பின்னும் மகிழ்ச்சி தந்துகொண்டே இருக்கும்.

**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**

**வன்சொல் வழங்கு வது. (99)**

நயமான சொற்கள் நலம் தரக் கண்டவன் இனிமைக்கு அயலான சொற்களைச் சொல்ல எண்ணுவானோ? சொல்லமாட்டான்.

**இனிய உளவாக இன்னாத கூறல்**

**கனியிருப்பக் காய் கவர்ந்தற்று. (100)**

இனிய சொற்கள் பயன்தரக் காத்திருக்கும்போது கொடிய சொற்களை நாடுவது கனிகள் இருக்கையில் காய்களைத் தேடுவதை ஒக்கும்.

## 7. செய்ந்நன்றி அறிதல்

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**

**வானகமும் ஆற்றல் அரிது. (101)**

நாம் ஒன்றும் செய்யாமலிருந்தும் நமக்கு ஒருவர் செய்த உதவிக்கு வானகத்தையும் மண்ணகத்தையும் ஒருசேரத் தந்தாலும் ஈடு ஆகாது.

**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**

**ஞாலத்தின் மாணப் பெரிது (102)**

தக்க நேரத்தில் ஒருவர் செய்த உதவி அளவால் சிறியதாக இருந்தாலும் பரிமாணத்தால் உலகினும் பெரியது.

**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**

**நன்மை கடலின் பெரிது. (103)**

மேல்வரும் பயனை எடை போடாமல் செய்யப்பட்ட உதவியின் மதிப்பைக் கணக்கிட முடியாது. அது விரிவாலும் ஆழத்தாலும் கடலையும் விடப் பெரியது.

**தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக்**

**கொள்வர் பயன்தெரி வார். (104)**

பயன்தெரிந்த பண்பாளர் தமக்குச் செய்யப்பட்ட உதவி தினையளவு சிறியதாயினும் அதனைப் பனையளவு பெரியதாகவே மதிப்பர்.

**உதவி வரைத்தன்று உதவி உதவி**

**செயப்பட்டார் சால்பின் வரைத்து. (105)**

உதவியின் மதிப்பை அதன் அளவைக் கொண்டு தீர் மானிக்க முடியாது. உதவி பெற்றவரின் பெருந் தன்மையே அதனை அளவிடும் கருவி.

**மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க**

**துன்பத்துள் துப்பாயார் நட்பு. (106)**

மனம் தூயார் நட்பை மறக்கலாகாது. அவ்வாறே அல்லற்காலை அருந்துணையானவர் நட்பைத் துறத்தலும் கூடாது. நன்றியின் இலக்கணம் அது.

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**

**விழுமந் துடைத்தவர் நட்பு. (107)**

இடுக்கண் உற்றபோது துடைத்து உதவியவரின் நட்பை ஏழேழு தலைமுறையிலும் நன்றியோடு எண்ணுவர் சான்றோர்.

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**

**அன்றே மறப்பது நன்று. (108)**

ஒருவர்செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல. ஆனால் அவர் செய்த தீமையை அப்போதே மறப்பது நல்லது.

**கொன்றன்ன இன்னா செயினும் அவர் செய்த**

**ஒன்றுநன்று உள்ளக் கெடும். (109)**

நன்று செய்த ஒருவர் பின்பு கொல்வது போன்ற கொடுமை இழைத்தாலும், முன்பு செய்த நன்மையை எண்ணினால் தீமை மறைந்துவிடும்.

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110)**

எத்தகைய அறத்தைச் சிதைத்தாலும் தப்பித்துக் கொள்ள முடியும். செய்த நன்றியை மட்டும் மறந்தால் உய்வுக்கு வாய்ப்பே இல்லை.

## 8. நடுவு நிலைமை

**தகுதி என ஒன்று நன்றே பகுதியால்**

**பாற்பட்டு ஒழுகப் பெறின். (111)**

ஒவ்வொரு பகுதி மக்களிடமும் முறைமை தவறாமல் நடந்து கொள்ளும் தகுதி (நேர்மை) போற்றற்குரியது.

**செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி**

**எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து. (112)**

நடுவுநிலைமை உடையவனின் செல்வமும் சிறப்பும் சேதம் ஏதுமின்றி அவன் வழி வருவோருக்கும் புகழ் அரணாக இருக்கும்.

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**

**அன்றே ஒழிய விடல்.** (113)

நேர்மை தவறுவதால் பெருஞ்செல்வம் என்னும் நன்மை கிடைப்பதாக இருந்தாலும் அச்செல்வத்தை ஏற்கலாகாது.

**தக்கார் தகவிலர் என்பது அவரவர்**

**எச்சத்தாற் காணப் படும்.** (114)

ஒருவர் தகுதி என்னும் நேர்மைக்கு உரியவரா அல்லரா என்பதனை அவருக்கு எஞ்சி நிற்கும் பெருமை அல்லது இகழ்ச்சியால் அறியலாகும்.

**கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்**

**கோடாமை சான்றோர்க் கணி.** (115)

செல்வம் இழத்தலும் ஈட்டலும் உலகில் இயற்கையாக நிகழ்பவை. எனவே நடுநிலை தவறிச் செல்வத்துக்காக ஒரு பக்கம் சாயாது இருப்பதே நல்லோர்க்கு அழகு

**கெடுவல் யான் என்பது அறிக தன் நெஞ்சம்**

**நடுஓரீஇ அல்ல செயின்.** (116)

நெஞ்சம் நேர்மை தவறி முறைகேடாக நடக்கத் துணியுமானால் “அழிவு“ எனக்கு வந்துவிடும் என்று உணர்ந்து கொள்வது நல்லது.

**கெடுவாக வையாது உலகம் நடுவாக**

**நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.** (117)

நேர்மையில் நிலைத்து நிற்பவனுக்கு வீழ்ச்சி ஏற்பட்டாலும் அதனை மக்கள் கேடு என்று இழிவாக எண்ண மாட்டார்கள்.

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**

**கோடாமை சான்றோர்க் கணி. (118)**

இருபக்கமும் சமமாக அமைந்து எடை அளக்கும் தராசுபோல் ஒரு பக்கம் சாயாது நின்று நீதி காத்தல் நல்லோர்க்கு அழகு.

**சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒரு தலையா**

**உட்கோட்டம் இன்மை பெறின். (119)**

மனச் சாய்வுக்கு இடம் தராத உறுதி இருக்குமானால் சொல்லும் தீர்ப்பிலும் குறை நேராது செம்மை உண்டாகும்.

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**

**பிறவும் தமபோல் செயின். (120)**

நடுவு நிலைமை பூண்டு, வாங்கும் பிறர்பொருளையும் விற்கும் தம் பொருள் போலவே மதிக்கப் பழகினால் அதுவே வணிகருக்குப் புகழ் தரும் வாணிகம் ஆகும்.

## 9. அடக்கமுடைமை

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**

**ஆரிருள் உய்த்து விடும் (121)**

(மனம் மொழி மெய்களில் அடக்கம் காத்தால் ஒருவன் தெய்வத்தன்மை பெறுதல் கூடும். அடக்கம் காவாதவன் இருள்கூழ் நிலைக்கு இறையாவான்.

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**

**அதனினூஉங்கு இல்லை உயிர்க்கு (122)**

அடக்கமுடைமையை ஒரு செல்வமாய்ப் போற்றுக. ஏனெனில் மக்களுக்கு அதனைவிடச் சிறந்த இன்னொரு செல்வம் இல்லை.

**செறவறிந்த சீர்மை பயக்கும் அறிவறிந்து**

**ஆற்றின் அடங்கப் பெறின். (123)**

அடக்கமுடைமையின் மெய்த்தன்மையை அறிந்து முறையுடன் நடந்துகொண்டால், அத்திண்மையே சீரும் சிறப்பும் தரும்.

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**

**மலையினும் மாணப் பெரிது. (124)**

எந்த உயர்நிலை எய்தியபோதும் அதனால் மனம் திரிந்து போகாமல் அடக்கம் காப்பவனின் பெருமிதத் தோற்றம் மலையை விடவும் உயர்வு உடையது.

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**

**செல்வர்க்கே செல்வம் தகைத்து (125)**

பணிவுடைமை அனைவருக்கும் நல்லதுதான் ஆயினும் பொருட்செல்வம் படைத்தவர்களுக்கு அது மேலும் ஒரு செல்வமாகும்.

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**

**எழுமையும் ஏமாப் புடைத்து (126)**

ஐந்து உறுப்புக்களையும் ஒரே ஓட்டிற்குள் அடக்குகின்ற ஆமை போல ஐம்பொறிகளையும் அடக்க முடிந்தால் அது பாதுகாப்பாகும்.

**யாகாவா ராயினும் நாகாக்கக் காவாக்கால்**

**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (127)**

எதனைக் காக்க முடியவிட்டாலும் நாவடக்கம் காத்தல் அவசியம் நாகாக்கத் தவறினால் சொற்குற்றம் ஏற்பட்டுத் துன்பம் விளையும்.

**ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**

**நன்றாகா தாகி விடும் (128)**

ஒருவர் பேசும் பேச்சில் ஒரே ஒரு சொல் தீய கருத்துக்குத் துணை போனாலும், அவர் பேச்சின் நலமும் நயமும் பாழாய்ப் போகும்.

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**

**நாவினாற் சுட்ட வடு. (129)**

நெருப்பினால் உடல்மீது பட்ட காயம் உள்ளே ஆறிப் போகும். ஆனால் நாவுரைத்த கடுஞ்சொல் விளைவித்த காயம் உள்ளத்தில ஆறுவதே இல்லை.

**கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி**

**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து (130)**

சினத்தை அடக்குவதற்குப் பழகிப் பணிவாகச் செயல்படுபவன் யாரோ, அவன் இருக்கும் இடத்தைத் தேடி அடைவதற்கு அறம் காலம் பாரத்திருக்கும்.

## 10. ஒழுக்கமுடைமை

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும் (131)**

தொடர்ந்து நன்னெறியில் நடத்தலே ஒழுக்கம். ஒழுக்கம் செம்மையை உருவாக்கும் என்பதால் அதனை உயிரைக் காட்டிலும் உய்ந்ததாகப் போற்றுவர்.

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

**தேரினும் அஃதே துணை (132)**

எத்தனைவருத்தம் ஏற்பட்டாலும் விடாது ஒழுக்கத்தைக் காத்தல் வேண்டும். ஏனெனில் எப்படி ஆராய்ந்தாலும் அதுவே வாழ்க்கையின் அருந்துணை.

**ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்**

**இழிந்த பிறப்பாய் விடும் (133)**

பிறப்பினால் அல்ல - ஒழுக்கத்தில் சிறந்தவனே உயர்குடி ஆவான். ஒழுக்கத்தில் தாழ்ந்தவனே இழிந்த இனம் ஆவான்.

**மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்**

**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (134)**

வேதங்களைப் பார்ப்பான் மறந்துவிட்டால் மறுபடியும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒழுக்கம் கெட்டால் அவன் பிறப்பே நாசமுறும்.

**அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை**

**ஒழுக்க மிலான்கண் உயர்வு (135)**

பொறாமை உடையவன் செல்வ வளம் பெறுவதில்லை (புகழத்தக்க) ஒழுக்கம் இல்லாதவன் தேன்மைகள் அடைவதில்லை

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் உழுக்கத்தின்**

**ஏதம் படுபாக் கறிந்து (136)**

ஒழுக்கம் தவறினால் உருவாகும் துன்பங்கள் என்பதை அறிந்து உள்ளத்தில் உறுதி மிக்கோர் ஒழுக்கத்தை இழக்கத் துணியார்.

**ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்**

**எய்துவர் எய்தாப் பழி (137)**

எய்தற்கரிய மேன்மைகளை ஒழுக்கத்தால் அடைய முடியும். ஆனால் ஒழுக்கம் தவறினால் என்றும் தாங்க முடியாத பழி வருவது உறுதி

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**

**என்றும் இடும்பை தரும். (138)**

நன்மைகள் விளைய நல்லொழுக்கமே விதை ஆகும். தீயொழுக்கமோ துன்பங்களையே தரும் விளை நிலம் ஆகும்.

**ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய**

**வழுக்கியும் வாயால் சொலல் (139)**

ஒழுக்கம் உடையவர்களுக்கு முடியாதது ஒன்று உண்டு தவறிப் போய்க்கூட தீய சொற்களைத் தம் வாயால் சொல்லுதலே அது.

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலா தார் (140)**

உலகத்துச் சான்றோர் சென்ற நெறியில் இணைந்து செல்லாதவர்கள் பலநூல் கற்றிருந்தும் அறிவு இல்லாதவர்களே.

## நாலடியார்

சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு. அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு (401) பாடல்களைக் கொண்டது. இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இதன் ஒவ்வொரு பாட்டிலும் ஒரு

பழமொழி சார்ந்த நீதி கூறப்படுவதால் பழமொழி நானூறு என்ற பெயர் பெற்றுள்ளது. இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு ஆகும். இந்நூலில் 34 தலைப்புகளின் கீழ் பாடல்கள் அமைந்துள்ளன. தமிழினத்தின் செம்மையான நல்வாழ்வுக்கு உதவும் அறிவொளி விளக்கங்களாகப் பழமொழிகள் அமைந்து விளங்குகின்றன. சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஞானத் தெளிவுரைகளாகவும் அவை சுடரிடுகின்றன.

பழமொழிக்கு "முதுமொழி" என்றும் ஒரு பெயர். முதுமொழியின் இலக்கணத்தைத் தொல்காப்பியனார், அக்காலத்திலேயே வரையறுத்துக் கூறியுள்ளார்.

## 1. செல்வம் நிலையாமை

உலக வாழ்விலே, செல்வம் வாழ்வின் இன்பத்துக்கு மிகவும் அடிப்படையான ஒன்றாகும். போதிய அளவு அது இல்லாதபோது, வாழ்வே மிகவும் வருத்தம் உடையதாக ஆகிவிடும். இது பற்றியே, "பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று குறளும் கூறும்.

இப்படி, மிகவும் இன்றியமையாத ஒன்றினை, 'நிலையாமை எனக் கருதி ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்துவது இந்தப் பகுதி. செல்வம் ஓரிடத்திலே நிலைபெற்றிருப்பதன்று அதனால் அதன்பால் அளவுக்கு மீறிய பற்று வைக்க வேண்டாம் என்பதுடன் அது வந்து சேர்ந்த காலத்திலே அதனால் முடிந்தவரை அறஞ்செய்து, பலர்க்கு உதவி செய்து வாழ்தலும் வேண்டும். இந்த நெறியே இதன்கண் கூறப்பட்டிருக்கின்றது.

'துறவு' நிலையிலே, செல்வத்தின்பால் எழுகின்ற பற்றினைத் துறப்பது முதன்மையானது என்பதும் இதன் கருத்தாகும்.

**பாடல் : 1**

**அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட**
**மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்**
**சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின், செல்வம் ஒன்று**
**உண்டாக வைக்கற்பாற் றன்று.**

**பொருளுரை**

காதல் மனைவி அருகே அமர்ந்து அறுசுவைகளுடன் கூடிய உணவினை அன்புடன் வாயிலே எடுத்தெடுத்து ஊட்டிக் கொண்டிருக்கும் போதும், அடுத்த உருண்டையை வேண்டாமெனத் தடுத்து உண்டு களிப்பவர் சிறந்த செல்வச் செழுமையினையும் இன்பவாழ்வினையும் உடையவர்கள். அப்படிப்பட்டவர்களும் ஒருசமயத்தே வறுமையாளராவார்கள் ஓரிடத்திலே சென்று புன்மையான கூழினையும் யாசித்து நிற்பார்கள். செல்வத்தின் நிலையாமை இப்படிப்பட்டது என்றால், செல்வம் என்கின்ற ஒன்றினை நிலையுள்ளதாகக் கொண்டு பேணிக்காத்து வைக்கப்பட வேண்டியதாகக் கருதுவது முறையாகுமோ? ஆகாது. அதனை உள்ளபோதே அறவழிகளிற் செலவிடுவதே அறிவுடைமையாகும்.

அறுசுவை - தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு அமர்ந்து-அன்புடனே அருகே அமர்ந்துகொண்டு சிகை - சோற்று உருண்டை, உருவ ஒப்புமைபற்றிக் கூறினர். "கூழ்" உண்பவர் மிகவும் வறிஞர். அவர்பாலுஞ்

சென்று அதனையும் யாசிக்கும் நிலை என்றமையால், மிகுதியான வறுமைநிலை குறிக்கப்பட்டது. வீடும். செல்வமும், மனைவியும், எல்லாமும் இழந்து பிச்சைக்காரர்களாவதும் இயல்பு என்பது கருத்து.

**பாடல் : 2**

**துகள்நீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்**
**பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க்**
**அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்**
**சகடக்கால் போல வரும்.**

**பொருளுரை**

நடுவுநிலைமை பொருந்த, எவரிடத்துமே செல்வம் நிலையாக நிற்பதில்லை. வண்டிச் சக்கரத்தின் ஆர்க்கால்கள் போல, மேலும் கீழுமாகச் சுற்றிசுற்றி இடம் மாறிக்கொண்டே போகின்ற இயல்பினை உடையது அது. அதனால், எருமைக் கடாக்களை நடத்திப் போரடித்துப் பெற்ற நெல்விளைவாகிய குற்றமற்ற பெருஞ்செல்வமானது விளைந்து தோன்றிய காலத்திலே, அதனை எவருக்கும் தராமல் சேமித்துப் பூட்டி வைக்காதீர்கள். அது கிடைத்த காலந்தொடங்கி, அனைவரும் பசியின்றி வாழ வேண்டும் என்ற அறநினைவுடன், பலரோடும் கூடிப் பகிர்ந்து உண்பீர்களாக!

துகள் குற்றம். துகள்நீர் பெருஞ்செல்வம் வேளாண்மையால் வந்த பெருஞ் செல்வம் அதுவே குற்றமற்ற “பெருஞ்செல்வம்“ பகடு - எருமைக்கடா.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்றது குறளும். உணவுப் பொருள்களை முறையின்றிச் சேமித்து வைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது இந்தப் பாடல்.

**பாடல் : 3**

> **யானை எருத்தம் பொலியக் குடை நிழற் கீழ்ச்**
> **சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை**
> **வினை உலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட**
> **மனையாளை மாற்றார் கொள.**

**பொருளுரை**

நால்வகைச் சேனைகளும் தம் பின்னாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்க, அவற்றின் தலைவராகப் பட்டத்து யானையின் பிடரியின்மீது அமர்ந்து, அந்தப் பிடரே தாம் அமர்ந்ததனால் அழகுபெற்றுத் திகழுமாறு கொற்றக் குடையின் நிழலின்கீழ் வெற்றியுலா வந்த மன்னவர்களும், தம் முற்பிறப்பின் பழைய தீவினை வந்து அந்த வாழ்வை எல்லாம் அழித்துவிட, நிலைவேறுபட்டுப் போவார்கள். தாம் முறையாக மணந்து கொண்ட மனையாளையும் காத்துப் பேணும் வலுவற்று, மாற்றார் அவளைச் சிறைப்பிடித்துச் செல்லத், தாம் அதனையும் காணும் அந்த இழிநிலைமைக்கும் ஆளாவர்.

'அரசியல் செல்வாக்குக்கூட நிலையற்றது' என்று கூறுவது இது, வெற்றியுலா வந்தவன் நாட்டையும் இழந்து மனைவியையும் மாற்றார் சிறைப்பிடித்துச் செல்லப் பழியுடையவன் ஆதலும் நேரும் என்கிறது பாடல். எருத்தம் - கழுத்து குடை - வெண் கொற்றக்குடை சேனை - நால்வகைச் சேனை. மேலைவினை - முற்பிறவிகளிலே ஒழுகிய ஒழுக்கங் காரணமாக வந்து

பற்றும் ஊழ்வினை. இதனை, 'ஏனைவினை' எனவும் பாடங் கொள்வர். அது உருத்து வந்து ஊட்டுமாதலால், 'உவப்ப" என்றனர். இதனால், அரசர்கள், தம் செல்வாக்குள்ள போதே அறஞ்செய்வதில் ஈடுபட வேண்டும் என்றனர். இதனால், அரசர்கள், தம் செல்வாக்குள்ள போதே அறஞ்செய்வதில் ஈடுபட வேண்டும் என்றனர். 'குடை நிழலமர்ந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்' என்ற சான்றோர் வாக்கும் இதனை வற்புறுத்தும்.

**பாடல் : 4**

**நின்றன நின்றன நில்லா எனஉணர்ந்து**

**ஒன்றின ஒன்றின வல்லே செயின்செய்க்**

**சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்**

**வந்தது வந்தது கூற்று.**

**பொருளுரை**

நாட்கள் செல்லச் செல்ல வாழ்நாளும் கழிந்து கொண்டே போகின்றது. கூற்றமும், உயிரைப் போக்கும் சினத்துடன் அணுக அணுக வந்து கொண்டே இருக்கின்றது. அதனால் நிலை பெற்றன நிலை பெற்றன என்று கருதும் செல்வங்கள் எல்லாம். நிலைத்து நிற்பன அல்ல என உணருங்கள். உணர்ந்து, உங்கள் மனம் பொருந்தின அறச்செயல்களை எல்லாம்,உங்களால் கூடுமான வரையிலும் செய்யுங்கள். அதற்கு நாட்களைக் கடத்திக் கொண்டே போகாதீர்கள். விரைவிலேயே காலந்தாழ்த்தாமல் செய்யத் தொடங்கி விடுங்கள்.

செல்வ நிலையாமையை உணர்ந்து அறஞ் செய்ய வேண்டுமென நினைப்பது மட்டும் போதாது அத்துடன் உடல் வல்லே விரைவாக நிலையாமையையும் உணர்ந்து அதனை விரைவிலேயே செய்யத் செறுத்து கோபித்து உடன் வினைல் நலக் ஒன்றுபோற் தொடங்கி விட வேண்டும் என்பது இது. செட்டி உயிர் ஈறும் வாள்' எனக் காலக்கழிவைக் குறாற் காறுவதும் உணர்க. கூற்று-கூறுபடுத்துவது உடலையும் உயிரையும் கூறுபடுத்தி வேறுவேறாகப் பிரிப்பது ஆதலால், கூற்று என்றனர்.

**பாடல் : 5**

**என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்**
**பின்னாவ தென்று பிடித்திரா - முன்னே**
**கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்**
**கொடுத்தாறு செல்லும் சுரம்.**

**பொருளுரை**

கூற்றம் மிகவும் கொடிய தன்மையினை உடையது. எனினும் தன் கடமையிலே ஒருபோதும் கோணுதல் இல்லாமல் நடப்பது. அது, உயிர்களைப் பற்றிப் பாசக்கயிற்றாற் கட்டி இழுத்துச் செல்லும். அவ்வழியிலே வெம்மையான வெவ்வழல் நரகம் குறுக்கிடும். ஏதாவது ஒரு பொருள் தம் கையிலே கிடைக்கப் பெற்றால், இது நமக்குப் பின் காலத்திலே உதவுவது என்று அதனை இறுகப் பற்றிக் கொண்டிராமல், பிறருக்கு முதலில் அதனைக் கொடுத்து மகிழ்ந்தவர்கள், அந்த வெம்மையான பாழ் நரகைத் தப்பிச் செல்வார்கள் சென்று, சுவர்க்கமும் அடைவார்கள். செய்யாத பிறரோ, அந்த வெம்மையிலேயே வீழ்ந்து தவிப்பார்கள்.

தருமஞ் செய்வதால், மறுமையிலே நேரவிருக்கும் நன்மையைச் சொல்லுகிறது பாடல். தருமஞ் செய்தவர் சுவர்க்க போகம் அநுபவிப்பார்கள். அல்லாதோர் நரக வெம்மையிலே கிடந்து அழுந்துவார்கள் என்பது கருத்து. உயப்போதல்-தப்பிப் போதல் கோடுதல் - கோணுதல். தீ-கொடுமை. ஆறு - வழி. சுரம் வெம்மையான பாழ்நிலம். கூற்றம், வெம்மை உடையது எனினும், செய்தவர்க்கு அவ்வவ் வினைகளின் பயன்களை அநுபவிக்கச் செய்வதில் நடுநிலை தவறாதது. இது பற்றியே 'கோடில் தீக் கூற்றம்' என்றார்.

**பாடல் : 6**

**இழைத்தநாள் எல்லை இகவா் பிழைத்தொரீஇக்**
**கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை - ஆற்றப்**
**பெரும்பொருள் வைத்தீர், வழங்குமின் நாளைத்**
**தழீஇம்தழீஇம் தண்ணம் படும்.**

**பொருளுரை**

நாம் பிறக்கும்பொழுதே நம்முடைய வாழ்நாள் இவ்வளவுதான் என்பதும் வரையறுக்கப்பட்டு விடுகின்றது. அப்படி விதிக்கப்பட்ட ஆயுட்காலத்தின் இறுதியானது ஒரு போதும் தன் எல்லையைக் கடந்து போவதே இல்லை. அந்த எல்லையைக் கடந்து நீங்கியவராகக் கூற்றத்தைக் கடந்துபோய் வாழ்ந்தவர்கள் என்பவர் எவருமே இந்த உலகத்தில் இதுவரை இல்லை. அதனால் மிகுதியான பெரும்பொருள்களை எல்லாம் வைத்திருப்பவர்களே அவற்றை எல்லாம் இப்போதே தருமத்திற்கு வழங்கத் தொடங்கி விடுங்கள். நாளைக்கே சாவை குறிக்கும் தண்ணுமை என்கிற சாக்காட்டுப் பறையானது, 'தழீஇம் தழீஇம்' என்று உங்களைக் குறித்தும் ஒலிக்கத் தொடங்கிவிட நேரிடலாம்.

இழைத்த நாள் - விதித்த நாள் எல்லை இகவா - கூடுதலும் குறைதலுமாகித் தன் எல்லையைக் கடவாது. பிழைத்து தப்பி. ஒரீஇ -நீங்கி ஆற்ற மிகுதியான. குறித்து-கடந்துபோய். தண்ணம் தண்ணுமை என்னும் சாக்காட்டுப் பறை."நாளைக்கே சாவு வந்தாலும் வந்து விடும் அதனை யார் அறிவார்? அதனால் இப்போதே பொருள்களை வாரி வழங்குங்கள் அறம் செய்து உய்யுங்கள்" என்பது கருத்து.

**பாடல் : 7**

**தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்**
**கூற்றம் அளந்துநும் நாளுண்ணும் - ஆற்ற**
**அறஞ்செய் தருளுடையீர் ஆகுமின் யாரும்**
**பிறந்தும் பிறவாதார் இல்.**

**பொருளுரை**

தன்னுடைய போரொளியினால் விளக்கம் உடையதாகத் தோன்றுவது ஞாயிறு. அந்த ஞாயிற்றினையே நாழிகையாகக் கொண்டு, நாள்தோறும் அளந்து அளந்து கூற்றமானது உங்களுடைய வாழ்நாட்களை உண்டு கொண்டேயிருக்கும். அதனால், மிகுதியான அறங்களைச் செய்யுங்கள் எவ்வுயிரிடத்தும் அருள் உடையவராக ஆகுங்கள் எப்படிப் பட்டவரானாலும், அப்படி அறஞ்செய்து அருள் உடையவராக ஆகாமற் போனால், மனிதராகப் பிறந்தும் பிறவாதவராகவே சேர்த்துக் கருதப்படுவார்கள்.

‘மனிதப் பிறவி பெற்றதே தருமஞ் செய்வதற்கும், அருள் உடையவராவதற்குந்தான். அதனை மறந்தபோது அவர் மனிதராகப் பிறந்ததனால் என்ன பயன்? அவர் பிறவாத வராகவே எண்ணப்படுவர்’ என்பது கருத்து.தோற்றம் தோன்றுதலும் ஆம். வைகலும்-நாள்தோறும். சூரியன் தோன்றி மறைதலினாலே, நாள் தோன்றி அழிய, அத்துடன் வாழ்நாளும் கழிந்துகொண்டே போவதனை இப்படிக் கூறினார்.

**பாடல் : 8**

**செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத**

**புல்லறி வாளர் பெருஞ்செல்வம் - எல்லில்**

**கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி**

**மருங்கறக் கெட்டு விடும்.**

**பொருளுரை**

‘யாங்கள் செல்வர்கள்’ என்று அகங்காரம் கொண்டவர்களாகத் தாம் இறந்தபின் செல்லவேண்டிய இடத்தைப் பற்றி எண்ணாதவர்கள் எல்லாரும், அற்பமான புத்தியினை உடையவர்கள். அப்படிப் பட்டவர்களுடைய பெருஞ்செல்வம் எல்லாம், இரவிலே கார்மேகமானது வாய்திறப்பதனால் தோன்றுகின்ற மின்னலைப்போலச் சிறிதுபொழுதே ஒளியுடன் தோன்றிப் பின்னர் இருந்த இடமே தெரியாமல் முற்றிலும் அழிந்துபோய்விடும்.

‘செல்வச் செருக்கினாலே அறத்தின் பயனை மதியாத அற்பர்களுடைய செல்வம் விரைவிலேயே அழிந்து போகும்’ என்பது கருத்து. செல்வுழி-செல்லும் இடம் வீடு. புல்லறிவு- அற்பமான அறிவு. கருங்கொண்மூ-கார் மேகம்.

**பாடல் : 9**

**உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்**
**துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே**
**வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அஆ**
**இழந்தான்என் றெண்ணப் படும்.**

**பொருளுரை**

தானும் வயிறார நன்றாகச் சாப்பிட மாட்டான் தன்னிடத்தே ஒளியானது நிலைபெற்றிருக்குமாறு தன்னை ஆடையணிகளாற் புனைந்தும் இன்புற மாட்டான் வளரும்படியான புகழைத் தரும் செய்கைகளையும் செய்ய மாட்டான் சேர்வதற்கு அருமையான உறவினர்களுடைய துயரங்களையும் போக்கமாட்டான். தன்னை யாசித்து வந்தவர்களுக்கு வழங்கவும் மாட்டான் இப்படி, ஒருவன் எதையும் செய்யாமல் வீணாகப் பொருளையே பெரிதென்று பூதம் காப்பதுபோலக் காத்துக் கொண்டிருப்பானானால், ஐயோ! அந்தப் பொருளை அவன் இழந்துவிட்டான் என்றே சான்றோரால் எண்ணப்படுவான்.

செல்வத்தின் பயனை அவன் அநுபவிக்காததனால், அது இருந்தும் அவனளவில் இல்லாததாகி விடுகிறது. ஒளி - விளக்கம் . கொன்னே-வீணே. துன் அரும்-சேர்தற்கு அரிய.

**பாடல் : 10**

**உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்**
**கெடாஅத நல்லறமும் செய்யார் - கொடாஅது**
**வைத்தீட்டி னார்இழப்பர், வான்தோய் மலைநாட!**

உய்த்தீட்டும் தேனீக் கரி.

**பொருளுரை**

வானளாவிய மலைமுடிகளையுடைய நாட்டிற்கு உரிய தலைவனே தாம் நன்றாக உடுத்து அநுபவிக்காமலும், வயிறார உண்டு பயனடையாமலும், தம் உடலினை வருத்திக் கொண்டும். என்றும் அழிவில்லாத நல்ல தருமங்களைச் செய்யாதவர் களாகியும், யாசகர்களுக்குக் கொடாதவர்களாகியும், பொருளைச் சேர்த்து வைப்பவர்கள் இருக்கிறார்களே அவர்கள், உறுதியாக அதனை ஒருநாள் இழந்தே விடுவார்கள். இதற்கு பற்பல மலர்களின்றும் தேனைக் கொண்டு வந்து கூட்டிலே சேர்த்துவைக்கும் தேனீயே நல்ல சான்றாகும்.

‘தேன் கூட்டினின்றும் தேனைப் பிறர் எடுத்துக் கொள்வதுபோல, அவனுடைய அவ்வளவு பொருளையும் எவரேனும் ஒரு நாள் கவர்ந்து கொண்டு போய்விடுவர்’ என்பது கருத்து. ‘தம் உடம்பு செற்றும் கெடாத நல்லறம்’ என்பது, தம் உடம்பு அழியினும் தாம் அழிவில்லாது நிலைத்திருக்கும் நல்ல அறச் செயல்கள். உய்த்தல்-கொண்டு வருதல். ஈட்டல்- சம்பாதித்தல்.

## 2. இளமை நிலையாமை

இளமை துடிப்பான பருவம். உடலின் வனப்பும் கட்டும் பல்வகையான விருப்பங்களைத் தூண்டிவிடுகின்றன. அந்த வேட்கைக்குள் கட்டுப்பட்டு, அதன்கண் ஈடுபடுவோர் பலர். அவர்களுடைய ஆர்வங்களும் அநுபவங்களும் நிலையற்றன என்று, எவரேனும் சொல்லமுடியுமோ? முடியாது.

ஆனால், இளமைப் பருவத்தின் ஆசாபாசங்களையும் கட்டுப்படுத்தி நல்லொழுக்க நெறியில் வாழ்வதே சிறப்பு உடைமையாகும். இளமையின் நிலையாமையை உணர்ந்து ஒழுக்கமுடன் ஆசைகளைக் கட்டுப்படுத்தி வாழ்தல் வேண்டும்.

இதனை வலியுறுத்துவார், இளமையின் நிலையாமை யான இயல்பினையும், அதன் பருவக் கோளாறுகளிலே ஈடுபடாதவர்கள், உடலையும் உள்ளத்தினையும் கட்டுப்படுத்தி உறுதியாக வாழ்ந்தவர்கள், அடையும் நிலையான இன்பங்களையும் வகுத்துக் கூறுகின்றார், இந்தப் பகுதியில்

'செல்வத்தால் செருக்கடைந்து கெடாமல் அறவழிகளிலே ஈடுபடுதல் வேண்டு'மென அதன் நிலையாமையை முதலில் வைத்தவர், அடுத்து, "உடலின் வலிமையால் கட்டற்று வாழ்தல் கூடாது" என, இதனை அடுத்து வைத்துள்ளனர்.

**பாடல் : 11**

**நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்**
**குழவி யிடத்தே துறந்தார் - புரைதீரா**
**மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி**
**இன்னாங் கெழுந்தீருப் பார்.**

**பொருளுரை**

நல்ல அறிவாளர்கள், பின்னர் தமக்கு நரைவரும் என்பதை எண்ணியவர்கள். அதனால் அவர்கள் இளம் பருவத்திலேயே உடலின் வளத்தைக் குறைக்கும் ஆசாபாசங் களை எல்லாம் துறந்துவிட்டார்கள். இளமை

என்றும் குற்றங்களினின்றும் தீராதது நிலையில்லாத தன்மையினையும் உடையது. அதனை உணராமல், அந்தப் பருவத்தின் களிப்பில் அதிகமாக ஈடுபட்டவர்களே, இப்போது கோல் ஊன்றி மிகவும் வருத்தத்துடன் எழுந்திருக்கின்றனர்.

நல்லறிவு- பழம் பிறவிகளிலே செய்த நற்செயல்களினாலே வந்து வாய்க்கும் அறிவு. குழவி-குழவிப் பருவம். துறந்தார் பற்றுக்களைத் துறந்துவிட்டவர். புரை - குற்றம். மன்னா நிலையாத. இளமையில் துறந்தவர் நரைதிரை மூப்பின்றி வலுவுடையராய் இருப்பதும், துறவாது சிற்றின்பங்களிலே திளைத்தவர் தளர்வுற்று நலிவதும் கூறி, இளமையின் நிலையாமையை வற்புறுத்துகிறது இந்தப் பாடல் "குழவி" சிறு பருவம் குறித்தது.

**பாடல் : 12**

**நட்புநார் அற்றன நல்லாரும் அ∴கினர்**

**அற்புத் தளையும் அவிழ்ந்தன, - உட்காணாய்**

**வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம்? வந்ததே**

**ஆழ்கலத் தன்ன கலி.**

**பொருளுரை**

'நட்பு' என்று ஒருவரை யொருர் பிணித்திருந்த பிணிப்புக்களும் அற்றுப் போயின. மனைவிமாரும் தம் அன்பின் அளவிலே குறைந்தவராய் விட்டார்கள். உற்றார் உறவினர் என்று ஒருவரோடொருவர் கொண்டிருந்த பிணிப்பும் கட்ட விழ்ந்து போய்விட்டது. இவை எல்லாவற்றையும் உள்ளத்திலே எண்ணிப் பார்ப்பாயாக. இப்படி வாழ்கின்றதனாலே உண்டாகும் பயன்தான் என்ன? கடலிலே

அமிழ்ந்து கொண்டிருக்கின்ற மரக்கலத்தைப் போன்ற துன்பமும்தான், உனக்கு இதோ வந்து விட்டதே!

இளமையிலே சிற்றின்ப வேட்கையிலே முழுகியிருந்த ஒருவனின் தளர்ச்சியுற்ற முதுமை நிலைமையைக் குறித்துச் சொன்னது இது. இதனால், இளமையின் இன்பம் எல்லாம் நிலையில்லாதன என்பது உணர்த்தப்பட்டது. அஃகினார்- குறைந்தார். உட்காணாய் -உள்ளத்து உணராய் கலம்-மரக்கலம். நல்லார் -மகளிர் கலி-துன்பம் “கலுழ்“ எனவும் பாடம்.

**பாடல் : 13**

**சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்**
**பல்கழன்று பண்டம் பழிகாறும் - இல்செறிந்து**
**காம நெறிபடரும் கண்ணினார்க்கு இல்லையே**
**ஏம நெறிபடரும் ஆறு.**

**பொருளுரை**

இல்வாழ்க்கை என்னும் வாழ்விலே மிகவும் நெருக்கம் உடையவராயிருந்து, ஆசையின் வழியிலே செல்லுகின்ற அறிவு உடையவர்களுக்குத், தம் உயிருக்குப் பேரின்பத்தைத் தருகின்ற அரண் போன்ற துறவு நெறியிலே மனஞ் செலுத்துவதற்கான வகையே இல்லாமற்போய் விடுகின்றது. சொற்கள் தளர்வுற்றுப் போய், கையிலே தண்டினை ஊன்றிக் கொண்டு, தளர்ந்த நடையினை உடையவர்களாய்ப் பற்கள் அனைத்தும் கழன்று வீழ்ந்துபோக, அவர்களுக்கு உரிமையான உடலும் பழிக்கப்பட நேர்வதுதான், அவர்களுக்கு இறுதியிலே உண்டாவதாகும்.

சிற்றின்பத்திலே ஈடுபட்டு, உடலைத் தளரச் செய்து நலிவடையாமல், இளமையின் நிலையாமையை உணர்ந்து, அப்போதே காமநெறியை வெறுத்து, உயிருக்கு ஏமமாகிய துறவுநெறியிலே ஈடுபடுக என்பது கருத்து. பண்டம்-உடலாகிய பண்டம். பழிகாறும் பழிப்பையடையும். கண்-அறிவு. ஏமம்- அரண் உயிர்க்கு உறுதி தரும் பேரின்பம்.

**பாடல் : 14**

**தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா**

**வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழ்இலா**

**மம்மர்கொள் மாந்தர்க்கு அணங்காகும் தன்கைக் கோல்**

**அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.**

**பொருளுரை**

மூப்பினாலே முதுகு கூனிப்போய், உடல் தளர்ச்சியுற்றுத் தலை நடுங்கிக் கொண்டிருக்கத், தண்டினை ஊன்றியவளாகத் தள்ளாடி விழுந்து விழுந்து செல்கின்றாள் இந்தக் கிழவி. உறுதியில்லாத மோகங்கொண்டு திரிகின்ற மாந்தர்களுக்கு, இவளுடைய கையிலிருக்கும் ஊன்று கோலானது, இவள் தாயின் கைக் கோலாக இருந்த காலத்திலே, இவளிடத்தும் காமத்தால் மிக்க வருத்தம் உண்டாகியிருக்கும் அல்லவோ

“இப்போது வெறுக்கப்படத்தக்கவளான இவளே முன்னர் ஆசை எழச் செய்பவளாயிருந்தாளே! இதனை உணர்ந்தாவது இளமையின் நிலையாமையை அறிந்து துறவு நிலையிலே மனங்கொள்க“ என்பது கருத்து. இறக்கும்-செல்லும்

காழ்-உறுதி. மம்மர் - மோக மயக்கம். அணங்கு-தன் அழகால் பிறரை வருத்திக் கொல்லும் பெண் தெய்வம்.

**பாடல் : 15**

**எனக்குத்தாய் ஆகியாள் என்னைஈங் கிட்டுத்**
**தனக்குத்தாய் நாடியே சென்றாள் - தனக்குத்தாய்**
**ஆகியவளும் அதுவானாள் தாய்த்தாய்க்கொண்டு**
**ஏகும் அளித்திவ் வுலகு.**

**பொருளுரை**

எனக்குத் தாயாக இருந்தவள் என்னை இங்கே விட்டு விட்டுத், தனக்கு வேறொரு தாயை நாடி அடுத்த பிறவி எடுப்பதற்காகச் சென்று விட்டாள். அவளுக்குத் தாயாக இருந்தவளும் அப்படியே அவளை விட்டுவிட்டுப் போய் விட்டாள். இதுவே இவ்வுலகின் இயல்பானால், தாய் மற்றொரு தாயைத் தேடிக்கொண்டே சென்று கொண்டிருக்கும்படியான ஏழைமையை உடையதுதான் இவ்வுலகமாகும் போலும்.

ஒருத்தி, இளமை மாறி முதுமை எய்திச் சாவை ஏற்று, இன்னொருத்தி வயிற்றிலே சென்று பிறக்கிறாள்: அவளும் அப்படியே. இப்படிச் சாவதும் பிறப்பதுமாகப் போய்க் கொண்டே இருக்கும் இந்த உலகத்திலே இளமை என்பது ஒரு நிலையானதோ? என்பது கருத்து. அளித்து - ஏழைமை உடையது.

**பாடல் : 16**

**வெறியயர் வெங்களத்து வேல்மகன் பாணி**

**முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க**

**மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி**

**அறிவுடை யாளர்கண் இல்.**

**பொருளுரை**

வெறியாட்டமானது ஆடுதல் நிகழ்கின்ற கொடிய பலியிடுமிடத்திலே வேலை ஏந்தி வெறியாடுவோனாகிய வேன்மகனின் கையிலேயுள்ள, தளிர்கள் நிறைந்த நறுமண முடைய பூமாலையானது தன் முன்னே கொண்டிருக்கக் கண்ட ஆட்டுக் குட்டியானது, அந்தத் தளிரை விளங்கிக் உண்பது போன்ற நிலையில்லாத மகிழ்ச்சியினை உடையது இளமைப் பருவத்து இன்பங்கள் எல்லாம். அத்தகைய மகிழ்ச்சி அறிவுடையவர்களிடத்திலே ஒருபோதும் இருப்பதில்லை.

அடுத்த நொடியிலே சாவு வருவதை அறியாமல் மறிதளிர் உண்டு மகிழ்வது போலவே, அடுத்த நொடியிலே சாவு வருதலும் கூடும் என்பதையறிந்து அறவழியிலே செல்லாமல் சிற்றின்பங்களிலே ஈடுபடுவர் அறியாதார்' என்பது கருத்து. வெறியயர்தல் -ஆவேசித்து ஆடுதல் வேன்மகன் - பூசாரி. பாணி கையில் முறி -தளிர். தயங்க - அசைந்து கொண்டிருக்க. குளகு தளிர்

**பாடல் : 17**

**பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்**

**கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை - நனிபெரிதும்**

**வேல்கண்ணள் என்றிவளை வெ்.கன்மின் மற்றிவளும்**

**கோல்கண்ண ளாகும் குனிந்து.**

**பொருளுரை**

குளிர்ச்சி பொருந்திய சோலைகளிலேயுள்ள, பயனைத் தருகின்ற மரங்கள் எல்லாம், கனிகள் உதிர்ந்து வீழ்ந்தபின் தோன்றும் பரிதாபமான நிலையினைப் போன்றதுதான் வாழ்வு. 'மிகவும் சிறப்பான வேல்போன்ற கண்களை உடையவளா யிருக்கின்றாள்' என்று சொல்லி இவளை விரும்பாதீர்கள். இவளும், தன் உடல் குறுகிக், கண் பார்வை இழந்து, தன் வழி தெரிவதற்குத் தன் கைக்கோலையே கண்ணாகக் கொள்ள வேண்டிய முதியவளாக ஆகிவிடுபவளே!

அனைவரும் விரும்பும் வண்ணம் கனிகளோடு விளங்கிய சோலை மரங்கள், அக்கனிகள் வீழ்ந்து போன பின்னர் ஒருவராலும் விரும்பப் படாதவாறு போல, இளமை கழிந்தபின் எந்தப் பெண்ணுமே எவராலும் விரும்பப்படாள். அதனால், அப்படிப்பட்ட நிலையற்ற இளமையை அறிவுடையோர் விரும்பார்கள் என்பது கருத்து. பனிபடு- குளிர்ச்சி பொருந்திய. நனி - மிக்க வெ்.குதல் - விரும்புதல். குனிந்து கூனிக் குறுகி.

**பாடல் : 18**

**பருவம் எனைத்துள பல்லின்பால் ஏனை**

**இருசிகையும் உண்டீரோ என்று - வரிசையால்**

**உண்ணாட்டம் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்**

**எண்ணார் அறிவுடை யார்.**

**பொருளுரை**

'பிராயம் எவ்வளவு ஆகியுள்ளது! பல்லின் தன்மை எப்படியுள்ளது? இரண்டு கவளமும் உண்டு வீட்டீரோ?' என்று வயது முதிர்ச்சியினை முறைமையால் உள்ளத்திலே எண்ணி ஆராய்தலைச் செய்யப்படுவதனால், தேகத்தின் வலிமையைப் பற்றி எண்ணி, அறிவு உடையவர்கள் அளவுக்குமீறி மகிழமாட்டார்கள்.

'காலந்தோறும் இப்படி விசாரிக்கும் முறை மாறுதலை உடையது உடலின் வலிமை. அதனால், ஆன்றோர் அதலை நிலையானதென நினையாது உயிர்க்கு உறுதி தேடுவதிலேனை மனஞ் செலுத்துவார்கள்' என்பது கருத்து. பருவம்-பிராயம். மரிசை - முறைமை் உபசாரமும் ஆம். சிகை - கவளம். கோள்-வலிமை.

**பாடல் : 19**

**மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்**
**முற்றியிருந்த கனியொழியத் தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு.**

**பொருளுரை**

மரங்களிலே முதிர்ச்சியுற்றிருந்த கனிகள் மட்டுமே அல்லாமல், நல்ல காய்களும் கடுங்காற்றினால் உதிர்ந்து போதல் நிகழ்வதும் உண்டு. அதுபோலவே, முதியவர்கள் மட்டு மல்லாமல் இளமைப் பருவத்தினரும் மாண்டு போதல் நிகழ்வதும் ஏற்படலாம். அதனால்,நல்ல செயல்களை எல்லாம்

நம்முடைய பின்காலத்தே அறிந்து செய்வோம் இப்போது யாம் இளையோம்தாமே என்று, எவரும் கருத வேண்டாம். கையில் பொருள் வந்து கிடைத்த பொழுதிலேயே உள்ளத்தில் கரவு ஏதுமின்றி அறஞ் செய்வதிலே ஈடுபடுங்கள்: அதுதான் சிறந்தது.

இளமை அநுபவிக்கும் வயது எல்லாம் வயதானபின் தருமஞ் செய்யலாம்" என்று நினையாதீர்கள். 'இளமை நிலையற்றது என்பதை உணர்ந்து உடனே தருமஞ் செய்வதிலே ஈடுபடுங்கள்' என்பது கருத்து. கைத்து உண்டாம் போழ்து - கையிலே செல்வம் வந்து உண்டான பொழுது.கரவாது ஒழியாது. தீவளி - கடுங்காற்று புயல். நற்காய் - நல்ல காய்.

**பாடல் : 20**

**ஆட்பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்**
**தோட்கோப்புக் காலத்தால் கொண்டுய்ம்மின் - பீட்பிதுக்கிப்**
**பிள்ளையைத் தாய்அலறக் கோடலான் மற்றதன்**
**கள்ளம் கடைப்பிடித்தல் நன்று.**

**பொருளுரை**

ஆயுள் முடிந்துபோன ஆட்களைத் தேடிக்கொண்டே உரிகின்ற இயல்பினை உடையது அருள் அற்ற கூற்று. அது உண்மையாதலால், நல்வினையாகிய வைத்துக்கொ தேடிக்கொள்ளும் காலத்தோடேயே தேடி கட்டுச்சோற்று வைத்துக் கொண்டு பிழைத்துக் கொள்ளுங்கள். கருப் பையிலே

இருக்கும் கருவை வெளிப்படச் செய்து, தாயானவள் அலறித் துடிக்கப் பிள்ளையைக் கொண்டு போகின்றதனால், அந்தக் கூற்றத்தின் வஞ்சனையை மறவாமல், உறுதியாக அறிந்து தெளிவுகொள்ளுதலே மிகவும் நன்மையாகும்.

'எமன் எப்போது வருவான்?' என்று எவராலுமே சொல்ல முடியாது. தாய் அலறப் பச்சிளங் குழந்தையையும் கொண்டு போகும் கருணையற்றவன் அவன். அதனை உணர்ந்து, காலம் தாழ்த்தாமல் தருமஞ் செய்து நல்வினைகளைத் தேடிக் கொள்ளுங்கள் என்பது கருத்து. தோட் கோப்பு - தோளிலே கோத்துக் கொண்டு செல்லும் கட்டுச் சோற்று மூட்டை வழியிடையிலே அது பசி நீக்குவதுபோல், நல்வினைகளும் வறுமைக்குத் துணை செய்யும் என்க.

## 3. யாக்கை நிலையாமை

இளமை நிலையுள்ளது அன்று. அது நிலையுள்ளது என்று கருதி நல்ல வினைகளைச் செய்வதிலே ஈடுபடாமல், சிற்றின்பங்களிலே ஈடுபடுதல் கூடாது என்றது முன் அதிகாரம். இந்த அதிகாரம், இளமை மட்டுமன்று யாக்கையே நிலையற்ற ஒன்றுதான் என்பதைக் கூறி அதனால், நிலையுடையதான உயிரின் நன்மையைக் கருதி, அனைவரும் அறநெறியிலே ஈடுபடுதல் வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

எலும்பு, தசை, தோல் முதலிய எட்டு வகையான தாதுக்களால் யாக்கப்பட்டது உடல் யாத்தல் - கட்டுதல். அதனால், அது யாக்கை எனப்பட்டது. இடத்து நிகழ்கின்ற பொருளான இளமைப் பருவத்தின் நிலையாமை

கூறிய பின்னர் அடுத்து இடமாகிய யாக்கையின் நிலையாமையை உணர்த்துகின்றனர்.

உடல், உயிரின் நன்மைக்கான செயல்களிலே ஈடுபடுவதற்கு உதவும் கருவியாகவே அமைந்தது. அதனால், நிலையாமையை உணர்ந்து உயிரின்பத்திலே நாட்டஞ் செலுத்தவேண்டும் என்பது கருத்து.

**பாடல் : 21**

**மலைமிசைத் தோன்றும் மதியம்போல் யானைத்**
**தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்**
**துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்**
**எஞ்சினார் இவ்வுலகத் தில்.**

**பொருளுரை**

மலையின் மேலாகத் தோன்றும் முழுநிலவினைப் போலத் தமது பட்டத்து யானையின் தலையின் மேலாக எடுத்துக் தமதுள்ளப்பட்ட வெண்கொற்றக் குடையினராக விளங்குபவர் பேரரசர்கள். அவர்களும் இந்த உலகத்திலே இறந்தவர்கள் என்று பலரும் அறியக் காட்டி இகழப் பட்டவர்களே ஆவள் அஃதன்றி, அந்தச் சாவாகிய இகழ்ச்சிக்குத் எவருமே இவ்வுலகில் இதுவரை இல்லை. தப்பினவரென்று

எவ்வகையான வசதிகளும் உடலைப் பேணுவதற்கு உடையவரான அரசரும் இறப்பர். எனவே, ஏனையோரும் இறப்பர் என்று சொல்லி, யாக்கை

நிலையாமை கூறப்பட்டது. எஞ்சினார்-சாவுக்குத் தப்பி நிலையான வாழ்வு பெற்றவர்.

**பாடல் : 22**

**வாழ்நாட்கு அலகுஆ வயங்கொளி மண்டிலம்**
**வீழ்நாள் படாஅது எழுதலால் - வாழ்நாள்**
**உலவாமுன் ஒப்புர வாற்றுமின் யாரும்**
**நிலவார் நிலமிசை மேல்.**

**பொருளுரை**

உங்களுடைய ஆயுள் நாட்களுக்குக் கணக்கிடுவது போல, ஒளி விளக்கமுடைய ஞாயிற்று மண்டிலம், உதித்த லில்லாத வீழ்நாள் ஏற்படாதபடி தவறாது உதயமாகின்றது. அதனால், வாழ்நாள் அழிந்து போவதற்கு முன்பாகவே உங்கள் கடமையான அறங்களைச் செய்து நல்வாழ்வுக்கு வழிதேடுங்கள். இந்த உலகத்தின்மேல், எத்தகையவரேயானாலும் நிலையாக நிலைபெற்றிருக்க மாட்டார்கள் என்பதை உணருங்கள்.

நாளைக்கென்று நீங்கள் ஒதுக்கிக் கொண்டே போனால், நாள் உங்களுக்காகக் காத்திராது அது போய்க்கொண்டே இருக்கும் சாவும் எதிர்பாராது வந்தாலும் வந்துவிடும். அதனால், அறத்தை உடனே செய்வீர்களாக என்பது இது. அலகு - கூறுபடுத்திக் கணக்கிடுதல் வயங்குதல்- விளங்குதல். படா அது - தவறாது. ஒப்புரவு என்பதனைத் துறவறம் எனக்கொண்டால் நிலமிசை என்பதை வீட்டுலகம் என்க. வாழ்நாள் கழியாமுன் துறவறம் மேற்கொண்டு நிலையான இன்பம் பெறுக“ என்பது கருத்து.

பாடல் : 23

**மன்றம் கறங்க மணப்பறை யாயின**
**அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை**
**ஒலித்தலும் உண்டாமென்று உய்ந்துபோம் ஆறே**
**வலிக்குமாம் மாண்டார் மனம்.**

**பொருளுரை**

மன்றம் முழுவதும் முழங்க மணப்பாறையாக விளங்கியவை, அன்று அவருக்கு அவ்விடத்திலே சாவுப் பறையாகப் பின்னர் ஒலித்தலும்கூட இவ்வுலகிலே நேர்வது தான். இந்த உண்மையை உணர்ந்து மாட்சிமைப்பட்டவர் களுடைய மனமானது, தாம் பிறவித் துயரினின்றும் தப்பிப் போகும்படியான கொண்டிருக்கும். வழியையே உறுதியாகப் பற்றிக்

'திருமண நாளிலேயே வீழ்ந்துபோகும் நிலையாமையினை உடையது உடம்பு என்பதனை உணர்ந்து, உலக இன்பங்களிலே மனஞ்செலுத்தாமல், உயிர் உய்வதற்குரிய வழியான அறநெறிகளிலே மனஞ் செலுத்துவர் சான்றோர்' என்பது கருத்து. மன்றம் - இங்கே திருமணத்திற்காகக் கூடியிருக்கும் அவை. கறங்க -ஒலிக்க. மாண்டார் மனம் அப்படி மதிக்கும் என்றதால், அங்ஙனம் மதியாதார் பேதைமையுடையார் என்பதும் கூறப்பட்டது.

பாடல் : 24

**சென்றே எறிய ஒருகால் சிறுவரை**
**நின்றே எறிப பறையினை - நன்றேகாண்**
**முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டுஎழுவர்**

**செத்தாரைச் சாவார் சுமந்து.**

**பொருளுரை**

ஒருவர் இறந்துபோன இடத்திற்குச் சென்று ஒருமுறை கொட்டுவார்கள் சிறிது நேரம் சும்மாவிருந்து மீண்டும் இரண்டாவது முறை கொட்டுவார்கள் மூன்றாவது தடவை பறையினைக் கொட்டுவதற்குள் செத்துப் போனவர்களை இனிச் சாகப்போகிறவர்கள், துணியால் மூடித் தூக்கிச் சுமந்து கொண்டு, உயிரற்ற அந்த உடலை எரியிடுவதற்கு உரிய நெருப்பையும் எடுத்துக்கொண்டு கிளம்பிப் போவார்கள். இதுதான், யாக்கையின் நிலைமை, இதனை நன்றாக எண்ணிப் பாருங்கள்.

‘எண்ணிப் பார்த்து, உடல் அவத்தைகளிலே ஈடுபட்டுச் சீரழியாமல், நற்கதியடைவதிலே நாட்டங் கொண்டவராக, அதற்குரிய மார்க்கத்திலே மனத்தைச் செலுத்துங்கள்’ என்பது கருத்து.

**பாடல் : 25**

**கணம்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்**
**பிணம்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் - மணங்கொண்டீண்டு**
**உண்டுண்டுண் டென்னும் உணர்வினால் சாற்றுமே**
**டொண்டொண்டொ டென்னும் பறை.**

**பொருளுரை**

உறவின் முறையார் எல்லாரும் கூட்டமாகக் கூடிக் கொண்டு கலீரென்று பெருங்குரலிலே கூவி அழப், பிணத்தைத் தூக்கிக் கொண்டு போய்ச் சுடுகாட்டிலே சேர்ப்பவர்களைக் கண்டுள்ளோம். அப்படிப் பார்த்திருந்தும், திருமணம் செய்து கொண்டு, இவ்வுலகத்திலே உறுதியாக இன்பம் உண்டு

உண்டு என்று சொல்லும் மயக்கமான அறிவுள்ளவனை என்ன சொல்வது? அவனைக் குறித்துத், 'தொண் தொண்' என ஒலிக்கும் சாக்காட்டுப் பறைதான் அவனுக்கு யாக்கையின் நிலையாமையைத் தெரிவிக்கும் போலும்!

'மணவாழ்வின் இன்பத்தில திளைத்திருப்பவனுக்கு, ஒலிக்கும் சாக்காட்டுப் பறைதான், உன்னுடலுக்கும் இதுதான் கதியென யாக்கை நிலையாமையை எடுத்துச் சொல்லும்' என்பது கருத்து. கணம்-கூட்டம். காடு-சுடுகாடு.

**பாடல் : 26**

**நார்த்தொடுத்து ஈர்க்கிலென் நன்றாய்ந்து அடக்கிலென்**
**பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்**
**தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்**
**கூத்தன் புறப்பட்டக் கால்.**

**பொருளுரை**

தோலாற் பொதிந்திருக்கின்ற உடலாகிய பையினுள்ளே இருந்து, தான் செய்யவேண்டுமன விதிக்கப்பட்ட தொழில்களை முழுவதும் செய்து, தன் உடலை அநுபவிக்கச் செய்கின்ற கூத்தாடியாகிய உயிரானது, அந்த உடலைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்ட தென்றால், அதன் பின், அந்த உடலை நாரால் தொடுத்து இழுத்துச் சென்றால் என்ன? நன்றாக ஆராய்ந்து அடக்கஞ் செய்தால்தான் என்ன? கண்டவிடத்திலே போட்டால்தான் என்ன? பலரும் பழித்தால்தான் என்ன? எதுவும் அந்த உடலைப் பற்றுவதே இல்லை

உயிர்தான் உடலுக்கு அநுபவமாகிய இன்பத்தையும் துன்பத்தையும் தருவது. அது போய்விட்டபின் உடல் உணர் வற்றதாகிவிடும். அதைக்குறித்து

ஏன் இவ்வளவு ஆர்ப் பாட்டங்கள்? இப்படி அதன் நிலையாமையைக் கூறுவது இது. அடக்கில் - அடக்கஞ் செய்தல் கூத்தன் - நொடிக்கொரு முறை உடலைத் தன்னிச்சை போலெல்லாம் ஆட்டுவிப்பதால், பாவையினை ஆட்டுவிக்கும் கூத்தனாக உயிர் புனைந்து கூறப்பட்டது.

**பாடல் : 27**

**படுமழை மொக்குளின் பல்காலும் தோன்றிக்**

**கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் - தடுமாற்றம்**

**தீர்ப்பேம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை**

**நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.**

**பொருளுரை**

வீழ்கின்ற மழைநீரிலே தோன்றும் குமிழிகள் போலப் பன்முறையும் தோன்றித் தோன்றி அழிகின்ற நிலையாமையை உடையது இந்த உடல். இப்படி எண்ணி, இப்பிறவியிலே குறுக்கிடும் தடுமாற்றங்களை யாம் போக்கிக் கொள்வோம் என்று அறிந்து உணர்கின்ற உறுதியான அறிவுடையவர்களை ஒத்திருப்பவர்கள், இந்தப் பெரிய உலகத்தின்மேல் வேறு யாவர் இருக்கின்றார்கள்?

மொக்குள் -குமிழி முகை போல்வது. தடுமாற்றம் மனமாயையால் வரும் தடுமாற்றங்கள். திண்ணறிவு- திண்மையான அறிவு. நீணிலம்-பரந்த உலகம். அவரை ஒப்பவர் எவருமில்லை என்றதால், அத்தகையவர் அல்லாதாரின் புன்மையும் உணரப்படும்.

**பாடல் : 28**

**யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற**

**யாக்கையா லாய பயன்கொள்க் - யாக்கை**

**மலைநாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே**

**நிலையாது நீத்து விடும்.**

**பொருளுரை**

உடலானது, மலைமுகடுகளிலே தவழ்ந்து செல்லும் வெண்மேகம் போலத் தோன்றி, அவ்விடத்திலே நிலைத் திராமல், அதனைக் கைவிட்டுப் போய்விடும் தன்மையது. அது போலவே, உயிரும் உடற்கூடெடுத்துத் தோன்றிப் பின் அதனைக் கைவிட்டுப் போய்விடும் இயல்பினை உடையது. அதனால் உடலினை உறுதி உடையதாகப் பெற்றவர்கள், தாம் பெற்ற அந்த உடலால் ஆன நல்ல பயன்களை எல்லாம் உடனேயே நிறைவேற்றிக் கொள்வார்களாக!

'உடல் தளர்ந்து உயிர் போய்விடுவதற்கு முன்பே, நற்செயல்களிலே ஈடுபட்டு உயிருக்கு உறுதிதேடிக் கொள்ள வேண்டும்" என்பது கருத்து. மஞ்சு - வெண்மேகம். யாப்பு - வலிமை. ஆய பயன் - பெறுவதற்குரிய சிறந்த பயன். நீத்து விடும்- கைவிட்டுப் போய்விடும்.

**பாடல் : 29**

**புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி**

**இன்னினியே செய்க அறவினை - இன்னினியே**

**நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்**

**சென்றான் எனப்படுத லால்.**

**பொருளுரை**

இப்பொழுதுதான் ஒருவன் நின்றுகொண்டிருந்தான் அப்புறம் உட்கார்ந்தான் அமாம் படுத்தான் அப்புறம் தன் உறவின் முறையார்கள் அலறித் துடிதுடிக்க இறந்து மோய்விட்டான்!' இப்படி உடலின் நிலையாமை பற்றிச் சொல்லப்படுவதனால், 'புல்லின் நுனியின் மேலாக இருக்கும். நீர்த்துளியைப் போன்று யாக்கையும் நிலையாமை உடையது' என்று எண்ணி, இப்பொழுதே அறச்செயல்களைச் செய்வதிலே ஈடுபடுங்கள்.

நின்றுகொண்டிருந்த ஒருவனே சற்று நேரத்தில் தளர்ந்து சோர்ந்து செத்துப்போகவும் காணுகின்றோம். இத்தகைய நிலையாமையினை உடையது உடல். இதனை உணர்ந்து இப்பொழுதே அறவினைகளைச் செய்யத் தொடங்குக!' என்பது கருத்து. இன்னினியே - இப்பொழுதே.

**பாடல் : 30**

**கேளாதே வந்து கிளைகளாய் இல்தோன்றி**
**வாளாதே போவரால் மாந்தர்கள் - வாளாதே**
**சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புள்போல**
**யாக்கை தமர்க்கொழிய நீத்து.**

**பொருளுரை**

மாந்தர்கள், ''யாம் வரட்டுமோ?'' என்று கேளாமலேயே வந்து, உறவினர்களாக ஒரு வீட்டிலே பிறப்பார்கள். பின் 'போகிறோம்' என்று சொல்லாமலேயே தனக்கு இருப்பிட மாயிருந்த மரமானது தனித்துக் கிடக்கத் தொலை தூரத்திற்குப் பறந்து போகின்றதோர் பறவையைப் போலத், தம்

உறவினர்களுக்குத் தம் உடம்பை உயிரின்றித் தனித்து விட்டுவிட்டுத் தாமும் போய்விடுவார்கள்.

‘பறவைகள் மரத்தைக் கைவிட்டு அதனைப்பற்றி ஏதும் நிலையாதே போய்விடும் என்பதை உணர்ந்து, அந்த உடலாற் செய்யத்தகும் நல்ல செயல்களிலே ஈடுபடவேண்டும்’ என்பது கருத்து. சேக்கை - இருப்பிடம்.

## 4. அறன் வலியுறுத்தல்

செல்வம், இளமை, யாக்கை என்பவை நிலையில்லாதன என்பதுபற்றிய செய்திகள் இதுவரை கூறப்பட்டன. இவை போலன்றி, என்றும் நிலையான புகழும் உயிருக்கு உறுதியும் தருவதான அறத்தின் தன்மையை உணர்ந்து, அதனை அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்னும் காரணத்தால், அதனை வலியுறுத்திக் கூறுவது இந்தப் பகுதி.

‘அறம்’ என்பது இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றையும் தருவது என்று முன்பே சொல்லியிருக்கிறோம். “இம்மை“ என்பது இந்த உலக வாழ்வு. ‘மறுமை’ என்பது செய்த வினைகளின் பயனாக நாம் இறந்த பின்னர் அநுபவிக்கும் சுவர்க்கமும் நரகமும் ஆகிய வாழ்வு, வீடு, அனைத்தையும் விட்ட பேரின்பநிலை. இம்மூன்றுமே அறத்தால் வருவதனால் அதனை எவரும் அலட்சியப் படுத்தாமல் மேற்கொள்ளல் வேண்டும்.

**பாடல் : 31**

**அகத்தாரே வாழ்வார்என் றண்ணாந்து நோக்கிப்**

**புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி**

**மிகத்தாம் வருந்தி இருப்பாரே மேலைத்**

**தவத்தால் தவஞ்செய்யா தார்.**

**பொருளுரை**

முன் பிறவிகளிலே செய்த தவத்தின் பயனாக, நல்லறிவு உடையவர்களாகித் தவஞ்செய்பவரோ இளமையிலேயே தவநெறிப்பட்டு உள்ள உறுதியுடன் விளங்குவார்கள். அவ்வாறன்றித் தாமும் தவஞ்செய்வோமென்று உள்ளத்தே உறுதியற்றுப் போலியாக முயல்பவர்களோ, பசியால் துன்புற்று, பெரிய செல்வர்களின் வீடுகளை அண்ணாந்து நோக்கி, "இந்த வீட்டிலுள்ளவர்களே உண்மையாக வாழ்பவர்கள்" என்று சொல்லி, அவரிடம் சென்று இரந்து பெற முயன்றும், உள்ளே தாம் நுழையப் பெறாதவராக, அவ்வீட்டுப் புறக்கடையினைப் பற்றிக்கொண்டு, தம் நிலையை எண்ணி மிகவும் வருந்தி இருப்பவர்களாவார்கள்.

'அவர்கள் துறவியராக முயன்றும் பசித்துயரால் இரந்துண்ண முயன்றதன் காரணமாக உள்ளத்து உறுதியற்ற வராகின்றனர். அது மேலைத்தவம் இன்மையால் வந்தது. அவர் துன்பமும் முழுக்கப் பற்று விடாமையால் நேர்ந்தது" என்பது கருத்து. 'தவமும் தவம் உடையார்க்கு ஆகும்' என்றதும் இது. புறக்கடை-கடைப்புறம் பின்புற வாயில்.

**பாடல் : 32**

**ஆவாம்நாம் ஆக்கம் நசைஇ அறம்மறந்து**

**போவாம்நாம் என்னாப் புன்நெஞ்சே - ஓவாது**

**நின்றுஞற்றி வாழ்தி எனினும்நின் வாழ்நாட்கள்**

**சென்றன செய்வது உரை.**

**பொருளுரை**

ஐயோ! அற்பத்தனமான எண்ணங்களை உடைய நெஞ்சமே! “நாம் மென்மேலும் செல்வம் உடையவர்களாவோம் எண்ணி, அணுவளவும் நிலையில்லாத அந்தச் செல்வத்தை விரும்பினாய். நாம் இறந்து போவோம் என்று எள்ளளவும் நினையயமக அந்தச் செல்வத்தைச் சம்பாழுதும். ஓய்வில்லாமல், நிலையாக அந்தச் செல்வத்தைச் சம்பாதிக்கப் பல்விரறெல்லாம் முயன்று நீர்விழ்வாய் என்றபோதும், நின் இனிச் செய்வதைச் வாழ்நாட்கள் கழிந்து போயின.

சொல்வாயாக! உள்ள நாளெல்லாம் பொருள் தேடுவதிலேயே ஈடுபட்ட ஒருவன் தன் சாவுப் படுக்கையிலே கிடந்து தன் நெஞ்சை நோக்கிப் புலம்புவதாக அமைந்தது இது. அறநெறியினைக் காலங்கடத்தாமல் செய்ய வேண்டும் இன்றேல் இப்படித்தான் வருத்தம் அடைய நேரும் என்று காட்டுவது இது. நசைஇ விரும்பி. புலை-கீழான. ஓவாது - இடையறாது. நின்று- பொருள் ஆர்வத்திலேயே நிலைபெற்று. உஞற்றி - முயற்சி செய்து

**பாடல் : 33**

**வினைப்பயன் வந்தக்கால் வெய்ய உயிரா**
**மனத்தின் அழியுமாம் பேதை - நினைத்ததனைத்**
**தொல்லையது என்றுணர் வாரே தடுமாற்றத்து**
**எல்லை இகந்தொருவு வார்.**

**பொருளுரை**

பழவினையானது வந்து சம்பவித்த காலத்திலே அறிவீனன், கடுமையாகப் பெருமூச்சு விட்டவனாகத், தன் மனத்திலே அதனையே நினைந்து நினைந்து

தளர்ந்து போவான். அந்தத் தீவினைப் பயனை ஆராய்ந்து, அது முற்பிறப்பின் அறக்கேட்டால் வந்து சம்பவித்தது என்று உணர்பவர்களே. பிறவித் துயரின் எல்லையை விட்டு நீங்கிப் பேரின்ப நிலையை அடைவார்கள்.

விவேகம் அற்றவர் பழவினையை நினைந்து வருந்துவார் உள்ளவர் வருந்தார் என்றதால், விவேகமுங்கூட அறவினைப் பயனாலேயே வருவதாகும் என்றனர். தடுமாற்றம் - பிறவித் துயரால் உயிர் சுழன்று படும் வேதனைகள். இகந்து - கடந்து

**பாடல் : 34**

**அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்**
**பெரும் பயனும் ஆற்றவே கொள்க - கரும்பூர்ந்த**
**சாறுபோல் சாலவும் பின்உதவி மற்றதன்**
**கோதுபோல் போகும் உடம்பு.**

**பொருளுரை**

அருமையாகவே பெறுதலையுடையது உடல். அந்த உடலினைப் பெற்றதன் பயனாக. உயிருக்குப் பெரும் பயனாக விளங்கும் தருமங்களையும் நாம் மிகுதியாகவே தேடிக்கொள்ள வேண்டும். கரும்பானது பக்குவமாகத் தன்னை ஆலையிலிட்டு நசுக்கியவர்களுக்குத், தன்னிடத்திற் பொருந்திய சாற்றைக் கொடுத்து இன்புறுத்துவது போலவே, தருமங்களும் உடலை வருத்தித் துறந்தவர்களுக்கு மறுமையிலே சிறந்த இன்பத்தைத் தந்து உதவி செய்யும். இந்த உடலோவென்றால், சாறுபோன கரும்பின் சக்கையைப் போல, உயிர் போனபின் பயனற்றுக் கழித்துப் போடப்படுவதாகிவிடும்.

கருப்பஞ்சாறு போலத் தரும காரியங்களிலே ஈடுபடுபவர்க்கு அறமானது உதவும் ஆனால், அப்படி அறஞ் செய்யாத உடலோ ஒன்றுக்கும் உதவாது போய்விடும் என்பது கருத்து. பயத்தால் பயனால் ஊர்ந்த உண்டானபின் -இங்கு மறுமை இன்பத்தைக் குறிக்கும்.

**பாடல் : 35**

**கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்**

**துரும்பெழுந்து வேம்கால் துயராண் டுழவார்**

**வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்**

**வருங்கால் பரிவ திலர்.**

**பொருளுரை**

கரும்பை ஆலையிலே வைத்து நசுக்கி வெல்லக் கட்டியினை முற்காலத்திலே எடுத்துக் கொண்டவர்கள். பின்னர் அதன் சக்கையாகிய துரும்பு நெருப்பிலே பொருந்தி வேகும்பொழுது, அவ்விடத்தே அதனைக் கண்டு, கொஞ்சமும் துயரப்படமாட்டார்கள். அது போலவே உடம்பினை இச்சைகளுக்கு ஆட்படாமல் வருத்தி, உடம்பினாலாகும் உண்மைப் பயனான அறநெறிகளைக் கைக்கொண்டவர்கள், கூற்றமானது தம்மீது வருகின்ற காலத்திலே, உடம்பை விடுவது குறித்து வருத்தம் அடையமாட்டார்கள்.

கரும்பின் பயன் சாறு அதனைப் பெற்றவர் சக்கை எரிவது கண்டு வருந்தார். அதேபோல, உடம்பின் பயன் நல்வினை செய்தல் அதனைச்

செய்தவர் சாவுக்கு வருந்தார் செய்யாதவரோ வருந்துவர் என்பது கருத்து. கட்டி - வெல்லக் கட்டி துரும்பு - கரும்புச் சக்கை. பரிவது - வருந்துவது.

**பாடல் : 36**

**இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது**

**பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி**

**ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்**

**மருவுமின் மாண்டார் அறம்.**

**பொருளுரை**

இன்றைக்கோ, அன்றைக்கோ, என்றைக்கோ என்று எல்லாம் நினையாமல், கூற்றமானது உயிரைக் கொள்ளும் பொருட்டாக நம் பின்னேயே வந்து உரிய சமயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றது. இங்ஙனம் உண்மையை நினைந்து, தீய செயல்களிலே ஈடுபடுவதை உடனேயே விட்டுவிடுங்கள். செயல்மையுடைய சான்றோர்கள் கடைப்பிடித்த தரும மார்க்கத்தில் உங்களால் முடிந்த வகைகளில் எல்லாம் உடனேயே ஈடுபடுங்கள்.

ஒல்லும் வகையால் - தருமம், பொருளுள்ள அளவிற்கு ஏற்பவும், துறவறம் உடலின் நிலைக்கு ஏற்பவும் செய்தல். “ஆயுள் நிலையல்லவென்பதை உணர்ந்து, தீய செயல்களை விலக்கிச் சான்றோர் கடைப்பிடித்த அறவழிகளிலே உள்ளத்தைச் செலுத்திச் செயல்படவேண்டும்“ என்பது கருத்து.

**பாடல் : 37**

**மக்களா லாய பெரும்பயனும் ஆயுங்கால்**

**எத்துணையும் ஆற்றப் பலவானால் - தொக்க**

**உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகாதுஉம்பர்க்**

**கிடந்துண்ணப் பண்ணப் படும்.**

**பொருளுரை**

மக்களாக உடலெடுத்துப் பிறந்ததனால் செய்யத்தக்க பெருமையாகிய பயன்களும் ஆராயுங்காலத்தே. எவ்வளவினும் மிகவும் பலவாகும். ஆதலினாலே, நரம்பு தசை முதலியவை சேர்ந்த உடலின் நன்மைக்காகவே, உபயோகமான செயல்களைச் செய்து நடவாமல், மேலுலகத்திலே இருந்து அநுபவிக்கும்படியான பேரின்பத்தைக் கருதி, அதனைத் தருகின்ற அறவழியிலேயே அனைவரும் செயற்பட வேண்டும்.

'மக்கள்' என்றது, மனித உடம்பை. உடலினாற் செய்யும் நற்காரியங்கள் பலவிருக்கவும், அவற்றைச் செய்யாமல் உடலிச்சைகளிலேயே மனஞ்செலுத்துவது கூடாது மறுமைக்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும் என்பது கருத்து. தொக்க-தொகுத்த. ஒப்புரவு-உபகாரம் நன்மை தரும் செயல். உம்பர் மேலுலகம் சுவர்க்கம

**பாடல் : 38**

**உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி**

**இறப்ப நிழற்பயந் தாஅங்கு - அறப்பயனும்**

**தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்**

**வான்சிறிதாப் போர்த்து விடும்.**

**பொருளுரை**

மிகமிகச் சிறு அளவினதாகிய ஓர் ஆலம் விதையானது முளைத்துக் கிளைகள் நெருங்கி, மிகவும் நிழல்தந்து பெரிய மரமாகி விளங்குவது போன்றது தருமத்தின் பயனும் அந்த அறப்பயன் தன் செயல் அளவிலே அது செய்யப்பட்டுச் சேர்ந்த காலத்து, வானகமும் சிறியதாகுமாறு எங்கும் கவிந்து, செய்தவனுக்கு மிகுந்த சிறப்பைத் தருவதாகும்.

'தருமம் செய்வதையும் தகுதியுடையவர்களுக்கே செய்தால் பெரும்பயன் விளையும்' என்பது கருத்து. உறக்கும் துணையது- கிள்ளி எடுக்கின்ற அளவிற்குச் சிறியது. இறப்ப- மிகுதியாக. போர்த்து-கவிந்து பரந்து.

**பாடல் : 39**

**வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்**

**வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்**

**வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்**

**வைகலை வைத்துணரா தார்.**

**பொருளுரை**

நாள்தோறும் கடந்து போகும் நாட்கழிவைத் தம் வாழ்நாளின் மேல் செல்லுதலாக வைத்து, அந்த நாட் கழிவினைப் பற்றிய உண்மையை அறியாதவர்கள், நாள்தோறும் நாட்கழிவானது தவறாது வந்துகொண்டிருக்கக் கண்டும், அதன் உண்மையான இயல்பினை உணர மாட்டார்கள். நாள்தோறும் ஆயுள் கழிந்து போதலை இருக்கிறதென்று தம் அறியாமையால் நினைந்து, அவர்கள் எல்லாரும் அற்ப மகிழ்ச்சியினையே அடைவார்கள்.

‘நாள் கழிவதுடன் தம் ஆயுளும் கழிந்துகொண்டு போவதை உணர்ந்து, அறநெறியிலே ஈடுபட்டு மறுமைப் பயனுக்கு வழிகோல வேண்டும்’ என்பது இது.

**பாடல் : 40**

**மான அருங்கலம் நீக்கி இரவென்னும்**
**ஈன இளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்**
**ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந்து இவ்வுடம்பு**
**நீட்டித்து நிற்கும் எனின்.**

**பொருளுரை**

‘ஈனத்தனமான காரியங்களைச் செய்து இந்த உடலைப் போற்றிவந்த போதிலும், இந்த உடலானது, தன்பால் உறுதிசேரப் பெற்றதாகி, நீடித்த காலம் நிலைத்து நிற்பதென்று சொல்ல முடியாது. அப்படி நிலைத்திருக்குமானால், மானம் என்று சொல்லப்படும் அருமையான அணிகலனை ஒதுக்கி விட்டு. இரப்பது என்று சொல்லுகின்ற தாழ்மையான மானக் கேட்டுக்கு உட்பட்டும், பெரும்பாலும் யானும் வாழ்வேன்

‘எவ்வளவுதான் ஊட்டிப் பேணினாலும் உடல் நிலையற்றது் ஆதலால், அதனை நிலைக்கச் செய்யக் கருதி மானங்கெட்ட செயல்களிலே எவரும் ஈடுபடுதல் கூடாது் அதனை ஒறுத்து அறநெறிகளிலே உறுதியுடன் ஈடுபடுதல் வேண்டும்’ என்பது கருத்து. இரவு-இரத்தல். இளிவு - தாழ்ச்சி.

## பழமொழி நானூறு

### 1. அருகன் அடி போற்றுவோம்

அவித்து அடக்குவதற்கு அருமையானவை ஆசைகள். அந்த ஆசைகளை அவித்து, மெய்ஞ்ஞானத்தைக் குற்றமற உணர்ந்தவன் அருகதேவன். பரந்தகடல் சூழ்ந்த அகன்ற இடத்தையுடைய இப் பெரிய உலகத்திலே அவன் திருவடி களைத் தமக்கு உரிமையாகும் படியாகத் தம் உள்ளத்திலே தெளிந்து உணர்ந்தவர்கள் எவரோ, அவர்களே பெரியவர்கள். பெரிய செயல் செய்த உடம்பினுள் இருக்கும் உயிரும் பெருமை உடையதாயிருக்கும் அல்லவா! அது போலவே, பெரிய செயல் செய்த அவர்களின் உயர்வும் பெரியதாகும்.

**"அரிதவித்து ஆசின்று உணர்ந்தவன் பாதம்**

**விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்து,**

**உரியதனிற் கண்டுணர்ந்தார் ஓக்கமே, போலப்**

**பெரியதன் ஆவி பெரிது"**

உடலின் சிறந்த செயல்கள் உயிருக்கும் சிறப்பைத் தரும். "பெரிய தன் ஆவி பெரிது" என்பது பழமொழி. ஆசு-குற்றம். செயற்கரிய செய்வாரே பெரியர் இவ்வுலகில் ஐம்புல இச்சை களை அவித்தலே செயற்கரிய பெருஞ்செயல் அச் செயலைச் செய்து உயர்ந்த பெரியோரினின் திருவடிகளை உளங்கொள்வோம். இப்படி உளம் கொள்பவரும் ஆசைகளை அவித்துப் பெரியவராக விளங்கிப் பெருமையடைவர் என்பதும் இதன் கருத்தாகும்.

**2. மேல்நிலை அடைதல்**

மணல் மேடுகளிலே விளங்கும் அடும்பின் கொடிகளிலே, பூக்கள் மலிந்திருக்கும் கடற்கரை நாட்டிற்கு உரியவனே! மிகுதியான பழிச் செயல்களை ஒருவன் அதிகமாகச் செய்து விட்டால், மீண்டும் அந்தப் பழியைப் போக்கிக் கொள்ளத்தக்க வழிகளையும் அவன் அறிந்திருக்க வேண்டும். அப்படி

அறியாதவன் மேல்நிலையடைதல் என்பது ஒரு போதும் நடவாததாகும். ‘அகலினுள் உள்ள நீரிலே நீர் துளும்பக் குளித்துத் தூய்மை யாவேன்’ என்பது போல, அது ஒரு போதும் நடக்க முடியாததேயாகும்.

**“மிக்க பழிபெரிதும் செய்தக்கால், மீட்டதற்குத்**

**தக்கது அறியார், தலைசிறத்தல்--எக்கர் அடும்பு**

**அலரும் சேர்ப்ப! “அகலுள் நீ ராலே**

**துடும்பல் எறிந்து விடல்”**

பழியொடுபட்ட வாழ்வு பயனற்ற வாழ்வு. “அகலுள் நீராலே துடும்பல் எறிந்து விடல்“ என்பது பழமொழி. துடும்பல் எறிதல்-நீர் துளும்பிவிழக் குதித்து நீராடல்.

### 3. அறநெறியாளனுக்கு உபதேசம்

மாறுபாடில்லாத செயல்களின் மூலமாகவே ஒருவன் பெரும் பொருள் பெற்றனன். அந்தப் பொருள் வந்து சேர்ந்தவகையும் அதற்கான முதலீடும் அப்படியே அறநெறிக்கு மாறுபாடில்லாதது. அங்ஙனமானால், ‘பலதிறப்பட்ட வகைகளால் எல்லாம் அறம் செய்வாயாக’ என அவனிடம் சான்றோர் சினந்து கூறவேண்டாம். அப்படி அவர் கூறினாலும், அது சர்க்கரையிற் பாலின் சுவை மயக்கமடையும் நிலைமையினைப் போன்றதே யாகும்.

**“தக்கமில் செய்கைப் பொருள்பெற்றால், அப்பொருள்**

**தொக்க வகையுந் முதலும் அதுவானால்,**

**‘மிக்க வகையால் அறஞ்செய்க!’ என வெகுடல்**

**அக்காரம் பால்செருக்கும் ஆறு”**

பாலிலே சர்க்கரை சேர்த்ததும் இனிப்புச் சுவை கூடி, அது மேலும் விரும்பப்படுவது போல, அத்தகையேனைத் தரும காரியங்களிலே ஈடுபடத் தூண்டுவதனால், அவன் மேலும் சிறப்பே அடைவான். “அக்காரம் பால் செருக்கும் ஆறு“ என்பது பழமொழி.

### 4. தளராதவன் செல்வனாவான்

ஒருவனிடம் உள்ளது அவனுடைய உள்ளூர்க்காரர்கள் மிகச்சிறிய அளவினதே என்று உணர்ந்ததான சிறு முதலே என்றாலும், அதனையும் இகழ்ந்து ஒதுக்காமல் பேணி அவன் தன் தொழிலை முயற்சியுடன் வளர்க்க வேண்டும். விளங்கும் அணிகலன்களை அணிந்தவளே! பழைய ஊரிலேயுள்ள ஆரவாரமிகுந்த கடைத்தெருவிலே மேய்ந்த பழைய கன்றே என்றாலும், அதுவும், பின் ஒரு காலத்திலே வளர்ந்து எருதாகிச் சிறப்படைதலும் உண்டல்லவோ?

**“உள்ளூா ரவரால் உணர்ந்தாம் முதலெனினும்**
**எள்ளாமை வேண்டும் இலங்கிழாய்!--தள்ளாது**
**அழுங்கல் முதுபதி அங்காடி மேயும்**
**பழங்கன்று ஏறாதலும் உண்டு”**

கைமுதல் சிறிதேயானாலும், விடாமுயற்சியினால் அதனைப் பெரிதாக்கித், தன்னை இகழ்ந்த ஊரும் மெச்ச வாழலாம். முயற்சிதான் வேண்டும். “அங்காடி மேயும் பழங்கன்று ஏறாதலும் உண்டு“ என்பது பழமொழி.

### 5. கொடியவன் பார்க்கமாட்டான்

பெரிய புன்னை மரத்திலுள்ள பூக்களின் நறுமணமானது, புன்மையான புலால் நாற்றத்தினைப் போக்கி விடுகின்ற கடற்துறைகளை உடையவனே! சிறு

பிராணிகளை அடித்துத் தின்னும்போது அவை வருந்தும். அதுகண்டு, தின்னும் பெரிய விலங்குகள் அஞ்சி அவற்றைத் தின்னாது போவதில்லை. அதுபோலவே, எப்போதும் கொடிய செயல்களையே செய்பவரான கீழ்த்தரமானவர்கள், தம்மேல் பெரும் பழிச்சொற்கள் ஏறிக்கொண்டே போவதைக்கண்டாலுங்கூட அதனைப் பொருட்படுத்தாது, அவற்றிலேயே மீண்டும் மீண்டும் ஈடுபடுவார்கள்.

**"கருந்தொழிலர் ஆய கடையாயார் தம்மேல்**
**பெரும்பழி யேறுவ பேணார்--இரும்புன்னை**
**புன்புலால் தீர்க்கும் துறைவ! மற்று அஞ்சாதே**
**தின்பது அழுவதன் கண்"**

கீழ்மக்கள் கீழ்த்தரமான செயல்களைப் பழிக்கு அஞ்சியும் கூடக் கைவிட மாட்டார். "அஞ்சாதே தின்பது அழுவதன் கண்" என்பது பழமொழி.

### 6. தருமம் செய்யுங்கள்

தோன்றுவதற்கு அருமை உடையதாகிய மக்கட் பிறப்பினைப் பெற்றுள்ளோம். அதனால், முடிந்த வகைகளிலே எல்லாம் தரும காரியங்களைச் செய்துவருக. கொஞ்சமும் மாற்றுவதற்கு இயலாதவண்ணம் அஞ்சப்படும் நோய், முதுமை, அருங்கூற்று ஆகியவை எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து இறக்கும்படியான நிலையிலே தருமஞ் செய்யலாமென்று ஒதுக்கிவைத்தால், அந்த வேளையிலே, தருமம் செய்ய இயலாதபடி அறிவுமயக்கமும் வந்து சேர்ந்துவிடலாம்.

**"தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்**
**ஆற்றும் துணையும் அறஞ்செய்க!--மாற்றின்றி**
**அஞ்சும் பிணிமூப்பு அருங்கூற் றுடனியைந்து**

**துஞ்ச வருமே துயக்கு”**

யாக்கையின் நிலையாமை கூறினார். தருமத்தை இளமையிலேயே செய்க் பின்னர் பார்த்துக்கொள்ளலாமென்றால் அது முடியாதும் போகலாம். “அஞ்சும் பிணி, மூப்பு அருங்கூற்று உடனியைந்து துஞ்ச வருமே துயக்கு“ என்பது பழமொழி.

**7. கோழைக்குப் பாதுகாப்பே கிடையாது**

வலிமை உடையவர்களின் துணையுடையவர்கள் என்றாலும், தம் அளவிலே வலிமையில்லாதவருக்கு, வலிமையைப் பெய்து, அவரைப் புகழிலே நிலைபெறுத்துதல் எவராலும் ஆகுமோ?ஆகவே ஆகாது வெண் மேகங்கள் தங்கும் சோலைகளையு டைய மலை நாடனே! எப்படிப்பட்ட துணைகளை உடையவர்களானாலும், உள்ளத்திலே அஞ்சி நடுங் கும் கோழைகளாக இருப்பவர்களுக்குப், பாதுகாக்கும் அரண் என்பது எதுவுமே கிடையாது என்று அறிவாயாக.

**“வன்சார்பு உடையர் எனினும் வலிபெய்து**

**தஞ்சார்பு இலாதாரைத் தேசூன்றல் ஆகுமோ**

**மஞ்சுசூழ் சோலை மலைநாட! யார்க்கானும்,**

**அஞ்சவார்க் கில்லை அரண்”**

‘வலிமை’ என்பது ஒருவர்க்குத் தம்பால் அமைவதேயல்லாமல், பிறர் ஊட்டலாலும், அரண் முதலிய பாதுகாப்பாலும், துணையாலும் அமைவதன்று “அஞ்சுவார்க்கு இல்லை அரண்“ என்பது பழமொழி.

**8. குடிப் பெருமையின் சிறப்பு**

தாயினாலே ஆனாலும், தந்தையினாலே ஆனாலும், யாதாயினும் ஒரு சிறப்புக் கூறப்படுதல் இல்லாமலே, தம் வாயினாலேயே தம்மைப் பெருமையாகக் கூறும் தற்புகழ்ச்சி யாளர்களைப் பிறரும் புகழ்தல், புகழ்பவருக்கு ஒரு துன்பமும் தருவதன்று, என்றாலும், அது அடுப்பின் ஓரத்திலே முடங்கிக் கிடக்கும் நாயினைப் புலியாகும் என்று சொல்வது போலப் பொருத்தமில்லாத பொய்ப் புகழ்ச்சியே யாகும்.

**"தாயானும் தந்தையா லானும் மிகவின்றி**

**வாயின்மீக் கூறும் அவர்களை ஏத்துதல்,**

**நோயின்று எனினும், அடுப்பின் கடைமுடங்கும்**

**நாயைப் புலியாம் எனல்"**

குடிப்பெருமை இல்லாதவர் உயர்ந்த பண்பினர் ஆதல் இல்லை. அவருடைய போலித் தோற்றங்கண்டு புகழ்வதெல்லாம், பொய்யான புகழ்ச்சியே அல்லாமல் உண்மைப் புகழ்ச்சியாகாது ."அடுப்பின் கடைமுடங்கும் நாயைப் புலியாம் எனல்" என்பது பழமொழி.

**9. மகனுக்குச் செய்யவேண்டியது**

ஒரு தகப்பன் எந்த வகையிலே யானாலும், தன் மக்களைச் செம்மையான நெறியிலேயே மேம்பட்டு நிற்குமாறு அதற்குத் தகுதியானவற்றையே செய்தல் வேண்டும். தான் செய்த பாவையே ஒரு சிற்பிக்குப் பின்னர் தெய்வமாவது போல, அப்படிச் செந்நெறியிலே மக்களை நிலையாக நிற்கச் செய்தால், அம்மக்கள் பிற்காலத்தில் தந்தையாலும் போற்றப்படும் உயர்ந்த பெருநிலையினை அடைவார்கள்.

**“எந்நெறி யானும் இறைவன்றன்**

**மக்களைச்செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும் அந்நெறி**

**மான்சேர்ந்த நோக்கினாய்! ஆங்க, அணங்காகும்**

**தான்செய்த பாவை தனக்கு”**

மக்களைச் செந்நெறிமேற் செல்லுதலில் தகுதியுடைய வராக்குதல்தான் ஒரு தந்தையின் கடமை. அணங்கு - தெய்வம். பாவை-செதுக்கிய சிலை “அணங்காகும் தான்செய்த பாவை தனக்கு“ என்பது இதிலுள்ள பழமொழி. “இறைவன்“ என்றதால், ஓர் அரசன் தன் குடிமக்களைச் செந்நெறிமேல் நிற்கச் செய்ய வேண்டும் என்பதும் இதனால் அறியப்படும்.

**10. முகஸ்துதிக்கு மகிழ வேண்டாம்**

மூங்கில்கள் அடர்ந்திருக்கும் மலைகளுக்கு உரியவனே! தம்மவரேயானாலும், ஒருவர் தம்மைப் புகழ்ந்து பேசுகின்ற சமயத்திலே, அந்த முகஸ்துதிக்கு மனமகிழலாகாது. அப்படிப் பேசுதலை உடனேயே தடுத்துவிடவேண்டும். தம்முடையனவே என்றாலும், பொருத்தமில்லாத ஆபரணங்களை எவரும் அணிவ தில்லை அல்லவா?

**“தமரேயும் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்**

**அமராது அதனை அகற்றலே வேண்டும்.**

**அமையாரும் வெற்ப! அணியாரே தம்மைத்**

**தமவேனும் கொள்ளாக் கலம்”**

முகஸ்தியை விரும்பினால், உள்ளத்து அகந்தையே நிறையும். அதனால், அது தம்மவராலே சொல்லப்பட்டாலும் தம் நல்ல ஒழுக்கத்திற்கு ஊறு

செய்வதினால் ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று என்பதாம். “அணியாரே, தம்மைத் தமவேனும் கொள் ளாக் கலம்“ என்பது பழமொழி. கொள்ளாக் கலம் -பொருந்தாத நகைகள்.

## முதுமொழிக்காஞ்சி

நிலையாமையை உணர்த்தும். உலகியல் அனுபவம் உணர்த்தலான இப்பெயர் உடைத்து பத்துப் பாடல்களையுடைய பத்து பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பத்தும் ‘‘ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம்’’ என ஒரே மாதிரி தொடங்குகின்றன. ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம். சிறுகாமை சிறந்ததன்று முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று. பதினெண்கீழ்கணக்கு நூல்களுள் ஒன்றான இந்நூல் உலகியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்து இயம்புகிறது. இந்நூல் அறவுரைக்கோவை எனவும் வழங்கப்படுகிறது. இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொர் அதிகாரத்திலும் பத்து செய்யுள்கள் உள்ளன. இந்நூல் நூறு பாடல்களால் ஆனது. காஞ்சி என்ற புறத்திணையால் பெயர் பெற்ற நூல் முதுமொழிக்காஞ்சி கற்போரின் குற்றங்களை நீக்கி அறம், பொருள், இன்பங்களை அடைவதற்கான வழிமுறைகளை அறிவுரைகளாகக் கூறி நல்வழிப்படுத்தும். இந்நூல் குறள் தாழிசையில் பத்துப் பத்துச் செய்யுட்கள் அடங்கிய பத்து பகுதிகளைக் கொண்டது. அதே போல் ஒவ்வொரு பத்தும் ஆர்கலி உலகத்து எனத் தொடங்குகிறது. ஆசிரியரின் பெயர் – மதுரைக் கூடலூர்கிழார்.. பிறந்த ஊர் – கூடலூர். சிறப்பு – இவரது பாடல்களை நச்சினார்க்கினியர் முதலிய நல்லுரையாசிரியர்கள் மேற்கொள்களாகக் கையாண்டுள்ளார்கள். காலம் – சங்க காலத்திறகப் பின் வாழ்ந்தவர்

## 1. சிறந்த பத்து

**பாடல்: 1.**

**ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**

**ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை**

**விளக்கம்**

கடல் சூழ்ந்த உலகத்து மக்கட்கெல்லாம் ஓதலினும் மிக்க சிறப்புடைத்து ஆசாரமுடைமை.

**"ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்" - ஔவையார்**

**"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**

**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" - திருக்குறள்**

ஆர்கலி - நிறைந்த ஓசை - நிறைந்த ஓசையையுடையது - கடல், வினைத்தொகைப புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை சிந்தன்று - உடன்பாட்டு இறந்தகால வினைமுற்று, இதில் அன்சாரியை ஆசாரம் விலக்கியன ஒழித்து வீத்தன செய்தல், சீலம்.

**பாடல்: 2.**

**காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்**

**விளக்கம்**

பிறர் தன்மேற் செய்யும்காதலினும் சிறந்தது கற்றவரால் கண்ணஞ்சப்படுதல்.

காதல் - விருப்பம், கண்ணஞ்சுதல் - அஞ்சுதல், ஒருவன் தான் பெற்றிருக்கும் மதிப்பினாலே பிறர் அஞ்சிநடத்தல் கண்ணஞ்சப்படுதல் - விளர் அஞ்சி நடக்கத்தக்க நன்குமதிப்பு.

**பாடல்: 3.**

**மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை**

**விளக்கம்**

தானாக ஒன்றை மதியுடைமையான் அறியும் அறிவினும் மிக்கசிறப்புடைத்துத் தான் கற்றதனைக் கடைப்பிடித்திருத்தல்.

கற்ற கல்வியை மறவாமையானது அறிவு நுட்பத்தைக் காட்டிலும் சிறந்தது. அறிவு நுட்பம் மாத்திரம் அமைத்திருப்பது போதாது. கற்ற கல்வியை மறவாமையும் வேண்டும். நூட்பமாகப் பொருள்களை மேலு மேலும் நுனித்தறிய வல்லவனாயினும். ஒருவன் முன் குருமுகமாகக் கற்றதை மறவாமல் போற்றல் வேண்டும்.

**பாடல்: 4.**

**வண்மையிற் சிறந்தன்று வாய்மை உடைமை**

**விளக்கம்**

செல்வத்தினும் மிக்கசிறப்புடைத்து மெய்யுடைமை.

செல்வத்தாலாகும் நன்மையைக் காட்டிலும் வாய்மையாலாகும் நன்மை சிறந்தது.

**பாடல்: 5.**

**இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை**

**விளக்கம்**

இளமையினும் மிக்கசிறப்புடைத்து உடம்பு நோயின்மை.

நோயோடு கூடியதானின் இளமை வேண்டா, நோயில்லையாயின் முதுமையும் அமையும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றது ஒரு மூதுரை.

**பாடல்: 6.**

**நலனுடை மையின் நாணுச் சிறந்தன்று**

**விளக்கம்**

அழகுடைமையினும் மிக்கசிறப்புடைத்து நாணுடைமை.

"அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கு" ஆதலின் "நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்" "நலஞ்சும் நாணின்மை நின்றக்கடை" ஆதலால் நாணுடைமை நலனுடைமையின் சிறந்ததாம்.

நாணு என்பதில் உசாரியை நாணாவது "செய்யத் தககதனவற்றின்கண் உள்ள மொடுங்குதல்".

**பாடல்: 7.**

**குலனுடை மையின் கற்புச் சிறந்தன்று**

**விளக்கம்**

நல்ல குலமுடைமையினும்கல்வியுடைமை சிறப்புடைத்து. தற்செய்கை - தன்னைப் பகைவரினும் பெருகச் செய்தல், அதாவது அங்கங்களை அபிவிர்த்தி செய்தல்.

அரசன் தன் அங்கங்களை அபிவிர்த்தி செய்தால் பகைவர் தாமே அஞ்சி அடங்குவர், தய்டோபாயத்தை அனுசரிக்கும் அவசியம் இல்லை. ஆகவே பகைவரைத் தண்டிக்கப் புகுவதைக் காட்டிலும் அரசன் தன் அங்கங்களைப் பலப்படுத்துவதே சிறப்புடையது என்பதாம்.

**பாடல்: 8.**

**கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று**

**விளக்கம்**

தான் ஒன்றைக் கற்குமதனினும்சிறப்புடைத்துக் கற்றாரை வழிபாடு செய்தல்.

ஒருவன் கற்றலும் வேண்டும், கற்றாரை வழிபடுதலும் வேண்டும், இவ்விரண்டிலும் வழிபாடு சிறந்ததாம். வழிபாடு செய்தலால் குருவருள் உண்டாகும். அ.ஃ.துண்டாகவே தான் கற்கலுற்றது கைகூடும். தண்டாப்பத்திலும் இந்நூல் கற்றல் வேண்டுவோன் வழிபாடு தீண்டான் என்றுரைக்கின்றது.

**பாடல்: 9.**

**செற்றாரைச் செறுத்தலின் கற்செய்கை சிறந்தன்று**

**விளக்கம்**

பகைவரைச் செலுத்தலினும் மிக்கசிறப்புடைத்துத் தன்னைப் பெருகச்செய்தல்.

**பாடல்: 10.**

**முற்பெரு கலின்பின் சிறுகாமை சிறந்தன்று**

**விளக்கம்**

செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின்அழிதலின் நின்ற நிலையிற் சிறுகாமை சிறப்புடைத்து.

செல்வம், உள்ள அளவினும் ஓங்கி வளர்ந்து அழிவதைக் காட்டிலும் உள்ள அளவிற் குறையாதிருப்பதே சிறந்தது. ''தலைவி னிழிந்த மயிரனையர் மாந்தர், நிலையின் இழிந்தக் கடை'' (திருக்குறள்) ஆகையால், நின்ற நிலையில் தாழாமையே சிறந்தது. ஆகவே நின்ற நிலையில் தாழாதபடி முயற்சி செய்தால் வேண்டும் என்பதாம்.

## 2. அறிவுப்பத்து

**பாடல்: 1.**

**ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**

**பேரில் பிறந்தமை ஈரத்தின் அறிப**

**விளக்கம்**

கடல் சூழ்ந்த உலகத்து மக்களெல்லாருள்ளும் ஒருவன் பெருங்குடிப்பிறந்தமையை அவன் ஈரமுடைமையானே அறிவர்.

“நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக், குலத்தின் கண் ஐயப்படும்” (திருக்கறள்) ஆகையால், ஒருவன் உயர்குடியில் பிறந்தவன் என்பதற்கு அவனிடத்துள்ள கருணையே அறிகுறி.

**பாடல்: 2.**

**ஈரம் உடைமை ஈகையின் அறிப**

**விளக்கம்**

ஒருவன் நெஞ்சின்கண் ஈரமுடையான் என்பதனை அவன் பிறர்க்குக் கொடுக்கும் கொடையினானே அறிவர்.

ஒருவனிடத்துக்கு கருணை உண்டு என்பதற்கு அவனுடைய ஈகையே அறிகுறி.

**பாடல்: 3.**

**சேரா நல்நட்(பு) உதவியின் அறிப**

**விளக்கம்**

ஒருவன் தப்பாத கடைப்பிடியுடைய நல்ல நட்பினையுடையன் என்பது அவன் நட்டார்க்குச் செய்யும் உதவியினானே அறிவர்.

ஒருவர் ஒருவரோடு உறுதியான நட்புடையவர் என்பதற்கு அவர் அவருக்கு ஆபத்திலே செய்யும் உதவியே அறிகுறி. ‘‘ஆபத்திலே அறியலாம் அருமை சினேகிதனை’’ என்றது ஓர் மூதுரை.

**பாடல்: 4.**

**கற்றது உடைமை காட்சியின் அறிப**

**விளக்கம்**

ஒருவனது கல்வியைஅவன்றன் அறிவினானே அறிவர்.

‘‘மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு’’ ஆகையால் ஒருவன் கற்ற கல்வியின் அளவிற்கு அவனுடைய அறிவின் அளவே அறிகுறி.

**பாடல்: 5.**

**ஏற்ற முடைமை எதிர்கொளின் அறிப**

**விளக்கம்**

ஒருவன் ஆராய்ந்து துணியவல்லன் என்பதனை அவன் முற்கொண்டு பாதுகாக்கும் காப்பானேஅறிவர்.

ஏற்றமுடைமை என்று பாடங்கொண்டு, ஒருவன் குடிப்பிறப்பு முதலிய உயர்வுடையன் என்பதை அவன் தன்னிடம் வருவாரை எதிர்கொண்டு செய்யும உபசாரத்தால் அறிக என்றம் பொருளுரைப்பர். அவ்வுபசாரங்கள் ‘‘இருக்கை

யெழலும் எதிர்செலவும் ஏனை விடுப்ப ஒழிதலோ டின்ன குடிப்பிறந்தார் குன்றா வொழுக்கமாக் கொண்டார்'' (நாலடியார்) என்பதனால் அறியப்படும்.

**பாடல்: 6.**

**சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப**

**விளக்கம்**

சிறுமையுடைய குடியின்கண் பிறந்தான் என்பதனை அவன் செருக்கினானே அறிவர்.

''பெருமை பெருமி மின்மை சிறுமை, பெருமிதம் ஊர்ந்து விடல்'' ஆதலால், ஒருவன் இழிகுடியில் பிறந்தவன் என்பதற்கு அவன் கொண்டுள்ள கர்வமே அறிகுறியாகும்.

**பாடல்: 7.**

**குத்திரம் செய்தலின் கள்வனாதல் அறிப**

**விளக்கம்**

ஒருவனை ஒருவன்படிறுசெய்யும் படிற்றால் அவன் கள்வனாதல் அறிவர்.

ஒருவன் களவு செய்யும் கருத்தினன் என்பதற்கு அவனுடைய வஞ்சகச் செயலே அறிகுறி.

**பாடல்: 8.**

**சொற்சோர்வு உடைமையின் எச்சோர்வும் அறிப**

**விளக்கம்**

சொற் சோர்வுபடச் சொல்லுதலான் அவனுடையஎல்லாச் சோர்வையும் அறிவர்.

ஒருவனிடத்தில் பலவித சோர்வுகள் உண்டு என்பதற்கு அவனுடைய சொற்சோர்வே அறிகுறி.

**பாடல்: 9.**

**அறிவுசோர்வு உடைமையின் பிறிதுசோர்வும் அறிப**

**விளக்கம்**

ஒருவன் தன்னறிவின் கண் சோர்வுடைமையின் எல்லாச் சோர்வுடையன் என்ப தறிவர்.

ஒருவன் பலவகைத் தளர்ச்சிளையும் உடையவன் என்பதற்கு அவனுடைய அறிவின் தளர்ச்சியே அறிகுறி.

**பாடல்: 10.**

**சீருடை யாண்மை செய்கையின் அறிப**

**விளக்கம்**

ஒருவன் புகழுடைய ஆண்வினைத் தன்மையை அவன் செய்கையான் அறிவர்.

ஒருவன் ஆண்மையுடையவன் என்பதற்கு அவனுடைய செயல்களே அறிகுறியாம்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | திருக்குறள் பற்றிக் குறிப்பு வரைக. | K4 | CO5 | PO4 |
| 2 | ஒரு மனிதனுக்கு கல்வி எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றிக் கூறுக. | K3 | CO2 | PO2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வயதில் மூத்தவர்கள் அருகில் இருபபதினால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக. | K1 | CO2 | PO1 |
| 4 | வலிமை அறிந்து செயல்பட வேண்டும் எனறு அவர்கள் கூறும் கருத்திணை விவரி. | K4 | CO3 | PO2 |
| 5 | சோம்பலினால் ஏற்படும் விளைவுகளை வள்ளுவர் வழி நின்று ஆராய்க. | K1 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | காலமறிந்து செயல்பட வேண்டும் என்று வள்ளுவர் சூறும் கருத்திணைத் தெளிவுப்படுத்துன. | K4 | CO1 | PO4 |
| 2 | சுற்றந்தாழால் என்ற அதிகாரத்தில் கூறப்படும் செய்தினைத் தொகுத்து எழுதுக. | K3 | CO4 | PO5 |
| 3 | ஊக்கமுடைமை என்ற அதிகாத்தின் மூலம் அறிந்த செய்திஜனைப் பற்றி விவரி. | k5 | CO5 | PO2 |
| 4 | முகக்குறிப்பின் மூலம் மனித உள்ளத்தை அறியலாம் என்பதைப்பற்றி விளக்குக. | K3 | CO4 | PO1 |
| 5 | சிற்றினமி சேர்வதால் ஏற்படும் விளைவுகளைக் கூறுக. | K4 | CO3 | PO3 |

## அலகு - 2

## இன்னா நாற்பது

### இன்னா நாற்பது விளக்கம்

ஆசிரியர் = கபிலர், பாடல்கள் = 1 + 40, பாவகை = வெண்பா இன்னா = துன்பம். இன்னது இன்னா என நாற்பது பாடல்களில் கூறுவதால் இன்னாநாற்பது எனப்படுகிறது. கடவுள் வாழ்த்தில் சிவன், பலராமன், திருமால், முருகன் என்னும் நான்கு கடவுளரையும் வணங்காமை துன்பம் எனக் கூறுகிறார். இந்நூல் துன்பம் கொடுக்கும் செயல்களை தொகுத்துக் கூறும் நூல். இந்நூல் அம்மை என்ற வனப்பிற்கு உரியது. கபிலரிடம் சைவவைணவ பேதம் இல்லை. சங்க கால கபிலரும், இவரும் வேறு வேறு. இந்நூலில் 164 இன்னாத செயல்கள் கூறப்பட்டுள்ளன.

**பாடல்: 1**

**பந்தம் இல்லாத மனையின் வனப்பு இன்னா**

**தந்தை இல்லாத புதல்வன் அழகு இன்னா**

**அந்தணர் இல் இருந்து ஊண் இன்னா ஆங்கு இன்னா,**

**மந்திரம் வாயா விடின்**

**விளக்கம்**

பந்தம் - கட்டு, சுற்றதிற்காயிற்று. மனை - மனை வாழ்க்கை, அதன் வனப்பாவது செல்வம், சுற்றத்தாற் சுற்றப் பட வொழுகல் செல்வந்தான் - பெற்றத்தாற் பெற்றபயன் என்பவாகலின் சுற்றமில்லாத மனையின் வனப்பு இன்னா வாயிற்று, இனி, அன்பில்லாத இல்லாளின் அழகு இன்னாவாம் எனினும் அமையும் தந்தையொடு கல்விபோம் ஆகலின் தந்தையில்லாத என்றதனால் கல்விப்பேற்றை யிழந்த - என்னும் பொருள் கொள்ளப்படும். அந்தணர் - துறவோர் இதனை அந்தண ரென்போ ரறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் - செந்தண்மை பூண்டொழுகலான் என்னும் பொய்யாமொழியா என அறிக.

துறவறத்தினர் காட்டில் கனி கிழங்கு முதலிய உண்டலேனும் நாட்டில் ஒருவழித் தங்காது திரிந்து இரந்துண்டலேனும் செயற்பாலரன்றி ஒரு மனையின்கட்பதனை நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த - மறைதானறிக. மந்திரம் அமைச்சரது சூழ்ச்சி எனப்பொருள் கோடலும் ஆம், சூழாது செய்யும் வினை துன்பம் பயக்கு மென்பது கருத்து.

**பாடல்: 2**

**பார்ப்பார் இல் கோழியும் நாயும் புகல் இன்னா**

**ஆர்த்த மனைவி அடங்காமை நற்கு இன்னா**

**பாத்து இல் புடைவை உடை இன்னா ஆங்கு இன்னா**

**காப்பு ஆற்றா வேந்தன் உலகு**

**விளக்கம்**

பார்ப்பாரில்லிற் கோழியும் நாயும் புகலாகா தென்பதனை மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது என்னும் பெரும்பாணாற்றுப்படை அடியானுமறிக. ஆர்த்தல் - கட்டுதல் அது தொடர்புண்டாமாறு கலியாணஞ் செய்து கொள்ளுதலை யுணர்த்திற்று அடங்காமை - எறியென்றெதிர் நிற்றல் முதலியன பாத்து - பகுத்து என்பதன் மரூஉ ஈண்டுத் தொழிற் பெயர் சிலப்பதிகாரத்தில் பாத்தில் பழம் பொருள் என வருதலும் காண்க புடைவை - ஆடவருடையையும் குறிக்கும் பாத்தில் புடைவை யுடையின்னா என்றதனாற் சொல்லியது ஒன்றுடுத்தலாகா தென்பதாம். ஒன்றமருடுக்கை என்னும பெரும்பாணாற்றடியும் ஒன்றுடாமையே தகுதி என்பது காட்டி நிற்கின்றது. காப்பு ஆற்றா - காத்தலைச் செய்யாத ஒரு சொல்லுமாம்.

பாடல்: 3

**கொடுங் கோல் மற மன்னர் கீழ் வாழ்தல் இன்னா**

**நெடுநீர்ப் புணை இன்றி நீந்துதல் இன்னா**

**கடு மொழியாளர் தொடர்பு இன்னா இன்னா,**

**தடுமாறி வாழ்தல் உயிர்க்கு**

**விளக்கம்**

கொடுங்கோல் - வளைந்த கோல், அரச நீதியாகிய முறையினைச் செங்கோல் என்றம், முறையின்மையைக் கொடுங்கோல் என்றும் கூறுதல் வழக்கு, இவை ஒப்பினாகிய பெயர் மன்னா் என்பது அவரது ஆட்சிக்காயிற்று கடுமொழியாளா் - மிகுதிக்கண் கழறிக் கூறு முறையன்றி, எப்பொழுதும் வன்சொல்லே கூறுமியல்பினா் என்றபடி தடுமாற்றம் - வறுமை முதலியவற்றாலுண்டாகும் மனவமைதியின்மையாகிய துனம்பம் உயிரென்றது ஈண்டு மக்களுயிரை.

பாடல்: 4

**எருது இல் உழவர்க்குப் போகு ஈரம் இன்னா**

**கருவிகள் மாறிப் புறங்கொடுத்தல் இன்னா**

**திருவுடையாரைச் செறல் இன்னா இன்னா,**

**பெரு வலியார்க்கு இன்னா செயல்**

**விளக்கம்**

போகுதல் - அருகுதல், ஒழிதல், மள்ளா் மலைத்தல் போகிய, என்புழி இப்பொருட்டாதல் காண்க. கருவி - தொகுதி, ஈண்டுப் படையது தொகுதி என்க.

கண்மாறி - ஒரு சொல், ஆங்கவ னீங்கெனை யகன்று கண்மாறி என் புழிப்போல இனி, கண்மாறி யென்பதற்கு அரசனிடத்தன் பின்றி எனப் பொருள் கொள்ளலுமாம். கருவிகள் மாறி எனப் பிரித்தல் பொருந்துமேற் கொள்க. பெருவலியார் - பொருள் படை முதலியவற்றாற் பெருவலி யுடையவராய அரசரும், தவத்தால் ஒன்னார்த் தெறலும் உவந்தாரையாக்கலுமாம் பெருவலி பெற்றுடையராய முனிவரும் ஆம், பெருவலியார்க் கின்னாசெயல் துன்பந்தரும் என்பதனை கூற்றத்தைக் கையால் விளித்தாற்றால ாற்றுவார்க் - காற்றாதாரின்னா செயல் என்னுந் திருவள்ளுவப்பயனாலு மறிக.

**பாடல்: 5**

**சிறை இல் கரும்பினைக் காத்து ஓம்பல் இன்னா**
**உறை சோர் பழங் கூரை சேர்ந்து ஒழுகல் இன்னா**
**முறை இன்றி ஆளும் அரசு இன்னா இன்னா,**
**மறை இன்றிச் செய்யும் வினை**

**விளக்கம்**

காத்தோம்பல் - ஒருபொருளிருசொல். உறைசேர்பங்கூரை என்றது செய்கை யழிந்து சிதைவுற்று மழைநீர் உள்ளிழியுஞ் சிறுகூரையினை. அரசு - அரசனுமாம். அரசன் முறையிலனாயின் முறையிழத்தலானே யன்றி மழையின்மையாலும் நாடு துன்புறும், முறைகோடி மன்னவன் செய்யினுறைகோடி - யொல்லாது வானம் பெயல் என்பது காண்க. அமைச்சருடன் மறைவிற் செய்யப்படுவதாகலின் சூழ்ச்சி மறையெனப்பட்டது.

**பாடல்: 6**

**அற மனத்தார் கூறும் கடு மொழி இன்னா**
**மற மனத்தார் ஞாட்பில் மடிந்து ஒழுகல் இன்னா**
**இடும்பை உடையார் கொடை இன்னா இன்னா,**
**கொடும்பாடு உடையார் வாய்ச் சொல்**

**விளக்கம்**

'அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொனான்கும் - இழுக்காவி யின்ற தறம்' என்பவாகலின் அறமனத்தார் கூறுங்கடுமொழியும் இன்னா வாயிற்று. உம்மை எச்சப்பொளது. இடும்பை - துன்பம், ஈண்டுக் காரணமாய வறுமை மேல் நின்றது வபோழ்தத்து வள்ளன்மை குற்றம் என்று பிற சான்றோருங் கூறினர். கொடும்பாடு - கொடுமை ஒரு சொல் அருங்கொடும் பாடுகள் செய்து என்பது திருச்சிற்றம்பலக் கோவையார் நடுவு நிலை யின்மையும் ஆம் வாய்ச் சொல் என வேண்டாது கூறியது தீமையே பயின்றதென வேண்டியது முடித்தற்கு வாய்ச் சொல்லும் என்னும் உம்மை தொக்கது.

**பாடல்: 7**

**ஆற்றல் இலாதான் பிடித்த படை இன்னா**
**நாற்றம் இலாத மலரின் அழகு இன்னா**
**தேற்றம் இலாதான் துணிவு இன்னா ஆங்கு இன்னா,**
**மாற்றம் அறியான் உரை**

**விளக்கம்**

ஆற்றல் - ஈண்டு ஆண்மை யெனினும் ஆம், வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு என்பது காண்க தேற்றம் - ஆராய்ந்து தெளிதல், தெளிவு அதனைத் தொடங்கார்' என்பது வாயுறைவாழ்த்து மாற்றம் - பேசு முறைமை யென்றும் எதிருரைக்கும் மொழியென்றும் கூறலுமாம்.

**பாடல்: 8**

**பகல் போலும் நெஞ்சத்தார் பண்பு இன்மை இன்னா**

**நகை ஆய நண்பினார் நார் இன்மை இன்னா**

**இகலின் எழுந்தவர் ஓட்டு இன்னா இன்னா,**

**நயம் இல் மனத்தவர் நட்பு**

**விளக்கம்**

பகல் போலும் நேஞ்சம் - ஞாயிறு திரிபின்றி ஒர பெற்றித் தாதல் போலத் திரிபில்லாத வாய்மையையுடைய நெஞ்சம்,, ஞாயிறன்ன வாய்மையும் என்பது புறம் இனி நுகத்தின் பகலாணிபோல் நடுவு நிலையுடைய நெஞ்சம் எனினும் பொருந்தும் நெடுநுகத்துப் பகல் போல - நடுவு நின்ற நன்னெஞ்சினோர் என்பது பட்டினப்பாலை பண்பாவது உலக வியற்கை யறிந்து யாவரொடும் பொருந்தி நடக்கும் முறைமை, பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல் என்பது கலித்தொகை தூயமனமுடைய ரெனும் உலகத்தோடு பொருந்தி நடவாமை தீதேன்பதாம். நகையாய நண்பினார் நாரின்மையாவது முகத்தால் நகுதல் செய்து அகத்தே அன்பு சுருங்குதல் நயம் - நீதி யென்னும் பொருளதாதலைத் திருக்குறட் பரிமேலழகருரை நோக்கித் தெளிக. இனிமையெனவும் விருப்பம் எனவும் பொருள் கூறலும் ஆம்.

பாடல்: 9

**கள் இல்லா மூதூர் களிகட்கு நற்கு இன்னா்**

**வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன் இன்னா்**

**வண்மை இலாளர் வனப்பு இன்னா் ஆங்கு இன்னா,**

**பண் இல் புரவிப் பரிப்பு**

**விளக்கம்**

களிகட்கு இன்னா என்றது எடுத்துக்காட்டு மாத்திரையே, களித்தலென்னுஞ் கொல் கள்ளண்டு மகிழ்தல் என்னும் பொருளில் முன் வழங்கியது. இக்காலத்தே பொதுப்பட மகிழ்தல் என்னும் பொருளதாயிற்று களி - கள்ளுண்போன். முன் - மிகுதி யென்னும் பொருளது பண் - கலனை, இது கல்லனை பெயனவும் வழங்கும்.

பாடல்: 10

**பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டு உரைத்தல் இன்னா்**

**இருள் கூர் சிறு நெறி தாம் தனிப்போக்கு இன்னா்**

**அருள் இல்லார் தம் கண் செலவு இன்னா் இன்னா,**

**பொருள் இல்லார் வண்மை புரிவு**

**விளக்கம்**

புலவராயினார் பாட்டின் பொருளுணரும் அறிவில்லார்பால் தாம் அரிதற் பாடிய பாட்டுக்களைக் கூறின், அவர் அவற்றின் பொருளை அறியா ராகலின்

தம்மை நன்கு மதித்தல் செய்யால். அதுவே யன்றி இகழ்தலுஞ் செய்வர், அவற்றின் மிக்கக துன்பம் பிறிதில்லை யாகலின் பொருணுளர் வாரில்வழிப் பாட்டுரைத்த லின்னா எனப்பட்டது.

## இனியவை நாற்பது

இன்னா நாற்பதை அடுத்துத் தோன்றிய நூல் இனியவை நாற்பது. வாழ்க்கைக்கு வேண்டிய இனிய பொருள்களை நாற்பது பாடல்களில் சுவைபடக் கூறுகிறது. ஆதலால் இந்த நூலிற்கு இனியவை நாற்பது என்ற பெயர் வந்தது. இனியது நாற்பது, இனிது நாற்பது, இனிய நாற்பது என்னும் பெயர்களும் இந்நூலுக்கு உண்டு.

இந்த நூலின் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார். ஆசிரியர் பெயர் சேந்தன். பூதன் என்பது இவர் தந்தையாரின் இயற்பெயர். இவர் மதுரையில் உயர்ந்த தமிழாசிரியராக விளங்கியதால் மதுரைத் தமிழாசிரியர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார்.

பூதஞ்சேந்தனார் கடவுள் வாழ்த்துப் பாடலில் முதலில் சிவபெருமானையும், அடுத்துத் திருமாலையும், பின்னர் பிரம்மனையும் குறிப்பிடுகின்றார். மும்மூர்த்திகளையும் பற்றிக் குறிப்பிடுவதால் இவர் வைதிக சமயத்தினராதல் வேண்டும். இவர் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

**பாடல்: 1**

**பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகஇனிதே**

**நற்சலையில் கைக்கொடுத்தல் சாலவும் முன்னினிதே**

**முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே**

**தெற்றவும் மேலாயார்ச் சேர்வு**

**விளக்கம்**

பிச்சையெடுத்தாவது கற்பது இனிது. அப்படி கற்ற கல்வி நல்ல சபையில் உதவுவது மிக இனிது. முத்தையொக்கும் மகளிரது வாய்ச்சொல் இனிது. அதுபோல பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல் இனிது.

**பாடல் - 02**

**உடையான் வழக்கினி தொப்ப முடிந்தால்**

**மனைவாழ்க்கை முன் இனிது மாணாதா மாயின்**

**நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்**

**தலையாகத் தான்இனிது நன்கு**

**விளக்கம்**

பொருள் உடையவனது ஈகை இனிது. மனைவியுள்ளமும் கணவன் உள்ளமும் ஒன்றுபடக் கூடுமாயின் மனை வாழ்க்கை இனிது. உலக வாழ்க்கை நிலையில்லாதது என்று ஆராய்ந்துணர்ந்து முற்றும் துறத்தல் இவை அனைத்திலும் மிக இனிது.

**பாடல் - 03**

**ஏவது மாறா இளங்கிளைமை முன்இனிதே**

**நாளும் நவைபோகான் கற்றல் மிகஇனிதே**

**ஏருடையான் வேளாண்மை தானினிது ஆங்கினிதே**

**தேரிற்கோள் நட்புத் திசைக்கு**

**விளக்கம்**

சொன்ன வேலைகளை மாற்றமில்லாமல் செய்யும் வேலைக்காரர்களைக் கொண்டிருப்பது இனிதாகும். குற்றங்களில் ஈடுபடாமல் கற்றல் மிக இனிதாகும். ஏரினையும் உழவுமாடுகளையும் சொந்தமாக வைத்திருப்பவன் விவசாயம் செய்வது இனிது. அதுபோல ஆராயின் செல்லுந்திசையில் நட்புக்கொள்ளுதல் இனிது.

**பாடல் - 04**

**யானை யுடைய படைகாண்டல் முன்இனிதே**
**ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்இனிதே**
**கான்யாற் றடைகரை யூர்இனி தாங்கினிதே**
**மான முடையார் மதிப்பு**

**விளக்கம்**

அரசன் யானைப் படைகளைக் கொண்டிருத்தல் இனிது. தசையைத் தின்று உடம்பை வளர்க்காமை இனிது. முல்லை நிலத்தில் ஆற்றினது நீராட கரைக்கண் உள்ள ஊர் இனிது. அதுபோல மதிப்புடையவரது மதிப்பு கொள்ளுதல் இனிது.

**பாடல் - 05**

**கொல்லாமை முன்இனிது கோல்கோடி மாராயஞ்**
**செய்யாமை முன்இனிது செங்கோலன் ஆகுதல்**
**எய்துங் திறத்தால் இனிதென்ப யார்மட்டும்**
**பொல்லாங் குரையாமை நன்கு**

**விளக்கம்**

கொல்லாமை முன் இனிது. அரசன் நடுவு நிலைமை தவறி சிறப்பு செய்யாமை இனிது. செங்கோலனாக இருப்பது இனிது. யாவரிடத்தும் திறமையால் கூடியமட்டும் குற்றம் கூறாமை மிக இனிது.

**பாடல் - 06**

**ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்இனிதே**
**பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே**
**வாய்ப்புடைய ராகி வலவைகள் அல்லாரைக்**
**காப்படையக் கோடல் இனிது**

**விளக்கம்**

கூடிய மட்டும் தருமம் செய்தல் இனிது. சான்றோர்களின் பயனுடைய சொல் இனிது. கல்விச் செல்வம் அதிகாரம் ஆண்மை முதலிய எல்லாம் இருந்தும் “நான்“ என்ற குணம் இல்லாதவனைத் துணையாகக் கொள்வது இனிது.

**பாடல் - 07**

**அந்தண ரோத்துடைமை ஆற்ற மிகஇனிதே**
**பந்தம் உடையான் படையாண்மை முன்இனிதே**
**தந்தையே ஆயினுந் தானடங்கான் ஆகுமேல்**
**கொண்டடையா னாகல் இனிது**

**விளக்கம்**

பிராமணர்க்கு வேதம் ஓதுதல் இனிது. இல்லறத்தாருக்கு பற்றுபாசம் இனிது. படையுடையானுக்கு வீரம் இனிது. தந்தையே ஆனாலும் அவர் கூறும் தவறானவற்றைச் செய்யாமை இனிது.

**பாடல் - 08**

**ஊருங் கலிமா உரனுடைமை முன்இனிதே**
**தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்**
**கார்வரை யானைக் கதங்காண்டல் முன்இனிதே**
**ஆர்வ முடையவர் ஆற்றவும் நல்லவை**
**பேதுறார் கேட்டல் இனிது**

**விளக்கம்**

வீரனுக்கு வலிமையான குதிரை இனிது. மாலையணிந்த அரசர்களுக்கு போர்க்களத்தில் கரிய மலைபோன்ற யானைகள் சினம் கொண்டு போரிடுதலைப் பார்த்தல் இனிது. அன்புடையார் வாய்ச் சொற்கள் கேட்பது இனிது.

**பாடல் - 09**

**தங்க ணமர்புடையார் தாம்வாழ்தல் முன்இனிதே**
**அங்கண் விசும்பின் அகல்நிலாக் காண்பினிதே**
**பங்கமில் செய்கைய ராகிப் பரிந்துயார்க்கும்**
**அன்புடைய ராதல் இனிது**

**விளக்கம்**

தம்மை ஒட்டி வாழும் நண்பர்கள் செல்வத்துடன் வாழ்தல் இனிது. அழகிய அகன்ற வானத்தில் விரிந்த நிலாவைக் காணுதல் இனிது. குற்றமில்லாத செய்கை உடையவராய் அன்புடையவராயிருத்தல் இனிது.

**பாடல் - 10**

**கடமுண்டு வாழாமை காண்டல் இனிதே**
**நிறைமாண்பில் பெண்டிரை நீக்கல் இனிதே**
**மனமாண்பி லாதவரை யஞ்சி யகறல்**
**எனைமாண்புந் தான்இனிது நன்கு**

**விளக்கம்**

கடன் வாங்கி வாழாமல் இருத்தல் இனிது. கற்பில்லாத மனைவியை நீக்கிவிடுதல் இனிது. மனத்தின்கண் பெருமை இல்லாதவரை விட்டு அஞ்சி அகலுதல் எல்லாவற்றையும் விட மிக இனிது.

## ஆசாரக் கோவை

பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ள 18 நூல்ளில் இந்த ஆசாரக் கோவை நூலும் ஒன்று. ஆசாரக்கோவை என்னும் தொடருக்கு ஒழுக்கங்களின் தொகுதி என்று பொருள் கூறுவர். இந்த கடைச் சங்க மருவிய காலத்து நூலாகும். இந்நூலுள் நூறு வெண்பாக்கள் அமைந்துள்ளன. வெண்பாக்கள் இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, குறள் வெண்பா, ப∴.றொடை வெண்பா ஆகிய வெண்பா வகைகளாக அமைந்துள்ளன. இந்நூலில் உண்ணல், உடுத்தல், உறங்கல், நீராடல் முதலிய முறைகள் விளக்கப் பெற்றுள்ளது. ஆசாரம் என்றாலே ஒழுக்கம் என்றுதான் பொருள்.

இன்னின்னவற்றைச் செய்யலாம். இன்ன்னவற்றைச் செய்தலாகா என்று இந்நூல் நல்லொழுக்கங்களை வலியுறுத்துகின்றது. இந்நூலின் ஆசிரியர் பெருவாயின் முள்ளியார். இந்நூலின் இறுதி வெண்பாவின் இறுதிச் சீர் ''ஆசார வீடுபெற்றார்'' என்று முடிவு பெறுவது நோக்கத்தக்கது.

**பாடல்: 1**

**நன்றி யறிதல் பொறையுடைமை இன் சொல்லோடு**

**இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு**

**ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை**

**நல்லினத்தாரோடு நட்டல் இவையெட்டும்**

**சொல்லிய ஆசார வித்து.**

**விளக்கம்**

தனக்குப் பிறர்செய்த நன்றியை மறவாமையும், பொறுமையும், இன்சொல்லும், எல்லா உயிர்க்கும் துன்பந்தருபவற்றைச் செய்யாதிருத்தலும் கல்வியும் ஒப்புரவை மிக அறிதலும் அறிவு உடையமையும் நல்ல இயல்புள்ளவர்களுடன் நட்பச் செய்தலும் என்ற இவ்வெட்டுவகையும் அறிஞர்களாற் சொல்லப்பட்ட ஒழுக்கங்கட்குக் காரணம்.

**பாடல்: 2**

**பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு**

**நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை**

**இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப, என்றும்**

**ஒழுக்கம் பிழையா தவர்.**

**விளக்கம்**

எப்பொழுதும் ஒழுக்கத்தில் தவறாதவர் நற்குடிப்பிறப்பு நீண்ட வாழ்நாள் பொருட்செல்வம் அழகுடைமை நிலத்துக்கு உரிமை சொல்லின் மேன்மை படிப்பு பிணியில்லாமை இந்த எட்டுவகையினையும் அவற்றிற்குரிய இலக்கணங்களுடன் அடைவர்.

**பாடல்: 3**

**தக்கிணை வேள்வி தவம் கல்வி இந்நான்கும்**
**முப்பால் ஒழுக்கினால் காத்துய்க்க் உய்யாக்கால்**
**எப்பாலும் ஆகா கெடும்.**

**விளக்கம்**

ஆசிரியர்க்குத் தட்சணை கொடுத்தலும் யாகம் பண்ணுதலும் தவஞ்செய்தலும் கல்வியும் என இந்நான்கினையும் முன்றுவகைப்பட்ட நெறியாலே பாதுகாத்து நடத்துக் நடாத்தாக்கால் எல்வுலகத்தின் கண்ணும் பயனாகாவாய்க் கெடும்.

**பாடல்: 4**

**வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்,**
**நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்,**
**தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே,**
**முந்தையோர் கண்ட முறை.**

**விளக்கம்**

விடியற்காலமாகிய பின்சாமத்திலே தூக்கத்தினின்று விழித்தெழுந்து தான் மறுநாள் செய்யவேண்டிய நல்ல அறச்செயல்களையும் ஒள்ளியபொருளுக்கு வருவாயான செயல்களையும் ஆராய்ந்து பார்த்து வாய்ப்புடைத்தாவதோடு தகப்பனையும் தாயையும் தொழுது எழுந்து ஒரு செயலைக் செய்க என்ற சொல்லப்படுவதே அறிவுடைய பழைமையோர் செய்துவைத்திருக்கிற முறையாம்.

**பாடல்: 5**

**எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தேவர்**
**உச்சந் தலையோடிவை என்ப யாவரும்**
**திட்பத்தால் தீண்டாப் பொருள்.**

**விளக்கம்**

பசு பார்ப்பார் நெருப்பு தேவர் உச்சந்தலை இவற்றை எச்சிலையுடையராய் யாவரும் தீண்டார் என்று சொல்வர் யாப்புற எல்லாரும் எச்சிலோடு தீண்டப்படாத பொருளும் இவை.

**பாடல்: 6**

**எச்சிலார் நோக்கார் புலைதிங்கள் நாய்ஞாயிறு**
**அத்தக வீழ்மீனோடு இவ்வைந்தும் தெற்றென**
**நன்கறிவார் நாளும் விரைந்து.**

**விளக்கம்**

புலையும் மதியும் (சந்திரனும்), சூரியனும், நாயும், அழகிய வீழ் மீனுடன் சொல்லப்பட்ட இவ்வைந்தினையும் நன்மையானவற்றை அறிந்துள்ளவர்

எச்சிலையுடையவராய் எந்நாளும் விரைவாய்த் தெளிய கண்ணால் நோக்கமாட்டார்.

**பாடல்: 7**

**எச்சில் பலவும் உள, மற்ற வற்றுள்**

**இயக்கமிரண்டும் இணைவிழைச்சு வாயில்**

**விழைச்சிவை எச்சிலில் நான்கு**

**விளக்கம்**

எச்சில்கள் பலவகையுள, அவைகளுள் மலமூர்த்திரங்கள் இயங்கிய இயக்கம் இரண்டொடுகூட இணை விழைச்சும் வாயினால் வழங்கிய விழைச்சும என இவை எச்சிலாவன. இவ்வெச்சில் நான்கையும் பாதுகாக்க.

**பாடல்: 8**

**நால்வகை எச்சிலும் நன்கு கடைப்பிடித்து**

**ஓதார் உரையார் வளராரே எஞ்ஞான்றும்**

**மேதைகளா குறு வார்**

**விளக்கம்**

மேற்கூறப்பட்ட நான்கு எச்சிலையும் மிகக்கடைப்பிடித்து ஒன்றனையும் ஓதார், வாயால் ஒன்றனையுஞ் சொல்லார், கண்துயிலார் எக்காலத்தும் மதியுடையராக வேண்டுவோர்

**பாடல் 9**

**நாளந்தி கோல்தின்று கண்கழிஇத் தெய்வத்தைத்**

**தானறியுமாற்றால் தொழுதெழுக அல்கந்தி**

**நின்று தொழுதல் பழி**

**விளக்கம்**

சிறுகாலையில் ஒரு கொம்பாலே பல்துடைத்துக் கண்கழுவி தான் வணங்குங் கடவுளை அறியும் நெறியால் தொழுக. பின் ஒரு கருமத்தைத் தொடங்குக. மாலைப்பொழுதின்கண் தான் வணங்குங் கடவுளை நின்று வணங்குதல் குற்றமாம் இருந்து வணங்குதல் சிறப்பு.

**பாடல்: 10**

**தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை**

**உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது**

**வைகு துயிலோடு இணைவிழைச்சு கீழ்மக்கள்**

**மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்**

**ஐயுறா தாடுக நீர்**

**விளக்கம்**

தன்னால் வழிபடப்பெறும் தெய்வத்தைத் துதித்தற் கண்ணும், தீய கனவைக் கண்டவிடத்தும் தூய்மை குன்றிய காலத்தும், உண்டதை வாந்திசெய்த விடத்தும் மயிர்களைந்த விடத்தும் உண்ணும் பொழுதும் பொழுதேறத் தூங்கிய விடத்தும் புணர்ச்சியான காலத்தும் கீழ்மக்கள் உடம்பு தீண்டியவிடத்தும் மலசலங் கழித்தவிடத்தும் என இப்பத்திடத்தும் சந்தேகங் கொள்ளாமலே நீராடல் செய்க.

**நான்மணிக்கடிகை**

நான்கு + மணி + கடிகை = நான்மணிக்கடிகை, கடிகை = துண்டு, ஆபரணம், தோள்வளை. நான்கு மணிகள்பதிக்கப் பெற்ற தோள்வளை போல் நான்கு நீதி மணிகளால் நிலைநாடாப்பட்ட பாடல்களைக் கொண்ட நூல். முதல் இரண்டு கடவுள் வாழ்த்து பாடலிலும் நான்கு கருத்துக்கள் உள்ளன. கடவுள் வாழ்த்து திருமலைப்பற்றியது. ஒவ்வொரு பாடலிலும் நாலு கருத்துக்கள் உள்ளன. நூலில் வடமொழி கலப்பு அதிகம். இந்நூல் தொல்காப்பியர் கூறும் அம்மை என்ற வனப்பிற்கு உரியது. ஜி.யு.போப் இந்நூலின் 7,100 ஆகிய இரு பாடல்களை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்துள்ளார்.

**பாடல்: 1**

**படியை மடியகத் திட்டான் அடியினால்**
**முக்காற் கடந்தான் முழுநிலம் - அக்காலத்து**
**ஆப்பனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்**
**அருமை யழித்த மகன்**

**விளக்கம்**

உலகத்தைத் வயிற்றில் வைத்தான், தன் திருவடிகளால், உலகங்கள் முழுமையும் மூன்று முறைகளில் தாவியளந்தான். இந்திரன் மழை பெய்வித்த போது ஆனிரைளின் குளிர் நடுக்கத்தை தாங்கும் பொருட்டு கோவர்த்தன மென்னும் மலையைக் குடையாகத் தூக்கினான் பாணாசுரனது நெருப்பு மதிலின் பெருமையை அழித்த பெருமானான திருமால்.

**பாடல்: 2**

**எள்ளற்க என்றும் எளியரென்று என்பெறினும்**

**கொள்ளற்க கொள்ளார்கைம் மேற்பட - உள்சுடினும்**

**சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க**

**கூறல் லவற்றை விரைந்து**

**விளக்கம்**

எக்காலத்திலும் பொருள் வலிகளாற் குறைந்தவரென்று பிறரை இகழாதொழிக, மிகச்சிறந்த தொன்றைப் பெறுவதானாலும் கொள்ளத்தகாதவருடைய கைகள், தன் கைகளுக்கு மேற்பட்டன ஆகும்படி அவர்பால் ஒன்றும் ஏற்றுக் கொள்ளாதொழிக. வறுமைமிக்க குடியிற் பிறந்தவர்களை அவர் செய்கை தனதுள்ளத்தை வருத்துவதாயினும் அவரைச் சிநவாதொழிக சொல்லத்தகாத சொற்களைப் பதைத்துச் சொல்லாதொழிக.

**பாடல்: 3**

**பறைபட வாழா அசுணமா உள்ளங்**

**குறைபட வாழார் உரவோர் - நிறைவனத்து**

**நெற்பட்ட கண்ணே வெதிர்சாம் தனக்கொவ்வாச்**

**சொற்பட வாழாதாஞ் சால்பு**

**விளக்கம்**

கேகயப் பறவைகள் பறையின் ஓசை தஞ் செவியிற்பட்டால் உயிர் வாழமாட்டா, அறிவுடையோர் தமது பெருநிலை குறைபட்டால் உயிர் தாங்கமாட்டார். மரங்கள் நிறைந்த காட்டில் மூங்கில்கள் நெல்லுண்டானபோதே

பட்டுப்போகும். இவற்றைப்போல் நிறையுடைய சான்றோர் தமது நிறைவுக்குக் குறைவான இழிவுரைகள் உண்டானால் உயிர் வாழமாட்டார்.

**பாடல்: 4**

**மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்து**
**ஏறிய பின்னறிப மாநலம் மாசறச்**
**சுட்டறிப பொன்னின் நலங்காண்பார் கெட்டறிப**
**கேளிரான் ஆய பயன்**

**விளக்கம்**

மாணிக்கம் முதலான உயர் மணிகளின் நல்லியல்பை அதைக் கழுவிய பின் அறிவார்கள். குதிரையின் நல்லியல்பை அதன் மேற் சேணமமைத்து ஏறிய பின் அறிவார்கள். பொன்னின் தரத்தை அதனை உருக்கிப் பார்த்து அறிவார்கள். உறவினர்களின் இயல்பைத் தன் செல்வத்தை எல்லாம் இழந்து வறுமையுற்ற போது அறிவார்கள்.

**பாடல்: 5**

**கள்ளி வயிற்றின் அகில்பிறக்கும் மான்வயிற்றின்**
**ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்**
**பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார்யார்**
**நல்லாள் பிறக்குங் குடி**

**விளக்கம்**

அகிற்கட்டை கள்ளிமரத்தின் நடுவில் உண்டாகும், ஒளியுள்ள அரிதாரம் மான் வயிற்றில் உண்டாகும், மிக்க விலையையுடைய முத்துக்கள் பெரிய கடலினுள் பிறக்கும் அவைபோல் நல்ல மக்கள் பிறக்கும் குடியை முன்பே அறியவல்லவர் யாருமில்லை.

**பாடல்: 6**

**கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி**

**சொல்லிற் பிறக்கும் உயர்மதம் - மெல்லென்று**

**அருளிற் பிறக்கும் அறநெறி எல்லாம்**

**பொருளிற் பிறந்து விடும்**

**விளக்கம்**

ஒளியுள்ள மணிகள் மலையில் உண்டாகும், மிக்க களிப்பு காதலியினது சொல்லினால் தோன்றும், அறவழிகள் மென்மை பொருந்திய அருளினிடம் உண்டாகும். அவைபோல், அவ்வறத்தோடு ஏனைய இன்பம் முதலியவெல்லாமும் செல்வத்தினால் உண்டாய்விடும்.

**பாடல்: 7**

**திருவொக்கும் தீதில் ஒழுக்கம் பெரிய**

**அறனொக்கும் ஆற்றின் ஒழுகல் பிறானக்**

**கொலையொக்கும் கொண்டுகண் மாறல் புலையொக்கும்**

**போற்றாதார் மன்னர்ச் செலவு**

**விளக்கம்**

தீமை கலவாத நல்லொழுக்கம் செல்வத்தை யொக்கும் முறைப்படி ஒழுகுதல் சிறந்த அறச்செய்கையோடு ஒக்கும், பிறனொருவனை நட்பாகக் கொண்டு பின்பு அந்நட்பு மாறிப் புறங் கூறுதல் அவனைக் கொலை செய்தலைப் போன்றதாகும். தம்மை மதியாதாரிடத்தில் சென்று ஒன்றை நயத்தல் இழி தகைமையை ஒப்பதாகும்.

**பாடல்: 8**

**கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்டு**
**உள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை ஒண்பொருள்**
**செய்வமென் பார்ககுந் துயிலில்லை அப்பொருள்**
**காப்பார்க்கும் இல்லை துயில்**

**விளக்கம்**

திருடுவமென்று சோர்வு நேரம் பார்ப்பார்க்கும், காதலியினிடத்தில் விருப்பம் வைத்திருப்பார்க்கும், சிறந்த செல்வப் பொருளை பொருக்குவமென்று கருதியுழைப்பார்க்கும், தேடிப் அப்பொருளைக் களவாலும் பிறவாற்றாலுங் கொடாதபடி பாதுகாப்பவர் கட்கும் தூக்கம் பிடிப்பதில்லை.

**பாடல்: 9**

**கற்றார்முன் தோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்று**
**உற்றார்முன் தோன்றா உறாமுதல் - தெற்றென**
**அல்ல புரிந்தார்க்கு அறந்தோன்றா எல்லாம்**
**வெகுண்டார்முன் தோன்றா கெடும்**

**விளக்கம்**

இழந்த பொருள்களுக்கு இரங்குதல் கற்றுணர்ந்த பெரியோர் பால் தோன்றாது. ஊக்கங்கொண்டு ஒரு நன்முயற்சியைத் தொடங்கி விரைவிற் கிட்டாமையாலாகிய முயற்சித் துன்பம் தோன்றாது. தெளிவாய்த் தீயவை செய்தார்க்கு நல்லவை தோன்றமாட்டார், எல்லா நன்மைகளும் சினங்கொள்வாரிடத்தில் தோன்றாவாய்க் கெட்டொழியும்.

**பாடல்: 10**

**நிலத்துக்கு அணியென்ப நெல்லுங் கரும்பும்**

**குளத்துக்கு அணியென்ப தாமரை பெண்மை**

**நலத்துக்கு அணியென்ப நாணம் தனக்கணியாம்**

**தான்செல் உலகத் தறம்**

**விளக்கம்**

நெற்பயிருங் கரும்பின் பயிரும் நிலத்துக்கு அழகென்று சொல்லுவர், செந்தாமரைக் காடுகள் குளங்களுக்கு அழகு என்று சொல்லுவர், நாணுமியல்பு பெண்ணின் கற்பாகிய நன்மைக்கு அழகென்று சொல்லுவர் தான் செல்லும் மறுமை உலகத்துக்குத் துணையாகச் செய்யப்படும் அறங்கள் ஒருவனுக்கு அழகாகும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | திருக்குறள் பற்றிக் குறிப்பு வரைக. | K4 | CO5 | PO4 |
| 2 | ஒரு மனிதனுக்கு கல்வி எவ்வளவு அவசியம் என்பதைப் பற்றிக் கூறுக. | K3 | CO2 | PO2 |
| 3 | வயதில் மூத்தவர்கள் அருகில் இருபபதினால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக. | K1 | CO2 | PO1 |
| 4 | வலிமை அறிந்து செயல்பட வேண்டும் எனறு அவர்கள் கூறும் கருத்திணை விவரி. | K4 | CO3 | PO2 |
| 5 | சோம்பலினால் ஏற்படும் விளைவுகளை வள்ளுவர் வழி நின்று ஆராய்க. | K1 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | காலமறிந்து செயல்பட வேண்டும் என்று வள்ளுவர் சூறும் கருத்திணைத் தெளிவுப்படுத்துன. | K4 | CO1 | PO4 |
| 2 | சுற்றந்தாழால் என்ற அதிகாரத்தில் கூறப்படும் செய்திணைத் தொகுத்து எழுதுக. | K3 | CO4 | PO5 |
| 3 | ஊக்கமுடைமை என்ற அதிகாத்தின் மூலம் அறிந்த செய்திஜனைப் பற்றி விவரி. | k5 | CO5 | PO2 |
| 4 | முகக்குறிப்பின் மூலம் மனித உள்ளத்தை அறியலாம் என்பதைப்பற்றி விளக்குக. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K3 | CO4 | PO1 |
| 5 | சிற்றினமி சேர்வதால் ஏற்படும் விளைவுகளைக் கூறுக. | K4 | CO3 | PO3 |

# அலகு - 3

## திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் உடல் நோயைத்தீர்ப்பான. அதனை போன்று இந்நூலில் அமைந்துள்ள ஒவ்வொரு பாட்டிலும் உள்ள மூன்று கருத்துக்களும் உள்ளத்தின் நோயைத் தீர்க்கும். திரி = மூன்று கடுகம் = காரமுள்ள பொருள் இவர் திருநெல்வேலி மாவட்டம் ‘‘திருத்து’’ என்னும் ஊரை சேர்ந்தவர். ‘‘செருஅடுதோள்நல்லாதன்’’ எனப்பாயிரம் குறிப்பிடுவதால் இவர் போர் வீரராய் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது திரிகடுகம், சுக்கு, மிளகு, திப்பிலி’’ என திவாகர நிகண்டு கூறுகிறது. இந்நூலின் கடவுள் வாழ்த்து திருமாலைப் பற்றி கூறுகிறது. இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் ‘‘இம்மூன்றும்’’ அல்லது ‘‘இம்மூவர்’’ என்னும் சொல் வருகிறது. மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல். இந்நூலில் 66 பாடகளில் நன்மை தருபவை எவை என்பது பற்றிக்

கூறப்பட்டுள்ளது. இந்நூலில் 34 பாடல்களில் தீமை தருபவை எவை எனக் கூறப்பட்டுள்ளது. கணவன் மனைவி வாழ்க்கை பற்றியே 35 பாடல்கள் உள்ளன. 300 அறக்கருத்துக்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

**பாடல்: 1**

**அருந்ததிக் கற்பினார் தோளும், திருந்திய**
**தொல் குடியில் மாண்டார் தொடர்ச்சியும், சொல்லின்**
**அரில் அகற்றும் கேள்வியார் நட்பும்,-இம் மூன்றும்**
**திரிகடுகம் போலும் மருந்து**

**விளக்கம்**

அருந்ததி போலும், கற்பையுடைய மகளிரின் தோள்களும் குற்றமற்ற பழமையான குடிப்பிறப்பில் தோன்றி மாட்சிமையடைந்தவரோடு கொள்ளும் நட்பும் சொற்களினிடத்தே குற்றங்களை நீக்கவல்ல கேள்வியையுடையவரோடு செய்யப்படும் நட்பும் இந்த மூன்றும் ஒருவனுக்குத் திரிகடுகம் போன்றுள்ள மருந்துகளாம்.

**பாடல்: 2**

**தம் குணம் குன்றாத் தகைமையும், தா இல் சீர்**
**இன் குணத்தார் ஏவின செய்தலும், நன்கு உணர்வின்**
**நான்மறையாளர் வழிச் செலவும்,-இம் மூன்றும்**
**மேல் முறையாளர் தொழில்**

**விளக்கம்**

தனது குடிப்பிறப்பின் குணம் கன்றாமைக்கு ஏதுவாகிய அழிதல் இல்லாத பெரும் புகழைத் தருகின்ற இனிய குணத்தையுடையோர் ஏவிய தொழில்களைச் செய்வதும், அறத்தினியல்பை அறியும் அறிவையுடைய நான்கு வகைப்பட்ட வேதங்களை ஓதிய வேதியா் கூறிய வழியில் நடத்தலும் ஆகிய இம்மூன்றும் மேன்மையாகிய ஒழுக்கத்தை ஆளுதல் உடையாரது தொழில்களாம்.

**பாடல்: 3**

**கல்லார்க்கு இனனா ஒழுகலும், காழ்க் கொண்ட**
**இல்லாளைக் கோலால் புடைத்தலும், இல்லம்**
**சிறியாரைக் கொண்டு புகலும்,-இம் மூன்றும்**
**அறியாமையான் வரும் கேடு**

**விளக்கம்**

கற்றறியாதவர்க்கு உறவினனாகி நடத்தலும் மனவுறுதி கொண்ட மனைவியைக் கோலினால் அடித்தலும் தம் வீட்டுள் சிற்றறிவினரை உடன்கொண்டு புகுதலும் ஆகிய இம்மூன்றும் செயல்களும் தன் அறியாமையினாலே விளைகின்ற கேடுகளாம்.

**பாடல்: 4**

**பகை முன்னர் வாழ்க்கை செயலும், தொகை நின்ற**
**பெற்றத்துள் கோல் இன்றிச் சேறலும், முன் தன்னைக்**
**காய்வானைக் கை வாங்கிக் கோடலும்,-இம் மூன்றும்**
**சாவ உறுவான் தொழில்**

**விளக்கம்**

தன் பகைவர் முன்னே செல்வத்துடன் வாழ்தலைச் செய்தலும், தொகுதியாக நின்ற மாடுகளின் நடுவே கோல் இல்லாமல் செல்லுதலும், முன்னே நின்று தன்னை வருத்துபவனை முன் விட்டு நீக்கியப்பின் அவனை நட்புக் கொள்ளுதலும் ஆகிய இம்மூன்று செயல்களும் சாக வேண்டியவனுடைய செய்கைகளாம்.

**பாடல்: 5**

**வழங்காத் துறை இழிந்து நீர்ப் போக்கும், ஒப்ப**

**விழைவு இலாப் பெண்டிர் தோள் சேர்வும், உழந்து**

**விருந்தினனாய் வேற்றூர் புகலும்,-இம் மூன்றும்**

**அருந் துயரம் காட்டும் நெறி**

**விளக்கம்**

யாவரும் இறங்கிப் பாராத துறையில் இறங்கிப் பெரும் நீரில் போதலும் தனக்கு ஒப்பாக விருப்பமில்லாத வேசையர் தோளைச் சேர்தலும் வருந்த பிறர்க்கு விருந்தாளியாகி அயலூரில் புகுதலும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு அரிய துன்பத்தைக் காட்டும் வழிகளாம்.

**பாடல்: 6**

**பிறர் தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணார்**

**திறன் வேறு கூறின் பொறையும், அற வினையைக்**

**கார் ஆண்மை போல ஒழுகலும்,-இம் மூன்றும்**

**ஊராண்மை என்னும் செருக்கு**

**விளக்கம்**

மற்றவர் தன்னை விரும்பி மேன்மைப்படுத்துமிடத்து நாணுதலும், விரும்பாதவராய்த் தகுதியை வேறுபடச் சொல்லுமிடத்து அதனைப் பொறுத்தலும் உபகாரச் செய்கையை மேகம் ஆளுதல் போல ஆளுதல் செய்து நடத்தலும் இந்த மூன்றும் பிறர் மேற்பட்டுச் செல்லுகின்ற ஆண்மை என்கின்ற செல்வங்களாம்.

**பாடல்: 7**

**வாளை மீன் உள்ளல் தலைப்படலும், ஆள் அல்லான்**
**செல்வக் குடியுள் பிறத்தலும், பல் சவையின்**
**அஞ்சுவான் கற்ற அரு நூலும்,-இம் மூன்றும்**
**துஞ்சு ஊமன் கண்ட கனா**

**விளக்கம்**

வாளை என்னும் மீனை உள்ளான் என்னும் சிறு பறவை எடுக்க முயற்சி செய்தலும், ஆளமாட்டாதவன் செல்வமுள்ள குடியில் பிறந்து அதனை ஆளக்கருதுதலும், கற்றார் பலர் கூடிய சபையில் அஞ்சும் இயல்புடையவன் படித்துள்ள அருமையான நூலுணர்ச்சியும் ஆகிய இம்மூன்று செயல்களும் தூங்குகின்ற ஊமையானவன் கண்ட கனவைப் போலாம்.

**பாடல்: 8**

**தொல் அவையுள் தோன்றும் குடிமையும், தொக்கு இருந்த**
**நல் அவையுள் மேம்பட்ட கல்வியும், வெல் சமத்து**

**வேந்து உவப்ப அட்டு ஆர்த்த வென்றியும்,-இம் மூன்றும்**

**தாம் தம்மைக் கூறாப் பொருள்**

**விளக்கம்**

பழைமையை ஆராயவல்லோர் கூடியிருக்கும் சபையிடத்தே தானாக விளங்கித் தோன்றும் குடிப்பிறப்பும் பலவகை நூலோரும் கூடியிருந்த நல்ல சபையினிடத்தே மேன்மைப்பட்ட படிப்பும் வெல்லும் போரிடத்தே தம் வேந்தன் மகிழ பகைவரைக் கொன்று நிறைந்த வெற்றியும் ஆகிய இம்மூன்றும் தாமே தன்னைக் குறித்துப் புகழ்ந்து பேச வேண்டாத பொருள்களாம்.

**பாடல்: 9**

**பெருமை உடையார் இனத்தின் அகறல்,**

**உரிமை இல் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்,**

**விழுமிய அல்ல துணிதல்,-இம் மூன்றும்**

**முழுமக்கள் காதலவை**

**விளக்கம்**

பெருந்தன்மை உடையவருடைய இனத்தினின்றும் நீங்குதலும் தமக்கு உரியராதல் இல்லாத மாதரை விரும்பி அவரோடு வாழ்தலும் சிறந்தவை அல்லாதவற்றைச் சிறந்தவையாகத் துணிதலும் ஆகிய இம்மூன்றும் மூடர் விரும்புபவையாம்.

**பாடல்: 10**

**கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கு அறுக்கும்**

**மூத்தோரை இல்லா அவைக் களனும், பாத்து உண்ணாத்**

**தன்மையிலாளர் அயல் இருப்பும்,-இம் மூன்றும்**

**நன்மை பயத்தல் இல**

**விளக்கம்**

நெடுங்கணக்கு முதலியன கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத ஊரிலிருத்தலும், மாறுபட்ட பொருளை நீக்கும் கல்வி கேள்விகளில் முதிர்ந்தவர்கள் இல்லாத சபையிலிருத்தலும், பகுத்துச் சாப்பிடும் குணம் இல்லாதவர் பக்கத்திலிருத்தலும் ஆகிய இந்த மூன்றும் நன்மையைத் தருவன அல்லவாம், தீமை பயப்பனவாம்.

## சிறுபஞ்சமூலம்

ஆசிரியர் = காரியாசான், பாடல்கள் = கடவுள் வாழ்த்து 1, பாயிரங்கள் 2, செய்யுட்கள் 102, பாவகை = வெண்பா, காரியாசனும் ஏலாதியின் ஆசிரியருமான கணிமேதாவியாரும் மதுரைத் தமிழ் ஆசிரியர் மாகாயானரின் ஒரு சாலை மாணவர்கள் கண்டங்கத்திரி, சிறு வழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய வேர்கள் இணைந்து மனிதனின் நோயை குணப்பதுவது போல இந்நூல் மனிதனின் உள்ளப்பிணியை நீக்குகிறது. மருந்தின் பெயரால் பெயர் பெற்ற நூல். பஞ்சம் = ஐந்து, மூலம் = வேர் ஐந்து வேர்கள் = கண்டங்கத்திரி, சிறு வழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி.

**பாடல்: 1**

**ஒத்த ஒழுக்கம் கொலைபொய் புலால்களவொடு**

**ஒத்த இவையலவோர் நாலிட்டு - ஒத்த**

**உறுபஞ்ச மூலந்தீர் மாரிபோல் கூறீர்**

**சிறுபஞ்ச மூலம் சிறந்து**

**விளக்கம்**

பொருந்திய நன்னடக்கை, கொல்லுதல், இல்லது கூறல், புலால் உண்ணுதல், திருட்டு ஆகிய இவற்றுடனே பொருந்திய இவற்றுக்கு எதிரிடையாகி ஒரு கொல்லாமை, பொய்கூறாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை என்னும் நான்கையுஞ்சேர்த்து, உலகிற் பொருந்திய மிகுதியாகிய சிறுவிலைக் காலத்தின் காரணத்தை அகற்றுகின்ற மழையைப்போலச் சிறுபஞ்ச மூலங்களைப் போன்ற இந்நூலைச் சிறப்புற்ற கல்வியறிவாளரே! நீங்கள் மக்கள் தீய குணங்களை நீக்கி நற்குணங்களைப் பெருக்குமாறு சொல்லக்கடவீர்

**பாடல்: 2**

**பபொருள் உவடயொன் கண்வைத, வபொகம் அறனும்,**
**அருள் உவடயொன் கண்வைத ஆகும் அருள் உவடயொன்**
**பசய்யொன் பைி பொமே வசரொன் புறபமொனியும்**
**உய்யொன், பிறன் பசிக்கு உய்த்து**

**விளக்கம்**

உலக இன்பமானது, செல்வப் பொருளுடையவனிடத்துண்டாகும். நல்லொழுககம், இர்கம் உள்ளவனிடத்தில் உள்ளதாகும். அத்தகைய அருளையுடையவன், பழிக்கப்படும் தீய செயல்களைச் செய்யான், தீவினையைச் செய்ய மனத்திலும் நினையான். புறங்கூற்றுச் சொற்களையும் மற்றையவர் காதுகளில் செலுத்தி பிழைக்கமாட்டான்.

பாடல்: 3

**கற்புடைய பெண் அமிர்து கற்று அடங்கினான் அமிர்து**

**நற்பு உடைய நாடு அமிர்து நாட்டுக்கு நற்பு உடைய**

**மேகமே சேர் கொடி வேந்து அமிர்து சேவகனும்**

**ஆகவே செய்யின், அமிர்து**

**விளக்கம்**

கற்புள்ள பெண்ணானவள் தன் கணவனுக்கும் அமிர்தம் போல்வாள். அறிவுநூல்களைக் கற்று அவற்றின் வழியில் அடங்கி நிற்பவன் உலகத்தார்க்கு அமிர்தம் போல்வான். நன்மையுள்ள நாடு அமிர்தம் போன்றது. நாட்டுக்கு நன்மையைச் செய்கின்ற மேகத்தையளாவுகின்ற கொடியையுடைய அரசன் அமிர்தம் போல் இன்பஞ்சசெய்வான். சேவகனும் நன்மையானவற்றைச் செய்வானாயின் அவ்வேந்தனுக்கு அமிர்தம் போல்வான்.

பாடல்: 4

**கல்லாதான் தான் காணும் நுட்பமும், காது இரண்டும்**

**இல்லாதாள் ஏக்கழுத்தம் செய்தலும், இல்லாதான்**

**ஒல்லாப் பொருள் இலார்க்கு ஈத்து அறியான் என்றலும்,**

**நல்லார்கள் கேட்பின் நகை**

**விளக்கம்**

கல்லாதவனாகிய ஒருன் தானே ஆராய்ந்து காண்கின்ற நுண்பொருளும், இரண்டு காதுகளும் இல்லாதவளாகிய ஒருத்தி தான் மிக்க அழகுடையவளென்று இறுமாப்படைதலும், கையில் பொருளில்லாதவன் தன்னைப்போற் பொருளற்ற வறியவர்கட்கு அவர்களின் விருப்பந் தணிவதற்குப் பொருந்தாத பொருளைக்

கொடுத்து தான் வறியவரிடத்து மிகவும் அருளுடையவன் என்றாலும் அறிவுடையவர்களாகிய நல்லவர்கள் கேட்டால் அவர்கட்குச் சிரிப்பை உண்டாக்கும்.

**பாடல்: 5**

**உடம்பொழிய வேண்டின் உயர்தவம் ஆற்றீண்டு**
**இடம்பொழிய வேண்டுமேல் ஈகை - மடம்பொழிய**
**வேண்டின் அறிமடம் வேண்டேல் பிறர்மனை**
**யீண்டின் இயையுந் திரு**

**விளக்கம்**

உடலெடுத்தல், உன்னைவிட்டு நீங்க வேண்டமாயின் உயர்ந்த தவத்தச் செய்வாயாக இவ்வுலகத்தில் நீ இருக்கும் இடமானது புகழான மேன்மையடைய வேண்டுமானால் இரப்பவர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தலைச் செய்வாயாக மெல்லிய ஈரம் தனக்குள்ளே நிறைய வேண்டினாயாயின் அறிவின் கண் அடங்கியொழுகுக, பிறர் மனைவியை விரும்பாதொழிக, சிறிதாயினும் வருவாய் நாடோறும் பொருந்துமாயின் செல்வம் வந்து தானே நிறையும்.

**பாடல்: 6**

**படைதனக்கு யானை வனப்பு ஆகும் பெண்ணின்**
**இடை தனக்கு நுண்மை வனப்பு ஆம் நடைதனக்குக்**
**கோடா மொழி வனப்பு கோற்கு அதுவே சேவகற்கு**
**வாடாத வன்கண் வனப்பு**

**விளக்கம்**

நால்வகைப் படைக்கு யானைப் படையே அழகாகும், பெண்ணினுடைய இடைக்கு நுட்பமானது அழகாகும். ஒருவனுடைய ஒழுக்கத்திற்கு நடுநிலை தவறாத சொல்லே அழகாகும். செங்கோலுக்கு அந்தக் கோடாமொழியே அழகாகும், போர் வீரர்க்குக்கெடாத வீரமானது அழகாகும்.

**பாடல்: 7**

**பற்றினான், பற்று அற்றான் நூல், தவசி எப் பொருளும்**

**முற்றினான் ஆகும், முதல்வன் நூல் பற்றினால்**

**பாத்து உண்பான் பார்ப்பான் பழி உணர்வான் சான்றவன்**

**காத்து உண்பான் காணான், பிணி**

**விளக்கம்**

எல்லாப் பொருள்களிலுங்கலந்து நின்று அவற்றிற் சார்பில்லாதவனாகிய கடவுளாற் செய்யப்பட்ட முதனூலைக் கடைப்பிடித்து ஒழுகுகின்றவன் வீடுபேற்றை விரும்பி நோற்பவனாவான். எல்லாப் பொருளையும், முற்றவுணர்ந்தவன் எல்லார்க்கும் தலைவனாவான், நூல்களிற் கூறப்பட்ட அறங்களைக் கைக்கொள்வதனால் தன் மனைக்கு வரும் விருந்தினா் முதலியவர்களையுண்பித்துத் தானும் உண்கின்றவன் அந்தணனாவான், பழிக்கு ஏதுவான செயல்களை அறிந்து விலக்குவோன், அறிவானிறைந்த பெரியோனாவான், உடற்குப் பொருந்தாத உணவுகளை மறுத்து உண்பவன், நோய் கொள்ளான்.

**பாடல்: 8**

**கண் வனப்புக் கண்ணோட்டம் கால் வனப்புச் செல்லாமை**

**எண் வனப்பு, "இத் துணை ஆம்" என்று உரைத்தல் பண் வனப்புக்**

**கேட்டார், நன்று என்றல் கிளர் வேந்தன் தன் நாடு**

**வாட்டான், நன்று என்றல் வனப்பு**

**விளக்கம்**

கண்ணுக்கு அழகாவது பிறர் மேற்கண்ணோடுதலாம், கால்களுக்கு அழகாவது, பிறரிடத்தில் இரக்கப்போகாமையாம், ஆராய்ச்சிக்கு அழகாவது, பொருளை அறுதியிட்டு முடிவு செய்தலாம். இசைக்கு அழகாவது, அதனைக் கேட்டவர்க்ள இது நல்லது என்று புகழந்துரைத்தலாம். புகழினால் விளங்குகின்ற அரசனுக்கு அழகாவது தனது நாட்டில் உள்ள குடிகளை வருத்தாமல் இருப்பது.

**பாடல்: 9**

**கொன்று உண்பான் நாச் சாம் கொடுங் கரி போவான் நாச் சாம்**

**நன்று உணர்வார் முன் கல்லான் நாவும் சாம் ஒன்றானைக்**

**கண்டுழி, நாச் சாம் கடவான் குடிப் பிறந்தான்**

**உண்டுழி, நாச் சாம், உணர்ந்து**

**விளக்கம்**

ஒருயிரைக் கொன்று அதன் தசையைத் தின்பவுடைய நாக்கானது அற்று விழும், பொய்ச்சான்று கூறப்போகின்றவனுடைய நாக்கானது அற்று விழும், நன்றாகக் கற்றறிந்தவர்களுக்கு எதிரில் கற்றுணரா தவனுடைய நாக்கானது அடங்கம். தான் சொல்லிய சொல்லின் நெறியிடைப்போன ஒருவனைப் பார்த்த

விடத்து நாவெழாது, உயர்குடியிற் பிறந்தவன் தான்யாதானு மொருவனிடத்து ஒரு நன்மையைப் பெற்றுப் பின் அவன் குற்றஞ்செய்ததாக அறிந்த பொழுது அதனையுணர்ந்து நாவால் அதனைப் பிறாக்குச் சொல்லான்.

**பாடல்: 10**

**சிலம்பிற்குத் தன்சினை கூற்றம் நீள்கோடு**

**விலங்கிற்குக் கூற்றம் மயிர்தான் - வலம்படா**

**மாவிற்குக் கூற்றமாம் ஞெண்டிற்குத் தன் பார்ப்பு**

**நாவிற்கு நன்றல் வசை**

**விளக்கம்**

சிலந்திப்பூச்சிக்குத் தன்னுடைய கருவாகிய முட்டையே எமனாகும். எருது முதலிய மிருகங்களுக்கு நீண்ட கொம்புகளே எமனாகும், கவரிமானுக்கு அதன் மயிரே எமனாகும், நண்டுக்கு தன் குஞ்சுகளே எமனாகும். ஒருவனுடைய நாவுக்கு நன்மையல்லாத பழமொழிகள் எமனாகும்.

## ஏலாதி

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஏலாதி என்பதும் ஒன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏலாதி என்பது ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்ற ஆறு பொருள்களும் ஒரு குறிப்பிட்ட அளவோடு சேர்க்கப்பட்ட ஒரு வகை சூர்ணமாகும். இது உடலுக்கு வலிமை, பொலிவு, தெம்பு ஆகியவற்றைத் தரவல்லது. அதுபோல இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் கூறப்பட்டுள்ள ஆறு கருத்துகளும் மக்களின் அறியாமை நோயை நீக்கி அறிவைத் தரவல்லன. அதனால் இந்நூலுக்கு ஏலாதி என்ற பெயர் வந்தது

என்பர். மருந்துப் பெயர் பெற்ற கீழ்க்கணக்கு நூல்கள் மூன்றனுள் இது மூன்றாவதாகும்.

நூலின் ஆசிரியர் கணிமேதாவியார். இவரைக் கணிமேதையார் என்றும் அழைப்பர். கணிதமேதை என்னும் தொடரினைக் கொண்டு சோதிடத்தில் வல்லவர் என்பர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணைமாலை நூற்றைம்பதினை இயற்றியவரும் இவரே என்பர். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர்.

**பாடல்: 1**

**சென்ற புகழ், செல்வம், மீக்கூற்றம், சேவகம்**

**நின்ற நிலை, கல்வி, வள்ளன்மை, - என்றும்**

**அளி வந்து ஆர் பூங் கோதாய்! - ஆறும் மறையின்**

**வழிவந்தார்கண்ணே வனப்பு**

**விளக்கம்**

பூக்களை அணிந்த கூந்தலையுடைய பெண்யே! யாவரானும் ஒப்புக்கொள்ளப்பட்ட புகழும் செல்வமும் பெருந்தகைமையாக மதிக்கப்படும் சொல்லும் நின்ற நிலையினின்றும் வழுவாத ஆண்மையும் கல்வியறிவும் ஈகைத் தன்மையும் ஆகிய இவ்வாறு இயல்புகளும் உயர்குடியின் வழியிற் பிறந்து, திருநான்மறை வழியில் ஒழுகுபவரிடத்திலேயே எந்நாளும் அழகாவனவாம்.

**× பாடல்: 2**

**கொலையுரியான் கொல்லான் புலால் மயங்கான் கூர்த்த**

**அலைபுரியான் வஞ்சியான் யாதும் - நிலைதிரியான்**

**மண்ணவர்க்கும் அன்றி மதுமலிபூங் கோதாய்**

**விண்ணவர்க்கும் மேலாய் விடும்**

**விளக்கம்**

தேன் பொழியும் பூவை யணிந்த கூந்தலையுடையாய்! பிறர் புரியுங் கொலைத் தொழிலை விரும்பாதவனும், கொல்லாதவனும், தசையை அறிவு மயங்கித் தின்னாதவனும், மிகுந்த வருத்துந் தொழிலைச் செய்யாதவனும், பொய்யொழுக்கமில்லாதவனும், யாது காரணம் பற்றியும் தன்னிலைமையினின்று விலகாதவனும், பூவுலகத்தாரது வணக்கத்துக் குரியனாவதுடன் வானுலகத்தார் வணக்கத்துக்கும் உரியவனாவது திண்ணம்.

**பாடல்: 3**

**தவம் எளிது தானம் அரிது தக்கார்க்கேல்,**

**அவம் அரிது ஆதல் எளிதால் அவம் இலா**

**இன்பம் பிறழின், இயைவு எளிது மற்று அதன்**

**துன்பம் துடைத்தல் அரிது**

**விளக்கம்**

யாவர்க்குந் தவஞ் செய்தல் எளிது, கைப்பொருள் வழங்கல் அரிது பெரியோர்க்குக் குற்றத்துக் குள்ளாதல் அரிது நன்னெறியி லொழுகுதல் எளிது. கெடுதலில்லாத இன்பநெறி தடுமாறிச் சென்றால் பிறப்பிற் பொருந்துதல் எளிது. அவ்வாறு பிறந்ததின்கணுண்டாகுந் துன்பத்தை நீக்கிக் கொள்ளுதல் அரிது.

**பாடல்: 4**

**இடர் தீர்த்தல், எள்ளாமை, கீழ் இனம் சேராமை,**

**படர் தீர்த்தல் யார்க்கும், பழிப்பின் நடை தீர்த்தல்,**

**கண்டவர் காமுறும் சொல், - காணின், கலவியின்கண்**

**விண்டவர்நூல் வேண்டா விடும்**

**விளக்கம்**

பிறர்க்கு நேரிட்ட துன்பந் துடைத்தலும், பிறரை இகழாமையும், கீழ்மக்களோடு பழகாமையும், யாவர்க்கும் பசித்துன்பம் போக்குதலும், உலகம் பழிக்கும் நடையினின்று நீங்குதலும், தன்னை யெதிர்ப்பட்டவர் விரும்பும் இன்சொல்லும் ஒருவன் தானே கண்டுகொண்டானெனில் கற்றறிந்தோராற் சொல்லப்பட்ட நூல்களைப் பார்த்து அறிய வேண்டிய பொருள் ஒன்றுமில்லாதவன் ஆவன்.

**பாடல்: 5**

**தனக்கு என்றும், ஓர் பாங்கன், பொய்யான் மெய் ஆக்கும்**

**எனக்கு என்று இயையான், யாது ஒன்றும் புனக் கொன்றை**

**போலும் இழையார் சொல் தேறான் களியானேல்**

**சாலும், பிற நூலின் சார்பு**

**விளக்கம்**

தனக்கென்றும் தன்னைச் சார்ந்தவனுக் கென்றும் பொய்யுரையாதவனாய், உண்மையையே யுரைப்பவனாய், யாதொரு பொருளையும் எனக்குரியதென அன்பு வையாதவனாய், முல்லை நிலத்திலுள்ள கொன்றை மலரை ஒக்கும் அணிகளை யணியும் மாதர் சொல்லைப் பேணாதவனாய், செல்வச் செருக்கில்லாதவனாய்

ஒருவன் வாழ்வானாயின், அவனிடத்து அறநூல்களிற் கூறப்பட்ட மேன்மையான பொருள்களெல்லாம் வந்து நிரம்பும்.

**பாடல்: 6**

> **நிறை உடைமை, நீர்மை உடைமை, கொடையே,**
>
> **பொறை உடைமை, பொய்ம்மை, புலாற்கண் மறை உடைமை,**
>
> **வேய் அன்ன தோளாய்! - இவை உடையான் பல் உயிர்க்கும்**
>
> **தாய் அன்னன் என்னத் தகும்**

**விளக்கம்**

மூங்கிலை யொத்த தோளையுடையவளே! புலன்வழி போகாது தன் மனதை நிறுத்தலுடைமையும், நற்குணமுடையனாதலும் ஈதலும் பொறுமையோடிருத்தலும், பொய்கூற விடாது தன்னை யடக்குதலும், ஊன் தின்னவிடாது தன்னையடக்குதலும் ஆகிய இவ்வாறும் பொருந்திய ஒருவன், பல உயிர்கட்கும் தாயினது அன்புபோலும் அன்பினை யுடையவன் என்று யாவருஞ் சொல்லத்தகுந்தவன் ஆவன்.

**பாடல்: 7**

> **இன்சொல், அளாவல், இடம், இனிது ஊண், யாவர்க்கும்**
>
> **வன்சொல் களைந்து, வகுப்பானேல் மென் சொல்,**
>
> **முருந்து ஏய்க்கும் முள் போல் எயிற்றினாய்! - நாளும்**
>
> **விருந்து ஏற்பர், விண்ணோர் விரைந்து**

**விளக்கம்**

மிருதுவாகிய சொல்லையும் மயிற்பீலியினது அடியையொத்து விளங்கும் கூரிய பல்லையுமுடையாய்! தன் மனை நோக்கி வரும் விருந்தினர் யாவரிடத்தும் இன்சொற் கூறலும், கலந்துறவாடலும், இருக்கையுதவலும், அறுசுவை யுண்டியளித்தலும் செய்து, கடுஞ்சொலொழித்து மென்சொல் வழங்கிச் சிறப்பிப்பானாயின் எக்காலமும் அவனை வானோர் விருந்தினனாய் ஏற்றுக்கொள்வர்.

**பாடல்: 8**

**உடன்படான், கொல்லான், உடன்றார் நோய் தீர்ந்து,**

**மடம் படான், மாண்டார் நூல் மாண்ட இடம் பட**

**நோக்கும் வாய் நோக்கி, நுழைவானேல், - மற்று அவனை**

**யாக்குமவர் யாக்கும், அணைந்து**

**விளக்கம்**

ஒன்றினைப் பிறர் கொல்ல உடன்படாது, தானுங் கொல்லாது, பிணியால் வருந்தினார் நோயைத் தீர்த்து பேதைமையின்கட் படாதே, மாட்சிமைப்பட்டார் நூல்களின் மாட்சிமைப்பட்ட குணங்க டனக்குப் பெருகும்படி யாராயுமாயின், தானாராய்ந்தவற்றின்கணுள்புக் கொழுகுவனாயின், அவனை யணைந்தார்க்கு நெறியெல்லாங் கூடியாக்கும்.

**பாடல்: 9**

**கற்றாரைக் கற்றது உணரார் என மதியார்,**

**உற்றாரை அன்னணம் ஓராமல், அற்றார்கட்கு**

**உண்டி, உறையுள், உடுக்கை, இவை ஈந்தார்**

**பண்டிதராய் வாழ்வார், பயின்று**

**விளக்கம்**

கற்றாரைக் கற்றிலரென்று மனதிற் கொள்ளாதே, உற்றாரையு முற்றாரென்று கொள்ளாதே, பொருளற்றார்க்குணவும், மருந்தும், உறையிடமும், உடுக்கையும் பயின்று கொடுத்தா ரறிவுடையாரென்று பிறரான் மதிக்கப்படுவர்.

பாடல்: 10

**செங் கோலான், கீழ்க் குடிகள், செல்வமும் சீர் இலா**

**வெங் கோலான், கீழ்க் குடிகள், வீந்து உகவும் வெங் கோல்**

**அமைச்சர், தொழிலும், அறியலம் - ஒன்று ஆற்ற**

**எனைத்தும் அறியாமையான்**

**விளக்கம்**

செங்கோலானது செல்வமும், அவன் கீழ்வாழுங் குடிகளது செல்வமும், வெங்கோலானது கேடும், அவன் கீழ் வாழுங் குடிகளது கேடும், வெங்கோலமைச்சரது கேடும், அவர் தொடங்கிய வினை முடியாது கெடுதலும், இவ்வாறினையுமொரு திறனறிய மாட்டோம். யாது மெமக்கறியப் பொருந்தாமையின்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | நாலடியார் பற்றி விவரி | K2 | CO4 | PO4 |
| 2 | கல்விப் பற்றி நாலடியார் கூறம் கருத்துகளை விவரி | K4 | CO2 | PO2 |
| 3 | பெரியாரைப் பிழையாமை என்ற அதிகாரத்தில் கூறம் செய்திகளை ஆராய்க.. | K3 | CO1 | PO1 |
| 4 | ஒரு தளராத முயர்ச்சி உடையவனாக இருக்கவேண்டும் என்று நாலடியார் கூறும் கருத்தினைப் பற்றி எழுதுக. | K6 | CO3 | PO2 |
| 5 | நல்ல இனத்தோடு சேரவேண்டும் என்று கூறும் அறக் கருத்தினைப் பற்றி எழுதுக. | K1 | CO2 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | ஒருவன் குடிப்பிறப்பபை வைத்து தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்பதை அறியமுடியாத என்பதைப் பற்றி விளக்குக. | K4 | CO1 | PO4 |
| 2 | மேன் மக்களின் பண்புகலன்ப் பற்றித் தொகுத்து எழுதுக. | K2 | CO4 | PO5 |
| 3 | சுற்றம் தாழல் என்ற அதிகாரத்தில் கூறும் கருத்தினைத் தெரிவு செய்க. | k1 | CO5 | PO2 |
| 4 | நட்பினை ஆராய்ந்து பழகவேண்டும் என்பதைப் பற்றிக் கூறுக. | K5 | CO4 | PO1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | தாளாண்மையைப் பற்றிக் கட்டுரை வரைக. | K3 | CO3 | PO3 |

# அலகு - 4

## மூதுரை

வாக்குண்டாம் எனப்படும் மூதுரை என்பது வளர்ந்த நிலையில் பின்பற்றப்படும் அறக்கருத்துக்களைக் கொண்டதாகும். மொத்தம் 31 பாடல்களைக் கொண்ட தாகும். கல்விஇ பொருள்இ நற்குணங்கள் இவற்றை வலியுறுத்தும் கருத்துக்களை உள்ளடக்கியதாகும். அதிகமாக நற்செயல்கள்இ நல்லவர்கள் பற்றிய கருத்துக்களில் கவனம் கொண்டுள்ளமை சிறப்பாகும்.

### கடவுள் வாழ்த்து

**“வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்**
**நோக்கு உண்டாம் மேனி நுடங்காது-பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு”**

**விளக்கம்**

பூக்களைக் கொண்டு சிவந்த மேனியுடைய விநாயகரது பாதங்களைத் துதிப்பவர்க்கு வாக்குத் திறமையும், நல்ல மனமும், பெருமலரை உடைய லக்ஷ்மியின் கடாக்ஷமும், நோயற்ற வாழ்வும் கிடைக்கும்

**பாடல் : 1**

**"நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி**
**"என்று தருங்கொல்?" என வேண்டா- நின்று**
**தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்"**

**விளக்கம்**

ஒருவர்க்கு உதவி செய்யும்போது, அதற்கு ப்ரதியுபகாரமும், நன்றியும் எப்போது கிடைக்கும் என்று கருதி செய்யக்கூடாது. எப்படிப்பட்ட நீரை வேர் மூலம் உண்டாலும், நன்கு தளராது வளர்ந்துள்ள தென்னை மரம் அந்நீரை சுவையான இளநீராக தந்து விடும். அதுபோல ஒருவர்க்கு செய்த சிறு உதவியும் பெரிய விதத்தில் நமக்கு ஒரு காலம் நிச்சயம் நன்மை பயக்கும்.

**பாடல் : 2**

**"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்**
**நீர் மேல் எழுத்துக்கு நேர்"**

**விளக்கம்**

நல்லவர்களுக்கு செய்யும் உதவிஇ கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவது போன்றது. அது எவரும் அறியும் வண்ணம் என்றும் நிலைத்திருக்கும். அப்படியல்லாது இரக்கமற்றவர்களுக்கு செய்யும் உதவி எவர்க்கும் பயன்தராது. அது நீரின் மேல் எழுதும் எழுத்துக்களைப் போன்று பயனின்றி நிலைக்காது போகும்.

**பாடல் : 3**

**"இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்**
**இன்னா அளவில் இனியவும்- இன்னாத**
**நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே**
**ஆள் இல்லா மங்கைக்கு அழகு"**

**விளக்கம்**

இளமையில் வறுமையும், இயலாத முதுமையில் செல்வமும் பெற்றால் அதனால் துன்பமே. அனுபவிக்க முடியாது. அது பருவமில்லாத காலங்களில் பூக்கும் பூக்களைப் போன்றது. அதைப் போல் துணைவனில்லாத பெண்களின் அழகும் வீணே.

**பாடல் : 4**

**"அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்**
**நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்"**

**விளக்கம்**

நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு.

**பாடல் : 5**

**"அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி**
**எடுத்த கருமங்கள் ஆகா-தொடுத்த**
**உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்**
**பருவத்தால் அன்றிப் பழா"**

**விளக்கம்**

கிளைகளோடு கூடிய நீண்ட மரங்களும் பருவத்தில் மட்டும் பழங்களைத் தரும். அது போல மேன்மேலும் முயன்றாலும் நாம் செய்யும் கார்யங்கள் தகுந்த காலம் கூடினால் மட்டுமே பயன் தரும்.

**பாடல் : 6**

**"உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்**
**பற்றலரைக் கண்டால் பணிவரோ?-கல்தூண்**
**பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்**
**தளர்ந்து விளையுமோ தான்"**

**விளக்கம்**

கல் தூண் ஓரளவுக்கு மேல் பாரத்தை ஏற்றினால் உடைந்து விழுந்து விடுமேயல்லாது, வளைந்து போகாது. அது போலவே மானக்குறைவு ஏற்பட்டால் உயிரை விட்டு விடும் தன்மையுள்ளவர்கள் எதிரிகளைக் கண்டால் பணிவதில்லை.

**பாடல் : 7**

**"நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான் கற்ற**
**நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு-மேலைத்**
**தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்**
**குலத்து அளவே ஆகும் குணம்"**

**விளக்கம்**

அல்லிப்பூ நீரின் அளவு எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவே வளரும். நாம் கற்ற நூல்களின் அளவே நம் அறிவு. முற்பிறப்பில் செய்த புண்ய கார்யங்களின் அளவே நாம் இப்போது அனுபவிக்கும் செல்வம். குணம் நாம் தோன்றிய குலத்தின் அளவே.

**பாடல் : 8**

**"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க**
**நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே-நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்று"**

**விளக்கம்**

நல்லவர்களைக் காண்பதும்இ நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்கள் குணங்களை மற்றவரிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நல்லது.

**பாடல் : 9**

**“தீயாரைக் காண்பதுவும் தீதே திரு அற்ற**
**தீயார் சொல் கேட்பதுவும் தீதே-தீயார்**
**குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் தீது”**

**விளக்கம்**

தீயவர்களைப் பார்ப்பதும் பயனற்ற அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்களைப் பற்றி அடுத்தவர்களிடத்தில் சொல்வதுவும்,அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நமக்குக் கெடுதியே.

**பாடல் : 10**

**“நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்-தொல் உலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை”**

**விளக்கம்**

உழவன் நெல்லுக்குப் பாய்ச்சும் நீர் அங்கிருக்கும் புல்லுக்கும் பயனைத் தரும். அது போலவே இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவர்க்காகப் பெய்யும் மழை (பலன்கள்) எல்லாருக்குமே பயனைத் தரும்.

பிற்காலத் தமிழிலக்கியங்களில் நீதிநூல் வரிசையில் ஔவையார் இயற்றியதாகக் கூறப்படும் ‘‘நல்வழி’’ எனும் இந்த இலக்கியம், பள்ளி மாணவ மாணவியர் அவசியம் படிக்கவேண்டிய நூல். மனிதர்கள் எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டும், எவற்றையெல்லாம் கடைபிடிக்க வேண்டுமென்கிற வழிகளைக் கூறும் நூல் இது. மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் படித்து அறிந்து அதனை நடைமுறையில் பாவிக்க வேண்டிய நூல் இது. இந்நூல் மிக எளிய தமிழ் நடையில் இயற்றப்பட்டிருக்கிறது, இதற்கு ஒன்றும் உரை தேவையில்லை எனினும் சிறிதளவு விளக்கம் கொடுத்து அந்தப் பாடல்களைச் சொன்னால் விரும்பிப் படிக்கத் தோன்றும் என்பதால் இவைகளுக்கும் ஒரு சிறிது விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இளைய தலைமுறை இதுபோன்ற அரிய நூல்களைப் படிப்பதால் அவர்களுடைய வாழ்வு சிறக்கும், பண்பான நடைமுறைகளைப் பின்பற்றுவர். பெரியவர்கள் படிப்பதால் தங்கள் பிள்ளைகளுக்கு இதில் அடங்கியுள்ள செய்திகளைச் சொல்லி நல்வழிப் படுத்த முடியும். உரையாற்றுவோர் இதில் காணப்படும் நீதிகளைத் தங்கள் உரையில் சொல்லித் தங்கள் உரையை சுவையுடையதாக்கிக் கொள்ளலாம். இந்த நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது பாடல்கள் உள்ளன.

**(கடவுள் வாழ்த்து)**

**ஆனைமுகன்**

**“பாலுந் தெளிதேனும் பாகும்பருப்புமிவை**

**நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்-கோலஞ்செய்**

**துங்கக் கரிமுகத்துத் தூமணியேநீயெனக்குச்**

**சங்கத் தமிழ்மூன்றுந் தா"**

நான் அழகுக்கோலம் செய்து வைத்திருக்கும் யானைமுகக் கடவுளே! நான் உனக்குப் பால், தேன், பாயாசம், பருப்பு ஆகிய நான்கு பொருளகளையும் கலந்து தருகிறேன். அதற்கு ஈடாக நீ எனக்கு இயல், இசை, நாடகம் என்னும் சங்கத்தமிழ் நூல்கள் மூன்றை மட்டும் தந்தால் போதும்.

**நன்மை செய்தல்**

**பாடல்: 1**

**"புண்ணியம்ஆம் பாவம்போம் போனநாட் செய்தஅவை**

**மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள்-எண்ணுங்கால்**

**ஈதொழிய வேறில்லை எச்சமயத்தோர்சொல்லுந்**

**தீதொழிய நன்மை செயல்"**

**விளக்கம்**

மண்ணில் பிறந்தவர் வைத்திருக்கும் பொருள் போன பிறவியில் செய்த புண்ணியம் பாவம் என்னும் இரண்டே. இதைத் தவிர வேறு இல்லை என்று எல்லாச் சமயங்களும் கருதிப் பார்த்துச் சொல்லுகின்றன. எனவே தீமைகளை விலக்கித் தள்ளிவிட்டு நன்மை தரும் செயல்களைச் செய்வோம். அதனால் புண்ணியம் பெருகும். பாவம் போய்விடும். அடுத்த பிறவிக்கு முதலாக இருக்கும்.

**சாதி இரண்டு**

**பாடல்: 2**

**“சாதி யிரண்டொழிய வேறில்லைசாற்றுங்கால்**

**நீதி வழுவா நெறிமுறையின்-மேதினியில்**

**இட்டார் பெரியோர் இடாதார்இழிகுலத்தோர்**

**பட்டாங்கில் உள்ள படி”**

**விளக்கம்**

பட்டறிவு கண்டு வைத்துள்ளபடியும், நீதி தவறாத நெறிமுறைப்படியும் பறைசாற்றினால், இந்த உலகில் இருப்பவை இரண்டே சாதியைத் தவிர வேறு இல்லை. இல்லாதவர்களுக்குக் கொடுப்பவர்கள் பெரியோர் ஆவர். அவர்கள் உயர்ந்த சாதி. கொடுக்காதவர்கள் தாழ்ந்த சாதி.

**இடும்பை**

**பாடல்: 3**

**“இடும்பைக்கு இடும்பை இயலுடம்பி தன்றே**

**இடும்பொய்யை மெய்யென் றிராதே-இடுங்கடுக**

**உண்டாயி னுண்டாகும் ஊழிற் பெருவலிநோய்**

**விண்டாரைக் கொண்டாடும் வீடு”**

**விளக்கம்**

இந்த உடம்பே துன்பத்துக்கெல்லாம் பெரும் துன்பமாக இருக்கிறது அல்லவா?. இது பொய்யான உடம்புதானே. இதனை மெய் என்று எண்ணிக்கொண்டு இருக்கலாமா? கூடாது. ஊழ்தான் இதனை இட்டுக்

காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. நல்லூழ் இருந்தால் இது நன்றாக இருக்கும். இதற்கு ஊழே பெரிய வலிமை. நோய் இந்த உடம்பிற்கு இடும்பை. இதனை விளங்கிக்கொண்டு வாழ்வதுதான் வீடுபேறு. இந்த வீடுபேற்றினைப் பெற்று வாழ்பவர்களை உலகம் கொண்டாடும்.

**குருடன் மாங்காய் அடித்தல்**

**பாடல்: 4**

> **"எண்ணி ஒருகருமம் யார்க்குஞ்செய்யொண்ணாது**
> **புண்ணியம் வந்தெய்து போதல்லாற்-கண்ணில்லான்**
> **மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே**
> **ஆங்கால மாகு மவர்க்கு"**

**விளக்கம்**

எண்ணி ஒரு செயலை யாராலும் செய்துமுடிக்க இயலாது. செய்துமுடிக்கும் செயலெல்லாம் அவன் செய்த புண்ணியத்தால் நிறைவேறியது. கண் தெரியாத ஒருவன் தன் கையிலிருந்த தடியை வீசி மாங்காய் விழுவது போன்று அது நிறைவேறும். அது அவனுக்கு ஆகும் காலம். (ஆகு ஊழால் தோன்றும் அசைவு இன்மை, கைப்பொருள் போகு ஊழால் தோன்றும் மடி – திருக்குறள்)

**வராதது வராது**

**பாடல்: 5**

**“வருந்தி அழைத்தாலும் வாராதவாரா**

**பொருந்துவன போமினென்றாற் போகா-இருந்தேங்கி**

**நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாம்நினைந்து**

**துஞ்சுவதே மாந்தர் தொழில்”**

**விளக்கம்**

வருத்தப்பட்டு முயன்று அழைத்தாலும் நமக்குச் சேரவேண்டியவை அல்லாதன நமக்கு வந்து சேர்வதில்லை. நம்மிடம் வந்து பொருத்த வேண்டியவை நம்மை விட்டுப் போகவேண்டும் என்றால் போவதும் இல்லை. அப்படி இருக்கும்போது ஒன்றை அடையவேண்டும் என்னும் ஏக்கத்தோடு நெஞ்செல்லாம் புண்ணாகும்படி நெடுந்தூரம் திட்டமிட்டுக்கொண்டிருந்து சாவதே மாந்தரின் தொழிலாகப் போய்விட்டது. அப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யலாம் அப்படிச் செய்திருக்கலாம், இப்படிச் செய்திருக்கலாம் என்று நெடுந்தாரம் நினைத்து தினைத்துச் சாவதே மாந்தரின் தொழிலாகப் போய்விட்டது.

**உள்ளதுதான் கிடைக்கும்**

**பாடல்: 6**

**“உள்ள தொழிய ஒருவர்க்கொருவர்சுகங்**

**கொள்ளக் கிடையா குவலயத்தில்-வெள்ளக்**

**கடலோடி மீண்டு கரையேறினாலென்**

**உடலோடு வாழும் உயிர்க்கு”**

**விளக்கம்**

ஒருவருக்கென்று உள்ளது அவரது உடல், உயிர், இவற்றில் முளையாக ஊறிக்கிடக்கும் ஊழ் ஆகியவற்றை அன்றி ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளத்தக்க சுகம் வேறொன்றும் இல்லை. வெள்ளத்திலோ, கடலிலோ ஓடியோ, இழுத்துச் சென்றோ மீண்டு வரையேறினாலும் அவரவர் உடலில்தான் சுகம் காணமுடியும். ஆண் பெண் உறவில்கூடத் தருவது மற்றொருவராயினும் சுகம் காண்பது அவரவர் உடலோடு வாழும் உயிர்தான்.

**தாமரை இலையில் தண்ணீர்**

**பாடல்: 7**

**"எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு**
**பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை-நல்லார்**
**அறிந்திருப்பார் ஆதலினால் ஆங்கமல நீர்போற்**
**பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு"**

**விளக்கம்**

எல்லா வகையாலும் எண்ணிப் பார்க்கும்போது இந்த உடம்பு பொல்லாத புழுக்கள், அவற்றால் மிகும் நோய் அகியவற்றைக் கொண்ட அற்பமான ஒரு கூடு. (உயிர்க் குருவி போய்விட்டால் அதனால் என்ன பயன்) இந்த உண்மையை நல்லவர்கள் அறிந்திருக்கின்றனர். அதனால் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாதது போல உடல் இன்பத்தோடு ஒட்டியும் ஒட்டாமலும் இருப்பர்.

**ஊழ், செல்வம்**

**பாடல்: 8**

**“ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்தவாயினும் ஊழ்**

**கூட்டும் படியன்றிக் கூடாவாம்-தேட்டம்**

**மரியாதை காணு மகிதலத்தீர்கேண்மின்**

**தரியாது காணுந் தனம்”**

**விளக்கம்**

பொருள் ஈட்டும் முயற்சி கணக்கில் அடங்காத பலவாயினும் கைக்கூடுவது ஊழின் அளவே நிகழும். அதற்கு மேல் செல்வம் சேராது. தேடிய செல்வத்தால் மரியாதை காணும் மகிமை பொருந்திய உலக மக்களே! இதனைக் கேட்டுக்கொள்ளுங்கள். அந்தச் செல்வமும் ஒருவரிடம் நிலையாகத் தரித்து இருப்பதில்லை.

**குடிப்பிறந்தார்**

**பாடல்: 9**

**“ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந்நாளுமவ்வாறு**

**ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்-ஏற்றவர்க்கு**

**நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார்ஆனாலும்**

**இல்லையென மாட்டார் இசைந்து”**

**விளக்கம்**

ஆற்றில் வரும் மழைவெள்ளத்தின் வரத்து அற்றுப்போயிற்று. ஆற்று மணல் நடப்பவரின் காலடியைச் சுடுகிறது. அப்படிப்பட்ட காலத்திலும் ஊற்று வெள்ளம் வந்து உலகுக்கு நீரை ஊட்டும். நல்ல குடியில் பிறந்த மேன்மக்களும் அப்படித்தான். தம் செல்வத்தை இழந்து வறுமையில் வாடினாலும்

மனம் ஒப்பி இல்லை என்று சொல்லமாட்டார்கள். (குமணன் புலவர்க்குக் கொடை நல்க முடியாத நிலையில் காட்டில் தலைமறைவாக வாழ்ந்தபோது, தன் தலையை வெட்டிக்கொண்டு சென்று தன் தன் தம்பி கையில் கொடுத்து அதன் விலையைப் பெற்றுக்கொள்ளுமாறு புலவரிடம் தன் வாளைக் கொடுத்த கொடையை இங்கே நினைவுகூரலாம்.)

**மாண்டார்**

**பாடல்: 10**

> **“ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
> **மாண்டார் வருவரோ மாநிலத்தீர்-வேண்டா**
> **நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்**
> **எமக்கென்னென் றிட்டுண் டிரும்”**

**விளக்கம்**

இறந்தவரை எண்ணி ஆண்டுக்கணக்கில் அழுது புரண்டாலும், இறந்தவரின் நினைவுநாள் ஆண்டு அண்டு தோறும் வரும்போதெல்லாம் இறந்தவரை நினைத்துக்கொண்டு அழுது அழுது புரண்டாலும், மாண்டுபோனவர் திரும்பி வருவது இல்லை. மாநிலத்தில் உள்ளவர்களே! அழவேண்டா. நமக்கும் அவர் போன அதே வழிதான். எனவே, எனக்கு இவை எதற்கு என்று எண்ணி மற்றவர்களுக்கு உணவிட்டுத் தானும் உண்டு வாழ்ந்துகொண்டிருங்கள். உயிர் போகும் வரை இட்டும் உண்டும் வாழ்ந்துகொண்டிருங்கள்.

## வெற்றிவேற்கை

### அதிவீரராம பாண்டியன்

இந்நூலை இயற்றியவர் கொற்கை நகரத்திலிருந்து ஆட்சி புரிந்த அரசர் அதிவீரராம பாண்டியன் என்பவர். இவர் பாண்டிய மரபினர். இவரை தென்காசிப் பாண்டியர் என்றும் கூறுவர். இவருடைய ஆட்சிக் காலம் 11-12ம் நூற்றாண்டு எனத் தெரிகிறது. இவர் தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்கவர். குருமூலமாக சிவ தீட்சை பெற்ற சிவபக்தர். இவர் இயற்றிய பிறநூல்கள் நைடதம், இலிங்கபுராணம், காசிக் காண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதி போன்றவை. இவருடைய சகோதரர் புலவர் வரதுங்க ராம பாண்டியன்.

இந்தப் புத்தகத்துக்கு "வெற்றிவேற்கை", "நறுந்தொகை" என்று இரண்டு பெயருண்டு. வெற்றிவேற்கை யென்பது புத்தகத்திலுள்ள தொடர்மொழி. இ∴து ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்பனபோல் முதற்குறிப்பாகுபெயர். "நறுமை ௶ தொகை" என்பது நறுந்தொகை யென்றாயிற்று. இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. "நல்ல நீதி வாக்கியங்களினாற் றொகுக்கப்பட்டதென்பது பொருள்.

இதனை அதிவீரராம பாண்டியன் என்பவர் இயற்றினார். இவர் பாண்டி நாட்டிலுள்ள தென்காசியில் அரசு செலுத்தினவர். சந்திரவம்சத்துச் சிற்றரசர். சைவ சமயத்தினர். இவர் சகோதரர் வரதுங்கராம பாண்டியன். தென்காசியின் சிலாசாசனத்தினால் இவர் காலம் சாலிவாகன சகம் 1485 என்று தெரியவருகிறது. மதுரைக்கருகிலுள்ள கொற்கை யென்னும் பட்டணத்தில் இவரிருந்து அரசு நடத்தவில்லை. அ∴து ஒருசமயம் இவரைச் சேர்ந்ததாக விருந்திருக்கலாம். இவர் செய்த வேறு நூல்கள் நைடதம், கூர்ம புராணம், காசிகாண்டம் என்பன. இவா சகோதரர் செய்த நூல் பிரமோத்தரகாண்டம்.

சிலர், கருவை வெண்பவந்தாதி கருவைக் கலித்துறையந்தாதி, கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி யென்ற மூன்று அந்தாதிகளை யும் இவர் செய்தாரென்று சொல்லுகின்றனர். இன்னுஞ் சிலர், இவர் சகோதரர் செய்தாரென்று அபிப்பிராயப்-படுகின்றனர். அப் புத்தகங்களினால் செய்தவரை அறிய முடியவில்லை.

பிரதம பாடசாலை (ப்ரைமெரிஸ்கூல்) மாணவர்களின் உபயோகத்தை நினைந்து உலகநீதி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, நல்வழி யென்ற ஐந்து புத்தகங்களுக்கும் உரையும் கதைக்குறிப்பும் எளிய நடையிலெழுதி வெளிப்படுத்தி-யிருக்கிறோம். அவற்றில் இது. வெற்றிவேற்கை உரையும் கதைக்குறிப்பும் என்பது. பிள்ளைகளுக்கு நீதி, மதம் இவை சம்பந்தமான சரித்திரங்களைக் கற்பிக்க இதுபோன்ற சிறு நூல்கள் இன்றியமையாதன.

**கடவுள் வாழ்த்து**

**பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்**

**சரண அற்புத மலர் தலைக்கு அணிவோமே.**

வெற்றி வேற்கையின் கடவுள் வாழ்த்தில் விநாயகக் கடவுள் போற்றப்பட்டுள்ளார். என்னும் கடவுள் வாழ்த்தில் விநாயகப் பெருமான் ஐங்கரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார். ஐங்கரன் என்பது ஐந்து கரங்களைக் கொண்டவன் என்பதை உணர்த்தும். விநாயகன் வலப்பக்கத்தில் இரண்டு கைகளையும் இடப்பக்கத்தில் இரண்டு கைகளையும் முன்பக்கத்தில் தும்பிக்கையையும் கொண்டவன். இவ்வாறு ஐந்து கரம் கொண்டுள்ளதால் ஐங்கரன் என்று அழைக்கப்பட்டுள்ளான். பிரணவ மந்திரத்தின் பொருளாக ஐங்கரன் விளங்குகிறான் என்பதையும் இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல் தெரிவிக்கிறது.

**நூல் பயன்**

**வெற்றி வேற்கை வீர ராமன்**

**கொற்கையாளி குலசேகரன் புகல்**

**நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்**

**குற்றம் களைவோர் குறைவிலாதவரே!**

வெற்றிவேற்கை என்னும் இந்நூல் முதலில் 'நறுந்தொகை' என்றே அழைக்கப்பட்டது. நல்ல பாடல்களின் தொகுப்பு என்பது இதன் பொருள் ஆகும்.

இந்த நூலின் பயனைத் தெரிவிக்கும் பாடல் 'வெற்றிவேற்கை' என்று தொடங்குகிறது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம் முதலிய அறநூல்கள் செய்யுளின் முதல் சொல்லால் அழைக்கப் படுவதைப் போல் இந்த நூலும் 'வெற்றிவேற்கை' என்று அழைக்கப் படுகிறது.

என்னும் நூல்பயன் பாடலில் இடம் பெற்றுள்ள 'வெற்றிவேற்கை' என்பதே நூலின் தலைப்பு ஆகிவிட்டது. இங்கே வெற்றி வேற்கை என்பது அதிவீரராம பாண்டியனுக்கு அடைமொழியாக வந்துள்ளது. வெற்றிதரும் வேலைக் கையில் ஏந்திய வீரராமன் என்பது இதன் பொருள். இந்தப் பாடலின் மூலம், அதிவீரராம பாண்டியன் கொற்கையை ஆட்சி செய்தவன் என்பதையும் குலசேகரன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன் என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

**வாழிய நலனே் வாழிய நலனே!**

**(சில பிரதிகளில் இப்பாடல் காணப்படவில்லை)**

**நூல்**

1.

**எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்**

**விளக்கம்**

எழுத்து முதலாகக் கற்பிக்க வேண்டுதலின் கல்வியை எழுத்து என்றார். ஆசிரியனைத் தெய்வமாகக் கருதி வணங்க வேண்டுமென்பது கருத்து.

## 2. கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்

உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் விட, கல்வியே சிறந்தது. கல்வியின் சிறப்பை உணர்த்தும் பல தொடர்களை வெற்றி வேற்கை தெரிவித்துள்ளது.

கல்வி கற்றவர்கள் பிறரால் மதிக்கப்படுவார்கள். கல்வி கல்லாதவர்கள் அவ்வாறு மதிக்கப்படுவதில்லை. கல்வி கல்லாதவர்கள் செல்வத்தில் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும் உலகம் அவர்களை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை என்பதை வெற்றி வேற்கை தெரிவித்துள்ளது.

- **கசடு அற மொழிதல்**

கல்வி பெருமையுடையது கற்றவர்கள் மதிக்கப்படுவார்கள் என்பதில் எள் அளவும் ஐயம் இல்லை. ஆனால், ஒருவன் கல்வி அறிவு பெற்றவன் என்பதை எதன் மூலம் அறிய முடியும்? அதற்கு அதிவீரராம பாண்டியன் ஒரு வழியைக் காட்டியுள்ளார்.

ஒருவன் குற்றம் இல்லாத சொற்களைத் தெளிவாகப் பேசுவதிலிருந்தே அவன் கல்வி கற்றவன் என்பதை அறிந்து கொள்ளமுடியும் என்று இந்த அடி தெரிவிக்கிறது.

3. **செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்**

செல்வம் பெற்றவர்களுக்கு அழகு தன் செழுமையான சுற்றத்தாரை (ஆலம் விழுது போல்) தாங்குதல்.

4. **வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும்**

வேதம் ஓதுதலும் ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்து வாழ்தலும் வேதம் படித்த பார்ப்பனருக்கு அழகு.

5. **மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை**

செங்கோல் முறைமை தவறாமல் வாழ்தல் நாட்டை ஆளும் மன்னருக்கு அழகு.

நீதியானது செவ்விய கோல்போன்றிருத்தலின், அது செங்கோல் எனப்படும். தமது நாட்டை நீதியுடன் ஆளாதவர் அரசராகார் என்பதாம்.

6. **வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல்**

வாணிகம் செய்யும் வைசியருக்கு அழகு வளரும் பொருளை மேலும் மேலும் சேர்த்தல்.

7. **உழவர்க்கு அழகு ஏர்உழுது ஊண் விரும்பல்**

உழவர்க்கு அழகு நிலத்தை உழுது விளைச்சலை உண்ணல்.

8. **மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்**

அரசனுக்கு அமைச்சராக விளங்குபவருக்கு அழகு, அரசருக்கு எதிர்காலத்தில் வரவிருப்பதை முன்கூட்டியே அறிந்து அரசருக்குத் தெரிவித்தல்.

**9. தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை**

படைத்தலைவனுக்கு அழகு பகையைக் கண்டு அஞ்சாமையும் ஆளுமைத் திறனும்.

**10. உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்**

உணவு உண்ணுதலுக்கு அழகு விருந்தினரைப் பேணி அவரோடு சேர்ந்து உண்ணுதல்.

**11. பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல்**

பெண்களுக்கு அழகு எதிர்த்துப் பேசாமல் இருத்தல்.

**12. குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல்**

குடும்பப் பெண்ணுக்கு அழகு கணவனைப் பாதுகாத்தல்.

**13. விலை மகட்கு அழகு தன் மேனி மினுக்குதல்**

விலைமகளுக்கு அழகு ஒப்பனையால் தன் மேனியை மினுக்கிக்கொள்ளுதல்.

பொதுமகளுக்கு அழகாவது, தன் உடம்பினை மின்னச் செய்தல், பொருள் கொடுப்பார்க்கு உரியளாதலின் பரத்தை விலை மகள் எனப்படுவாள்.

**14. அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல்**

அறிஞர்க்கு அழகு கற்கவேண்டியனவற்றைக் கற்று, உணர்ந்து, வெளிக்காட்டிக் கொள்ளாமல் அடக்கத்துடன் வாழ்தல்.

**15. வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை**

ஏழைகளுக்கு அழகு வறுமை வாட்டும்போது ஒழுக்கம் தவறாமல் செம்மையாக வாழ்தல்.

தேம்படு பனையின் திரள் பழத்து ஒரு விதை

வானுற ஓங்கி வளம் பெற வளரினும்

16.

**தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை**

**வானுற வோங்கி வளம்பெற வளரினும்**

**ஒருவருக்கு இருக்க நிழல் ஆகாதே**

பனைமரத்தின் பழம் திரண்டு பெரியதாக இருக்கும். அதன் விதையும் பெரிதாக இருக்கும் அந்த விதையிலிருந்து வளரும் பனைமரமும் வானளாவ ஓங்கி வளரும். பனைமரம் உயரமாக வளர்ந்தாலும் அதன் நிழலில் ஒருவர் கூடத் தங்க இயலாது. இந்தப் பனைமரத்தைப் போல, செல்வம் மிகுதியாக உடையவராக இருந்தாலும், பிறருக்கு உதவும் மனப்பான்மை இல்லாதவர்கள் உதவி செய்ய மாட்டார்கள்.

பிறருக்கு உதவுவதற்கும் உதவாமல் இருப்பதற்கும் செல்வம் தேவை தான் என்றாலும் அது மட்டுமே அடிப்படை ஆகாது. ஏனெனில் பிறருக்கு உதவும் மனம் வேண்டும் என்னும் கருத்தை வெற்றிவேற்கை தெளிவாக உணர்த்தியுள்ளது.

17. **தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை**

**தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்**

**நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை**

**அணிதேர் புரவி ஆள் பெரும் படையொடு**

**மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே**

மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து வாழவேண்டும். உதவியின் சிறப்பை ஔவையார் மூதுரையில் தெரிவித்துள்ளார்.

உதவி செய்வதற்கு மிகுதியான பொருள் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பொருள் குறைவாக இருந்தாலும் நிறைந்த மனம் இருந்தால் போதும் என்பதை வெற்றிவேற்கை அறிவித்துள்ளது. என்பதே அப்பாடல் ஆகும். இந்தப் பாடலில் உதவியின் சிறப்பு வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. உதவியின் சிறப்பை விளக்கும் ஓர் உவமை மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. அந்த உவமையைக் கண்முன் காட்சியாக விரியும் வகையில் தெளிவாக விளக்கியுள்ளார் அதிவீரராம பாண்டியன்.

நன்கு வளர்ந்த ஆலமரத்தில் ஆலம்பழங்கள் கனிந்து இருக்கும். அவற்றின் உள்ளே சிறிய விதைகள் இருக்கும். அந்த விதைகள் சிறிய மீனின் முட்டையை விடவும் அளவில் சிறிதாக இருக்கும். ஆனால் அந்த விதை மரமாக வளர்ந்து பெரிய ஆலமரமாக நிற்கும்.

அந்த ஆலமரத்தின் நிழலில் யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட் படை என்னும் நால்வகைப் படையைக் கொண்ட மன்னனும் தங்க முடியும். அதைப்போல, குறைந்த அளவு செல்வம் கொண்டவர்களாக இருந்தாலும் மனம் இருந்தால் பிறருக்கு உதவ முடியும்.

**18. பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்**

உருவத்தில் பெரியவராக இருப்பவரெல்லாம் பெரியவர்கள் இல்லை.

பெரியோர் என்பதற்கு வயதிற் பெரியவரென்றும், செல்வத்திற் பெரியவரென்றும் பொருள் கூறினாலும் பொருந்தும். அறிவினாலும், பிறர்க்கு உதவி செய்தல் முதலியவற்றாலும் பெரியவரே பெருமையுடையவர் என்க. பெரியரும் என்பதிலுள்ள உம்மை பின்வரும் சிறியவரும் என்பதைத் தழுவியிருக்கிறது.

**19. சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்**

உருவத்தில் சிறியவராக இருப்பவரெல்லாம் சிறியவர்கள் இல்லை.

உருவத்தாற் பெரியவரெல்லாரும் பெருமையுடையவராகார்.

**20. பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர்**

நாம் பெற்ற எல்லா பிள்ளைகளுமே பிள்ளைகளாக இருக்க மாட்டார்கள்.

**21. உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர்**

எல்லா உறவினரும் உண்மையில் உறவினர் இல்லை. துன்பங்களில் ஈடுபட்டிருக்கும் சுற்றத்தாரே உறவினா் என்று சொல்லுவதற்குத் தகுதியுடையோர் என்க.

**22. கொண்டோ ர் எல்லாம் பெண்டிரும் அல்லர்**

மணம்புரிந்து கொண்ட எல்லாரும் மனைவிகள் அல்ல. கணவன் குறிப்பறிந்து பணிசெய்து நடப்பவளே மனைவியென்று சொல்லுவதற்குத் தகுதியுடையவள் என்க. பெண்டிரும் என்பதிலுள்ள உம்மை மேல்வந்த பிள்ளைகள், உறவினர் என்பவற்றைத் தழுவியது.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | நட்பின் மூலம் ஏற்படும் சிறிய தவறுகளை எவ்வாறு பொறுத்தல் வேண்டும் என்பதைப் பற்றி கூறுக. | K1 | CO1 | PO4 |
| 2 | அறிவுடைமை என்ற அதிகாரத்தில் கூறப்படும் நிகழ்வுகளை விவரி. | K4 | CO4 | PO2 |
| 3 | .செல்வம் நிலையாமை உடையது என்பதைப் பற்றி விளக்குக. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K6 | CO2 | PO1 |
| 4 | செல்வம் நிலையாமை உடையது என்பதை விளக்கி அதனால் அதை பலருக்கும் உதவ வேண்டும் என்று நாலடியாரின் வழி நின்று ஆராய்க. | K4 | CO3 | PO2 |
| 5 | நாலடியார் பற்றி கட்டுரை வரைக. | K2 | CO5 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பிறருக்கு உதவி வாழவேண்டும் என்று நாலடியார் கூறும் அறக்கருத்தினைப் பறிற எடுத்துரைக்க | K1 | CO1 | PO4 |
| 2 | பொருள் .ல்லாமல் வாழமுடியாது என்பதை நாலடியார் கூறும் முறையினைப் பற்றி விவரி | K3 | CO2 | PO5 |
| 3 | வறுமையினால் ஏற்படும் அச்சதை எவ்வாறு போக்க வேண்டும் என்பதைப் பற்றி நாலடியார் கூறும் கருத்தை தெரிவு செய்க. | k5 | CO1 | PO2 |
| 4 | ஒரு மனிதனுக்கு மானம் என்பது எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றி கூறுக. | K3 | CO4 | PO1 |
| 5 | அறிவு இல்லாதவன் செய்யக் கூடிய செயலினைப் பற்றி விவரி. | K2 | CO3 | PO3 |

# அலகு - 5

# உலகநாதர் இயற்றிய உலகநீதி

உலகநீதி என்ற நீதிநூல் உலகநாதர் என்ற புலவரால் எழுதப்பட்டுள்ளது, இந்நூலின் இறுதிவரிகள் இயற்றிய புலவரின் பெயரைத் தருகின்றன. பதின்மூன்று ஆசிரிய விருத்தப்பாக்களைக் கொண்ட இந்த நூலின் நோக்கம், உலக மக்களுக்குப் பொதுவான நீதிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது. பாக்களின் ஒவ்வொரு அடியும் ஒரு நீதியை அறிவுறுத்துகிறது. பாடல் வரிகளின் மூலம் உலகநாதர் ஒரு முருகபக்தர் என்பது மட்டுமே தெரிகிறது. இத்தகவலைத் தவிர இவரைப்பற்றிய பிற தகவல்களோ, காலமோ, வரலாறோ அறியக்கூடவில்லை. தமிழிலக்கியம் தரும் நீதி நூல்களின் தொகுப்பில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்த நூல்களுள் உலகநாதர் இயற்றிய உலகநீதியும் ஒன்று.

நீதி என்ன என்பதை அனைவரும் புரிந்து கொள்வது இன்றியமையாததாகிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் விளக்க உரையின்றி அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய பாடல் வரிகளை பள்ளிச் சிறுவர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதியுள்ளார் உலகநாதர். ஒலி நயத்தோடு பாடவும் அதனால் மனதில் இருத்தவும் கூடிய வரிகளைக் கொண்ட பாடல்களாக இவை விளங்குகின்றன. உலகநீதியைப் பள்ளியில் படித்த நினைவில்லையே என்று வியப்பவர்களுக்கு ‘‘ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம், ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்’’ என்ற வரிகள் சட்டென இப்பாடல் படித்ததை நினைவிற்கு கொண்டு வந்துவிடும்.

**உலகநீதி புராணத்தை உரைக்கவே**

**கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு**

என்ற இரு இறைவணக்க வரிகளுடன் துவங்கி 13 ஆசிரிய விருத்தப்பாக்களும் தொடர்கின்றன. ஒவ்வொரு விருத்தப்பாவும் எட்டு வரிகள் என்ற வீதத்தில் (13 X 8) 104 வரிகளையும், பிள்ளையாரிடம் இந்த உலகநீதிபுராணத்தைப் பாட அருள் பெற வேண்டி வணங்கும் இரு காப்பு வரிகளுடன் சேர்த்து முழுப் படைப்பும் 106 வரிகள் மட்டும் கொண்டது. மிகச் சுருக்கமாக உலகநாதர் உலகிற்கு சொல்ல விரும்பபிய நீதிகள் அனைத்தும் இவற்றுள் சொல்லப்பட்டுவிடுகின்றன.

**ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்**
**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்**
**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்**
**வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்**
**போகாத இடந்தனிலே போக வேண்டாம்**
**போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்**
**வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்**
**மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே**

**விளக்கம்**

கல்வி கற்காமல் வீண் பொழுது போக்கக்கூடாது. பிறர் மீது கூறக்கூடாது. பெற்றெடுத்த தாயை (தந்தையை) மறக்கக் கூடாது. தீயவர்களுடன் சேரக் கூடாது. தகாத இடங்களுக்கு செல்லக்கூடாது. ஒருவர் இல்லாத போது, அவரைப் பற்றிக் குறை சொல்லக் கூடாது.

வலிமை மிக்க குறவருடைய மகளான வள்ளியின் மணவாளனை மயில் வாகனனை முருகப் பெருமானைப் போற்றவாய் நெஞ்சே.

**பாடல்: 1**

**நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்**

**நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்**

**நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்**

**நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்**

**அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்**

**அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம்**

**மஞ்சாரும் குறவருடை வள்ளிபங்கன்**

**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே**

**விளக்கம்**

மனம் அறிந்தே பொய் கூறக்கூடாது. நிலையில்லாதது என்று தெரிந்த காரியத்தை நிலை நிறுத்த முயலக் கூடாது. நஞ்சுடைய பாம்புடன் விளையாடக் கூடாது. பண்பு இல்லாதவரோடு பழகக்கூடாது. ஒருவரும் செல்லாத வழியில் தனியாக செல்லக் கூடாது. பிறர் கெடுவதற்கு நாம் காரணமாக இருக்கக் கூடாது.

மேகம் தவழ்கின்ற மலை நாட்டின் மகளான வள்ளியின் மணவாளனை மயில் வாகனனாகிய முருகப் பெருமானைப் போற்றுவாய் நெஞ்சே.

**பாடல்: 2**

**மனம்போன போக்கு எல்லாம் போக வேண்டாம்**

**மாற்றானை உறவு என்று நம்ப வேண்டாம்**

**தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்**

**தருமத்தை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்**

**சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்**

**சினந்து இருந்தார் வாசல் வழிச் சேர வேண்டாம்**

**வனம் தேடும் குறவருடை வள்ளிபங்கன்**

**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே**

**விளக்கம்**

மனம் விரும்புவதை எல்லாம் செய்யக் கூடாது. நமது நெறிகளுக்கு மாறாக இருப்பவனை உறவு என்ற கொள்ளக் கூடாது. பொருளைத் தேடிச் சேர்த்து. அதை அனுபவிக்காமல் பாதுகாக்கக் கூடாது. நமக்கென்ற உள்ள தர்மத்தை மறக்கக் கூடாது. துன்பத்தில் முடிகின்றபடி கோபம் கொள்ளக் கூடாது. கோபத்துடன் இருப்பவரது வழியில் செல்லக் கூடாது.

வனத்தில் விலங்குகளைத் தேடி திரிகின்ற குறவர் மகளான வள்ளியின் மணவாளனை மயில் வாகனனாகிய முருகப் பெருமானைப் போற்றுவாய் நெஞ்சே.

**பாடல்: 3**

**குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்**

**கொலை களவு செய்வரோடு இணங்க வேண்டாம்**

**கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்**

**கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்**

**கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்**

**கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்**

**மற்று நிகர் இல்லாத வள்ளிபங்கன்**

**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே**

**விளக்கம்**

எப்போதும் பிறரிடம் குற்றங்களையே பார்க்கக் கூடாது. கொலை, திருட்டு செய்பவர்களுடன் சேரக் கூடாது. படித்தவர்களை இகழக் கூடாது. பிறன் மனைவியை நினைக்கக் கூடாது. அரசாட்சி செய்பவர்களோடு வாதம் செய்யக் கூடாது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது.

வள்ளி மணவாளனை மயில் வாகனனை நிகரில்லாத முருகப் பெருமானைப் போற்றுவாய் நெஞ்சே.

**பாடல்: 4**

**வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்**

**மனையாளை குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்**

**வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்**

**வெஞ்சமரில் புறம் கொடுத்து மீள வேண்டாம்**

**தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்**

**தாழந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்**

**வாழ்வாரும் குறவருடைய வள்ளி பங்கன்**

**மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே**

**விளக்கம்**

மனையாளோடு கூடி வாழாமல் பிற பெண்களைத் தேடி அலையக் கூடாது. மனைவியைக் குறை கூறக்கூடாது. தீய பழக்கங்களில் விழுந்து விடக் கூடாது. கடும் போரில் பின்வாங்கி ஒடக்கூடாது. கீழான குணத்தை உடையவர்களோடு சேரக்கூடாது தன் நிலையில் இருந்து தாழ்ந்தவர்களைக் குறை கூறக்கூடாது.

பெருவாழ்வு வாழும் குறவர் மகளான வள்ளி மணவாளன் மயில் வாகனனை முருகப் பெருமானை போற்றுவாய் நெஞ்சே.

## ஸ்ரீகுமர குருபரர்

## நீதிநெறி விளக்கம்

ஸ்ரீகுமர குருபர் ஸ்வாமிகளால் எழுதப்பட்ட நூல் நீதிநெறி விளக்கம் ஆகும். இதில் கடவுள் வாழ்த்துப் பாடலையும் சேர்த்து 102 பாடல்கள் உள்ளன. இவற்றுள் 75 பாடல்கள் தனி மனித ஆளுமைகளை எடுத்துரைக்கும் தன்மையில் அமைந்துள்ளன. அதாவது தனி மனிதனுக்குரிய நீதிகளை எடுத்துரைத்து அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்க இந்நூல் முயல்கிறது.

### கடவுள் வாழ்த்துப் பாடல்

**நீரில் குமிழி இளமை நிறை செல்வம்**
**நீரில் சுருட்டு நெடும் திரைகள் நீரில்**
**எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே**
**வழுத்தாதது எம்பிரான் மன்று**

**விளக்கம்**

நீரில் தோன்றும் குமிழி போல் ஒருவரின் இளமைக்காலம் மறையும். ஒருவரிடம் நிறைந்திருக்கும் செல்வம் நீரில் சுருண்டு கரையேறித் திரும்பும் அலைகள் போல வரும், போகும். ஒருவரின் உடம்பு நீரில் எழுதிய எழுத்தைபெ போல மறையும்.

**பாடல்: 1**

**"அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்**
**புறங்கடை நல் இசையும் நாட்டும் உறும் கவல் ஒன்று**
**உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கு இல்லை**
**சிற்றுயிர்க்கு உற்ற துணை"**

**விளக்கம்**

கல்வியானது, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் தரும். புறத்தே ஒதுங்கி நின்றாலும் நல்ல புகழைப் பெற்றுத் தரும். கவலை வந்து துன்பறும்போது கைகொடுத்து உதவும். எனவே நம் சிற்றுயிர்க்கு உற்ற துணை கல்வியைக் காட்டிலும் வேறொன்றும் இல்லை.

**பாடல்: 2**

**"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்**
**மடம் கொன்று அறிவு அகற்றும் கல்வி நெடும் காமம்**
**முன் பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றூஇழாய்**
**பின் பயக்கும் பீழை பெரிது"**

**விளக்கம்**

கல்வி இன்பம், தொடக்கத்தில் கற்கும்போது துன்பமாக இருக்கும். பின்னர் அறியாமையமையைப் கொன்று அறிவை விரிவடையச் செய்யும் இன்பம் பயக்கும்.

காம இன்பம், தொடக்கத்தில் விந்து நீர் இறங்கும்வரையில் நீண்ட இன்பம் பயக்கும். பின்னர் துன்பம் பயக்கும்.

**பாடல்: 3**

**“கல்வியே கற்புடைப் பெண்டிர் அப் பெண்டிர்க்குச்**
**செல்வப் புதல்வனே ஈர்ம் கவியாச் சொல் வளம்**
**மல்லல் வெறுக்கையா மாண் அவை மண்ணுறுத்தும்**
**செல்வமும் உண்டு சிலர்க்கு”**

**விளக்கம்**

ஒருவனுக்குக் கற்புடைய மனைவி கல்விதான். அந்தக் கல்விப் பெண்ணுக்குப் புதல்வன் அவர் அந்தக் கல்வித் திறத்தால் பாடும் கவிதை. அந்தக் கவிதைக்குச் செழிப்புத் தரும் செல்வம் சொல்வளம். அந்தச் சொல்வளம் அவனை மாட்சிமை மிக்கவர் அவையில் நீந்தும்படிச் செய்யும். சிலருக்குப் பொன்முடிப்பும் தரும்

**பாடல்: 4**

**“எத்துணைய ஆயினும் கல்வி இடம் அறிந்து**
**உய்த்துணர்வு இல் எனில் இல் ஆகும் உய்த்துணர்ந்தும்**
**சொல்வன்மை இன்று எனின் என் ஆம் அ.்.து உண்டேல்**

**பொன் மலர் நாற்றம் உடைத்து"**

**விளக்கம்**

எவ்வளவு பெரிய அளவினதாகக் கல்வி கற்றிருந்தாலும், இடம் அறிந்து கற்றவற்றை உணர்ந்துகொள்ளாவிட்டால் அந்தக் கல்வி இல்லாத ஒன்றாகவே இருக்கும். உய்த்து உணர்ந்துகொண்டாலும் பிறர்ருக்கு எடுத்துச் சொல்லும் வல்லமை இல்லாவிட்டால் என்ன பயன். கல்வியும், உணர்ந்து சொல்லும் வலிமையும் இருக்குமாயின், பொன்னால் செய்த மலருக்கு மணமும் இருப்பது போல் நலம் பயக்கும்.

பொன்னால் செய்தமலருக்கு மணம் இல்லை. இருப்பது போல் என்று கூறியதால், இது 'இல்பொருள் உவமை'.

**பாடல்: 5**

**அவை அஞ்சி மெய் விதிர்ப்பார் கல்வியும், கல்லார்**

**அவை அஞ்சா ஆகுலச் சொல்லும். தவை அஞ்சி**

**ஈத்து உண்ணார் செல்வமும், நல்கூர்ந்தார் இன் நலமும்,**

**பூத்தலின் பூவாமை நன்று.**

**விளக்கம்**

இன்னது இன்னாரிடத்தில் இருந்தும் பயனில்லை யென்று கூறுகின்றார்.

மெய் விதிர்ப்பார் - உடல் நடுங்குவார். ஆகுலச் சொல் - பொருளற்றனவான ஆரவாரச் சொற்கள். நவை அஞ்சி - செய்யத் தக்கவற்றைச் செய்யாமையாகிய குற்றம் நேர்தலை அஞ்சி. ஈத்துண்ணார் - பிறருக்கு அளித்து எஞ்சியவற்றை உண்ணாதவர். ஈத்தென்றது உண்ணாரென்பதன் முதனிலையோடு

முடிந்தது. இல் நலம் - இல் வாழ்க்கையின் நன்மை. பூத்தலிற் பூவாமை நன்று - உண்டாதலைக்காட்டிலும் இல்லாதிருத்தல் நன்று.

**பாடல்: 6**

**கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்,**
**மலரவன் வண் தமிழோர்க்கு ஒவ்வவான்: - மலரவன் செய்**
**வெற்று உடம்பு மாய்வனபோல் மாயா, புகழ் கொண்டு**
**மற்று இவர் செய்யும் உடம்பு.**

**விளக்கம்**

புலவர் பெருமை கூறப்படும்.

முகமென்றது நாவை. மலரவன் - பிரமன். வண் தமிழோர் - நூற் செல்வத்தைப் பிறர்க்கு உதவும் வண்மையுடைய தமிழ்ப் புலவர். வெற்றுடம்பு - உயிர் நீப்பின் தனக்கென ஒரு பெருமையும் இல்லாத உடம்பு. இவர் செய்யும் உடம்பென்றது நூல்களை "பல்வகைத் தாதுவி னுயிர்க் குடல் போற்பல, சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின், வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள்" என்று நன்னூலார் புலவரது படைப்பை உதலோடொற்றிடுதல் இங்கே நினைத்தற்குரியது. பிரமனைக் காட்டிலும் புலவர் தம் நெஞ்சிற்கு அணியராதலின் இவரெனச் சுட்டினார். மாயாவென்றது நிலைபெறுமென்னும் பொருளில் நின்றது. புகழ் கொண்டு நிலைபெறுமென்றவாறு.

புலவர்களைப் போலவே கலைமகளைத் தன்பாற் பெற்ற பிரமனது படைப்பு, புகழைப் பெறாமலே அழிந்துவிடும் புலவர் படைப்போ புகழைப் பெறுதலோடு அழியாமலும் நிற்குமென்றார்.

இது வேற்றுமையணி.

**பாடல்: 7**

**நெடும் பகல் கற்ற, அவையத்து, உதவாது**

**உடைந்துளார் உட்குவரும் கல்வி, கடும் பகல்**

**ஏதிலான்பால் கண்ட இல்லினும் பொல்லாதே**

**தீது என்று நீப்பு அரிதால்.**

**விளக்கம்**

சொல்வன்மையில்லாரது கல்வி பயனின்றென்று கூறுகின்றார்.

நெடும்பகற் கற்ற - பல நாட்கள் கற்றனவாகி. அவையம் - அறிஞர் சபை. உதவாது - சொல்லுதற்குப் பயன்படாமல். உடைந்துளார் - பின்னடைந்தோர். உட்குவரும் - அச்சத்தைத் தரும். கல்வி யுடையாரது இயல்பைக் கல்வியின் மேலேற்றிக் கூறினார். கடும்பகல் - யாவரும் காணலாகும் பகலில் 'பட்டப் பகலில் என்னும் வழக்கறிக. ஏதிலான் - அயலான். இல் - இல்லாள். தீதென்று நீப்பரிது - அம்மனைவி உதவாஸேன்று அகற்றி விடுதலைப்போலக் கல்வி தீயதென்று நீத்தல் அரிது ஆதலின் அவளைக் காட்டிலும் பொல்லாதென்றார். கற்ற கல்வி பிறவிதோறும் தொடருமாதலின் நீப்பரிதாயிற்று.

**பாடல்: 8**

**வருந்தித் தாம் கற்றன ஓம்பாது, மற்றும்**

**பரிந்து சில கற்பான் தொடங்கல், - கருத் தனம்**

**கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு, அரிப்பு அரித்து ஆங்கு,**

**எய்த்துப் பொருள் செய்திடல்.**

**விளக்கம்**

புதியவற்றைக் கற்றலினும் கற்றவற்றைப் பாதுகாத்தல் சிறந்ததென்பர்.

ஓம்பாது - சிந்தித்தல் முதலியவற்றாற் பாதுகாவாமல். பரிந்து - வருந்தி. கருந்தனம் - பெரும்பொருள். கைத்தலத்தனவாகிய கருந்தனத்தைக் கருமை - பெருமை. உய்த்துச் சொரிந்திட்டு - மதியாமற் போகவிட்டுவிட்டு. அரிப்பரித்தல் - கடைவீதி முதலிய இடங்களில் உள்ள புழுதியை ஏதேனும் சிறு பொருள் கிடைப்பது கருதிப் பல நேரம் கொழித்தல் இதனைச் செய்வார் அரிப்பரென்று வழங்கப்படுவர். எய்த்து - வருந்தி. "மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை" (முதுமொழிக்.1:3) "படியில் கல்வி விரும்பினோன் பாடம் போற்று மதுபோல" (பிரபு. மாயையுற்பத்தி. 49.)

**பாடல்: 9**

**எனைத் துணையவேனும், இலம்பாட்டார் கல்வி**
**தினைத் துணையும் சீர்ப்பாடு இலவாம் - மனைத்தக்காள்**
**மாண்பு இலள் ஆயின், மணமகன் நல் அறம்**
**பூண்ட புலப்படாபோல்.**

**விளக்கம்**

இதனால் வறுமையாறர் கல்வி சிறப்படையாதென்கின்றார்.

எனைத்துணையவேனும் - எவ்வளவு பெருக்கத்தை உடையனவாயினும். இலம்பாட்டார் - வறுமையை யுடையார். சீர்ப்பாடு - சிறப்புண்டாதல் "வறுமையிற் கல்வி போலப், புலப்படா மருங்கு னல்லார்" (திருவிளை. 4:58.) மனைத்தக்காள் - மனைவி மாண்பு - நற்குண நற்செய்கைக் "மனைத்தக்க மாண்புடையளாகி"

(குறள். 51) மணமகன் - அம்மனைவியின் கணவன். நல்லறம் பூண்ட - மேற்கொண்டனவாகிய நல்லறங்கள். புலப்படாபோல் - வெளிப்படாமைபோல.

## அறநெறிச் சாரம்

## ஆசிரியர்: முனைப்பாடியார்

சமண சமயத்தைச் சார்ந்தவராக காணப்படும் முனைப்பாடியார் எனும் நல்லாசிரியரால் இயற்றப்பெற்ற இவ்வறநூல். சமூகத்திற்கான சீர்கருத்துகளை நல்ல மேற்கோள்களால், எளிமையான சொற்களால் விளக்குகின்றன. திருக்குறளின் சொல்லாட்சிகள் பற்பல இதில் காணப்படுகின்றன. புரத்திரட்டு எனும் பழம் தொகுப்பு நூலில் இதன் கண்ணதான 34 பாடல்கள் உள்ளைம இத்திரட்டின் அக்காலத்திய சிறப்பு போதரும்.

226 வெண்பாக்களால் ஆன இன்னுல் பெயர் கொண்டு ஆசிரியர் “முனைப்பாடி“ எனும் இடத்தைச் சார்ந்தவர் ஆகேவண்டும். இவ்வாறு வழங்கும் அரசாளும் நாட்டுப் பிரிவினையை சேக்கிழார் தன் திருத்தொண்டர் புராணத்தில் இடங்களில் குறித்து நாவுக்கரசர் சுந்தரர் எனும் இரு தேவார ஆசிரியர்களை

ஈன்ற பீடுடைய நாடாக காட்டுகின்றார். இ∴து தற்கால தமிழ்நாட்டு பிரிவினதான கடலூர் விழுப்புரம் மாவட்டத்தின் பகுதிகளைக் கொண்டைமயும்.

## கடவுள் வாழ்த்து

**பாடல்: 1**

**தாவின்றி எப்பொருளுங் கண்டுணர்ந்து தாமரைப்**

**பூவின்மேற் சென்றான் புகழடியை - நாவின்**

**துதித்தீண் டறநெறிச் சாரத்தைத் தோன்ற**

**விரிப்பன் சுருக்காய் விரைந்து**

**விளக்கம்**

குற்றம் இல்லாமல், எப்பொருளும் ஆராய்ந்து அறிந்து, தாமரைப் பூவின் மேல்-தாமரை மலரின் மேல், சென்றான்-சென்ற அருகனது, புகழடியை நாவினால் புகழ்ந்து, இங்கே அறநெறிச்சாரமாகிய இந்நூலை விளங்க, மிக விரைவாக, விரித்துக் கூறுவேன்.

**பாயிரம் அறவுரையின் இன்றியமையாமை**

**பாடல் : 2**

**மறவுரையும் காமத் துறையும் மயங்கிப்**

**பிறவுரையும் மல்கிய ஞாலத்து - அறவுரை**

**கேட்கும் கருத்துடை யோரே பிறவியை**

**நீக்கும் திருவுடை யார்**

**விளக்கம்**

பாவத்தை வளர்க்கின்ற நூல்களும், ஆசையை வளர்க்கும் நூல்களும், பிறவற்றை வளர்க்கும் நூல்களும் கலந்து நிறைந்த இந்த உலகத்தில்

அறத்தை வளர்க்கின்ற நூல்களைக் கேட்கின்ற நல்ல பேற்றையுடையவரே பிறப்பைப் போக்குதற்கேற்ற வீட்டு உலகத்தை உடையவர் ஆவர்.

**அறத்துக்கு இன்றியமையா நான்கு**

**பாடல்: 3**

**உரைப்பவன் கேட்பான் உரைக்கப் படுவது**
**உரைத்தத னாலாயய பயனும் - புரைப்பின்றிய**
**நான்மையும் போலியும் நீக்167அவை நாட்டல்**
**வான்மையின் மிக்கார் வழக்கு**

**விளக்கம்**

அறத்தை உரைப்பவனையும், அந்த அறத்தைக் கேட்பவனையும் உரைக்கப்படும் அறத்தையும் கூறியதால் ஏற்படும் பயனையும் குற்றம் இல்லாமல் ஆராய்ந்து, அந்நான்கினுள்ளும் குற்றமானவற்றை அகற்றி, (நல்லனவற்றை) நிலைபெறும்படி செய்தல் உயர்ந்தவர் கடனாகும்.

**அறம் கூறுபவனின் இயல்பு**

**பாடல்: 4**

**அறம்கேட்டு அருள்புரிந்து ஐம்புலங்கள் மாட்டும்**
**இறங்காது இருசார் பொருளும் - துறந்தடக்கி**
**மன்னுயிர்க்கு உய்ந்துபோம் வாயில் உரைப்பானேல்**
**பன்னுதற்குப் பாற்பட்ட வன்**

**விளக்கம்**

அறநூல்கள் பலவற்றையும், கற்றறிந்தவனையும் கருணை உடையவனையும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பெறிகளால் அனுபவிக்கப்படும், இன்பம் துய்க்கப் புகாதவனாயும் அகப்பற்று - புறப்பற்று ஆகிய இரண்டையும் விட்டவனாயும் அடக்கம் கொண்டவனாயும் உலகில் நிலை பெற்ற உயிர்களுக்கு வீடு பேற்றுக்குரிய வழியினை, உரைப்பவன் ஒருவன் இருப்பானாயின் அத்தகையவன் அறம் உரைக்க தகுதியானவன்.

**அறம் உரைகத்ததற்குத் தகுதி அற்றவர்**

**பாடல்: 5**

**பிள்ளை பேய்ப்பித்தன் பிணியாளன் பின்நோக்கி**
**வெள்ளைக்களி விடமன் வேட்கையால் - தெள்ளிப்**
**புகைக்ககப் பொரு ளுணர்வான் என்றிவரே நூலை**
**உரைத்தற்கு உரிமை யிலாதார்**

**விளக்கம்**

கற்க வேண்டியதைக் கல்லாத சிறுவனும், பேயால் பிடிக்கப்பட்டவனும், பித்துக்கொண்டவனும், நோயாளியும், தொலை நோக்கம் இல்லாதவனும், அறிவற்றவனும், கள் குடிப்பவனும், அயலவர்க்குத் துன்பம் செய்பவனும், குற்றம் உடையவனவற்றையே ஆராய்ந்து அதனைச் சிறந்த பொருள் எனக்கொள்பவனும், ஆகிய இவர்களே அறநூலைக் கூறுதற்கு உரிமை இல்லாதவர் ஆவார்.

**அறம் கேட்பவர் தகாதவர்**

**பாடல்: 6**

**தன்சொல்லே மேற்படுப்பான் தண்டி தடிபிணக்கன்**

**புன்சொல்லே போதரவு பார்த்திருப்பான் - இன்சொல்லை**

**என்றிருந்தும் கேளாத ஏழை எனயிவர்கட்கு**

**ஆன்றவர்கள் கூறார் அறம்**

**விளக்கம்**

தான் கூறும் சொல்லையே சிறந்தது எனக் கூறுபவனும், கர்வம் உள்ளவனும் மிக்க மாறுபாடு கொண்டவனும் பிறர் கூறும் இழிவான சொற்களையே எதிர்பார்த்திருப்பவனும், இன்பம் தரும் உறுதிமொழிகளை, கேட்கக்கூடிய இடம் வாய்த்துத் கேளாத மூடனும் என்ற இவர்களுக்குப் பெரியோர்கள் அறத்தைக் கூறமாட்டார்கள்.

**அறம் கேட்பவர் இயல்பு**

**பாடல்: 7**

**தடுமாற்றம் அஞ்சுவான் தன்னை உவர்ப்பான்**

**வடுமாற்றம் அஞ்சித் தற்காப்பான் - படுமாற்றல்**

**ஒப்புரவு செய்து ஆண்டுறுதிச் சொல் சேர்பவன்**

**தப்பா;ன் தருமு ரைக்கு**

**விளக்கம்**

தான் சோர்வுபடுதற்கு அஞ்சுபவனும், பிறர்தன்னைப் புகழ்ந்து கூறும் போது அதை வெறுப்பவனும், பழி தனக்கு வராது அதற்கு அஞ்சி தன்னைப் பாதுகாத்துக்கொள்பவனும் தன்னால் இயன்ற அளவு, பிறர்க்கு உதவியைச் செய்து அந்நிலையில், சான்றோரிடம் உறுதிமொழியைக் கேட்டு அதன் வழி நடப்பவனும் ஆன ஒருவன் அறநூல் கேட்பதற்கு உரியவன் ஆவான்.

## புல்லறத்தின் இயல்பு

**பாடல்: 8**

**ஆவட்டை போன்று அறியாதாரை மயக்குறித்தி**
**பாவிட்டார்க் கெல்லாம் படுகுழியாய் - காவிட்டு**
**இருமைக்கும் ஏமம் பயவா எனவே**
**தருமத்துப் போலிகள் தாம்**

**விளக்கம்**

மரணம் அடைகின்ற நிலையில் இருப்பவரைப் போன்று அறிவற்றவரை, மயக்கம் அடையச் செய்து, விரும்பியவர்க்கெல்லாம், மிகுந்த துன்பம் தருவனவாய், துன்பம் உண்டானவிடத்து உதவுதல் இன்றி இம்மை மறுமைகளுக்கு உறுதியைத் தராதவை யாவையோ அவை அறநூல்கள் போல இருப்பினும் அறநூல்கள் அல்ல.

## நல்லறத்தின் இயல்பு

**பாடல்: 9**

**வினையுயிர் கட்டு விடின்ன விளக்கி**
**தினையனைத்தும் தீமையின் றாகி - நினையுங்கால்**
**புல்லறத்தைத் தேய்ததது உலகினொடும் பொருந்துவதாம்**

**நல்லறத்தை நாட்டு மிடத்து**

**விளக்கம்**

விளக்கவுரை ஆராயுமிடத்து நல்ல அறத்தினை நிலைநிறுத்த எண்ணினால் அந்த நல்ல அறமானது வினையும் உயிரும் பந்தமும் வீடுபேறும் ஆகிய இத்தகையவற்றை நன்கு உணர்த்தி திணை அளவும் குற்றம் அற்றதாய்ப் பாவச் செயல்களை அழித்து உயர்ந்தவர் ஒழுக்கத்தோடும் பொருத்தமுற்றதாகும்.

**அறக் கேள்வியின் பயன்**

**பாடல்: 10**

**புல்ல உரைத்தல் புகழ்தல் பொருளீதல்**
**நல்லரிவ ரென்று நட்பால் - சொல்லின்**
**அறம் கேள்வியால் ஆம்பய னென்றுரைப்பார்**
**மறங்கேள்வி மாற்றி யவர்**

**விளக்கம்**

கூறுமிடத்துப் பாவத் தன்மையை அறநூல் கேட்டதால் மாற்றிய சான்றோர், பலரும் தம்மையடையுமாறு கூறுதலும் பலரால் புகழப்படுதலும், பொருள் கொடுக்கப்படுதலும், இவர் நல்லவர் என எண்ணி, நண்பராய் வந்தடைதலும் ஆன இவற்றை அறநூல்களைக் கேட்பதால் உண்டாகும் பயன் என்று சொல்லுவர்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பழமொழி நானூறு பற்றி குறிப்பு வரைக. | K2 | CO5 | PO4 |
| 2 | நாண்மமடிக்கடிகைப் பற்றி கட்டுரைக்க | K4 | CO2 | PO2 |
| 3 | சிறுபஞ்ச மூலம் நூரிணைப் பற்றி குறிப்பு வரைக. | K5 | CO2 | PO1 |
| 4 | ஏலாதி பற்றி வரையறை தருக. | K4 | CO3 | PO2 |
| 5 | நிலையாமை பற்றி முதுமொழிக் காஞ்சி கூறும் கருத்தை எழுதுக. | K1 | CO3 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பழமொழி நானூறில் உம் பாடப்பகுதியில் கூறும் அறக்கருத்தை ப் பற்றி விவரி. | K3 | CO1 | PO4 |
| 2 | சிறுபஞ்ச மூலம் கூறும் வாழ்க்கையான அறக்கருதிதைக் கூறுக. | K3 | CO4 | PO5 |
| 3 | மனித உழுக்கத்தைப் பற்றி ஆசாரக் கோவை வழி நின்று ஆராய்க. | k3 | CO5 | PO2 |
| 4 | .ஏலாதியில் கூறும் வாழ்வியல் நெறிகளைப் பற்றி விவரி | K2 | CO4 | PO1 |
| 5 | முதுமொழிக் காஞ்சியில் சிறந்த பத்து கூறும் கருத்திணைப் பற்றி தெளிவு படுத்துக. | K4 | CO3 | PO3 |

**முனைவர் செ.சரவணப்பெருமாள்**

உதவிப் பேராசிரியர்,

தமிழியல்துறை,

பி.எட். தொலைநெறி தொடர்கல்வி இயக்ககம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி.

Mail ID: saravanperumalmsu@gmail.com

தொலைபேசி எண். 9047929744.

| Text Book(s) | |
|---|---|
| • | திருக்குறள்பரிமேலழகர்உரை, பழனியப்பாபிரதர்ஸ், சென்னை, நான்காம்பதிப்பு: 1994. |
| • | திருக்குறள்ஆராய்ச்சிப்பதிப்பு, பதிப்பாசிரியர்: கி.வா. ஜகந்நாதன், ராமகிருஷ்ணமிஷன்வித்யாலயம், கோயம்புத்தூர், இரண்டாம்பதிப்பு: 2004. |
| • | நாலடியார்உரைவளம், மூலமும்மூன்றுபழையஉரைகளும்அடங்கியது, முதல்பாகம், சரசுவதிமகால்நூலகம், முதற்பதிப்பு: 1953, இரண்டாம்பதிப்பு: 1990. |
| • | நாலடியார்தெளிவுரை, இரா. இளங்குமரனார், வெளியீடு: நான்காம்தமிழ்ச்சங்கம், மதுரை, முதற்பதிப்பு: 2019. |
| • | பதினெண்கீழ்க்கணக்கு (முதல்தொகுதி, இரண்டாம்தொகுதி), வெளியிடுவோர்: எஸ். ராஜம், சென்னை, முதற்பதிப்பு: 1959. |
| • | திருக்குறள்உரைவளம் – பொருட்பால், ச. தண்டபாணிதேசிகர் (தொகுப்பாசிரியர்), ஞானசம்பந்தம்பிரஸ், தருமபுரம், 1951. |
| Reference Books | |
| • | திருவள்ளுவர்அல்லதுவாழ்க்கைவிளக்கம், மு. வரதராசன், விற்பனைஉரிமை: பாரிநிலையம், சென்னை, முதற்பதிப்பு: 1948, மறுபதிப்பு: 2009. |
| • | திருக்குறள்நீதிஇலக்கியம், க.த. திருநாவுக்கரசு, சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை, முதற்பதிப்பு: 1971, மறுபதிப்பு: 1977. |
| • | அறஇலக்கியக்களஞ்சியம், க.ப. அறவாணன், தமிழ்க்கோட்டம், சென்னை, முதற்பதிப்பு: 2008, இரண்டாம்பதிப்பு: 2011. |
| • | குறள்கண்டபொருள்வாழ்வு, தி. முருகரத்தனம், மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு: 1973. |
| • | குறள்கூறும்இறைமாட்சி, தி. முருகரத்தனம், மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு: 1974. |
| • | குறள்கூறும்சமுதாயம், காமாட்சிஸ்ரீனிவாசன், மதுரைப்பல்கலைக்கழகம், மதுரை, முதற்பதிப்பு: 1975. |
| | குறளமுதம், தொகுப்பாசிரியர்: இ. சுந்தரமூர்த்தி, பொதுப்பதிப்பாசிரியர்: ம. இராசேந்திரன், வெளியீடு: தமிழ்வளர்ச்சிஇயக்ககம், சென்னை, முதற்பதிப்பு: 2000. |

| Web Sources |
|---|
| • **Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>**<br>• **Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library**<br>• **Project Madurai - www.projectmadurai.org.**<br>• **Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.**<br>• **Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.**<br>• **Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com**<br>• **Tamil Books on line- books.tamil cube.com**<br>• **Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org**<br>• **Tamil novels on line - books.tamilcube.com** |

| Expected Course Outcomes: **இப்பாடத்தைக்கற்பதால்விளையும்பயன்கள்** | |
|---|---|
| இப்பாடத்தைக்கற்பதால்பின்வரும்பயன்களைமாணவர்அடைவர். | |
| CO 1. | தமிழின்அறஇலக்கியவரலாற்றில்பரந்தநிலையிலானபுலமைபெறுதல். |
| CO 2. | திருக்குறள், நாலடியார்ஆகியவற்றின்அறக்கருத்துகளில்சிறப்புப்பயிற்சிபெறுதல். |
| CO 3. | பதினெண்கீழ்க்கணக்கின்பிறஅறஇலக்கியங்கள்முன்வைக்கும்அறக்கருத்துகளைஉணர்தல். |
| CO 4. | பதினெண்கீழ்க்கணக்கின்அறஇலக்கியங்களில்ஆழமானபுலமைபெறுதல்;<br>அறக்கருத்துகளைக்காலஉணர்வோடும்சமூகஉணர்வோடும்அணுகும்நோக்குப்பெறல். |
| CO 5. | அறஇலக்கியங்களின்வடிவம், கருத்துகள்,<br>கவிதைநலன்கள்முதலியவற்றில்சிறப்பறிவைப்பெறுதல். |

| | **PO 1** | | | | | | | | | | **PO 2** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **PO 1** | **PO 2** | **PO 3** | **PO 4** | **PO 5** | **PO 6** | **PO 7** | **PO 8** | **PO 9** | **PO 10** | **PSO 1** | **PSO 2** |
| **CLO1** | 2 | 2 | **3** | **3** | 3 | 2 | 3 | 2 | 2 | **3** | **3** | 3 |
| **CLO2** | **3** | **3** | 3 | 3 | 2 | 3 | 2 | **3** | 3 | 2 | 3 | **1** |
| **CLO3** | 2 | 2 | **1** | **3** | 2 | 3 | 2 | 2 | 2 | 3 | 2 | **3** |
| **CLO4** | 2 | 2 | **3** | **3** | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | **2** |
| **CLO5** | **3** | **3** | **3** | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 |